# கல்கி



KALKI ஜனவரி 10, 1954 4 அணா


ஒவ்வொரு நாளும் நீங்கள் அழுக்கிலிருக்கும் கிருமிகளின் அபாயத்துக் குள்ளாகிறீர்கள்
லைப்பாய் சோப்பினால் அழுக்கிலிருக்கும் கிருமிகளை கழுவிக் களையுங்கள்
நீங்கள் இந்த அபாயத்திலிருந்து உங்களைப் பாது காத்துக்கொள்ள வேண்டும்
அதன் "பாது காக்கும் நுரை" உங்கள் ஆரோக்கியத்தை காப்பாற்றுகிறது
லைப்பாய் சோப்
தினசரித் தொல்லையான அழுக்கிலிருக்கும் கிருமிகளிலிருந்து உங்களைப் பாதுகாக்கிறது
LIFEBUOY SOAP
LIFEBUOY SOAP

L. 231-50 TM

மலர் 13 | விஜய௵
இதழ் 24 | மார்கழி 26

கல்கி


1954 ஜனவரி 10

# பொருளடக்கம்



| | | | |
|---|---|---|---|
| தகுதி வாய்ந்த எதிர்க் கட்சி | (தலையங்கம்) | ... | 3 |
| சுபிட்ச இந்தியாவின் சிற்பிகள் | ... | ... | 4 |
| மானிட வர்க்கத்தை மகிழ்விக்கும் செய்தி | ... | ... | 5 |
| தென்னிந்திய சங்கீத மகாநாடு | போட்டோ : எம். டி. கணேஷ் | ... | 6 |
| பொன்னியின் செல்வன் | கல்கி | ... | 9 |
| திருத்தணியில் திருப்படி விழா | எஸ். வி. எஸ். | ... | 19 |
| பயம் நீங்கியது (பாப்பா மலர்) | குண்டுமணி | ... | 23 |
| மன்னி வந்தாள்! | ரா. பாலகிருஷ்ணன் | ... | 27 |
| கோவை தந்த சோஷலிஸ்ட் தலைவர் | ... | ... | 30 |
| அவர்கள் வேதனை | சோலை இருசன் | ... | 34 |
| வட்ட மேஜை | ... | ... | 39 |
| மனோரமா | ரமண்லால் வசந்தலால் தேசாய்-ரா.வீ. | ... | 43 |
| பொன் செய்யும் மருந்து | சங்கர் | ... | 51 |
| படித்துப் பாருங்கள்! | ... | ... | 56 |
| யோகாசன சிகிச்சை | வி. என். குமாரசாமி | ... | 59 |
| ஸ்ரீ கிருஷ்ணா ஓடு தொழிற்சாலை | ... | ... | 61 |
| தேச பக்தன் ரங்கராஜன் | வீர பாண்டியன் | ... | 62 |
| ஆர்மோனிய ரசிகர்! | ரகு | ... | 67 |
| கடவுளும் குழந்தையும் | கே. வி. எஸ். வாஸ் | ... | 70 |


"கல்கி"யில் வெளியாகும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்கள்; சம்பவங்களும் கற்பனையே.

## தாக்குப் பிடிக்குமா?




கிருஷிக்லோக் கட்சியின் பிரதிநிதியான ஸ்ரீ லச்சண்ணா ஆந்திர மந்திரி சபையிலிருந்து ராஜிநாமா செய்து விட்டார். இனி, கிருஷிக் லோக் கட்சி ஆந்திர மந்திரி சபையை எதிர்த்துத் தாக்குவதில் ஈடுபடக் கூடும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.


ராஜி
என் கண்மணி
இனிமையும்
இன்பமும் அளிக்கும்
ஓர் அழகான சித்திரம்
ஜெமினி
தயாரிப்பு
ஜனவரி 30உ முதல்
சென்னையெங்கும்
வெளிவருகிறது

கல்கி

மலர் 13 } தமிழ்த் திருநாடு தன்னைப் — பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா. —பாரதியார் { இதழ் 24

# தகுதி வாய்ந்த எதிர்க் கட்சி

உலகத்திலேயே முன்னேற்றம் அடைந்துள்ள நாடுகளில் எல்லாம் எதிர்க் கட்சி என்பது ஜனநாயக அரசியலின் முக்கிய அம்சங்களில் ஒன்ருக இருந்து வருகிறது. சர்க்கார் நிர்வாகத்தை நடத்துவோர் வழி தவறிச் செல்லும்போது அதைச் சுட்டிக் காட்டி, தவறைத் திருத்த முற்படுவதே எதிர்க் கட்சியின் இன்றியமையாத கடமையாக இருந்து வருகிறது.

எனவே, இலட்சியம் சம்பந்தப்பட்ட வரையில் சர்க்கார் கட்சிக்கும் எதிர்க் கட்சிக்கும் வேற்றுமை இருப்பதற்கில்லை. தேசத்தின் நலனும் க்ஷேமமும்தான் அவர்களுடைய பொதுவான இலட்சியமாக இருக்க வேண்டும். அந்த இலட்சியத்தை அடைவதற்கான முறைகளிலும் திட்டங்களிலும் அவர்களுக்குள் வேற்றுமை இருக்கலாம்.

எவ்வளவுதான் தேச பக்தர்களைக் கொண்ட நல்ல சர்க்காரா யிருந்தாலும், "தாங்கள் செய்வதே சரி" என்ற எண்ணம் பெரும்பாலும் சர்க்காரை நடத்துவோருக்கு உண்டாகி விடுகிறது. தங்கள் திட்டங்களிலும் முறைகளிலும் குறைபாடுகள் இருக்கக் கூடும் என்ற எண்ணமே அவர்களுக்குத் தோன்றுவதில்லை.

ஒரே கட்சியைச் சேர்ந்தவர்கள், கட்சிக் கட்டுப்பாட்டின் காரணமாக, சர்க்கார் செய்யும் காரியங்களில் குறைகள் இருந்தால் எடுத்துக் காட்ட முடிவதில்லை.

"நம்முடைய காரியங்களைக் கண்ணுங் கருத்துமாகப் பிறர் கவனிக்கிருர்கள்; குற்றங் கண்டு பிடிக்கத் தயாரா யிருக்கிருர்கள்" என்ற உணர்ச்சி இருந்தாலன்றி, எப்பேர்ப்பட்ட தேசபக்தி வாய்ந்த திறமையுள்ள மந்திரிகளும் ஆத்ம திருப்தி யடைந்து சோம்பி யிருந்து விடும் அபாயம் ஜனநாயகத்தில் உண்டு.

மந்திரிகளாக வருவோர் திறமையற்றவர்களாகவும், சுயநலக்காரர்களாகவும் இருந்து விட்டால், சொல்ல வேண்டியதில்லை. அந்த நிலைமையில் நல்லதோர் எதிர்க் கட்சி இல்லை யென்ருல், தேச நலம் அரோஹரா ஆகிப் போய் விடும்.

ஆகவே, ஜனநாயகத்தில் ஆளும் கட்சிக்கு எதிர்ப்புக் கட்சி ஏற்படுவது இன்றியமையாதது. சந்தர்ப்பம் நேர்ந்தால், அரசாங்கத்தை ஏற்று நடத்தும் யோக்கியதை வாய்ந்ததாக அந்த எதிர்ப்புக் கட்சி இருக்க வேண்டும்.

சாதித் துவேஷம், இனத் துவேஷம், சமய வேற்றுமை முதலிய அடிப்படைகளில் ஏற்படும் எதிர்ப்புக் கட்சிகளினுல் எவ்வித நல்ல பயனும் விளையாது; தீமைதான் உண்டாகும். இம்மாதிரி அடிப்படைகளில் எதிர்ப்புக் கட்சி அமைப்போர் பதவி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்ட சுயநலவாதிகளாகவே இருப்பார்கள். தங்கள் சொந்த லாபத்துக்காக நாட்டுக்குத் துரோகம் செய்ய அவர்கள் தயங்க மாட்டார்கள்.

ஆகவே, நல்ல முறையில் எதிர்ப்புக் கட்சி ஏற்படுவது என்ருல், அது அரசியல் பொருளாதாரக் கொள்கை அடிப்படையில் அமைய வேண்டும்.

இந்த உண்மைகளை யெல்லாம் மனத்தில் வைத்துக் கொண்டு பார்த்தோமானுல், இந்தியா தேசத்தில் தற்சமயம் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி நாளுக்கு நாள் பலம் பெற்று வளர்வதைக் குறித்துத் திருப்தி உண்டாகும்.

சில தினங்களுக்கு முன் அலகாபாத்தில் நடந்த பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் முதலாவது தேசிய மகாநாடு முன்னெப்போதுமில்லாத உற்சாகத்துடன் சிறப்பாக நடந்தேறியது. மகாநாட்டின் தலைவர் ஆச்சாரிய கிருபளானி தலைமை உரையில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் நோக்கத்தை விவரித்துக் கூறினர்.

அவரது பேச்சு, எதிர் காலத்தில் பிரஜா சோஷலிஸ்ட் கட்சி சிறந்த எதிர்க் கட்சியாக இயங்கும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாக இருக்கிறது.

அந்த மகாநாட்டுக்கு இந்தியாவில் உள்ள எல்லா மாகாணங்களிலிருந்தும் ஆயிரம் பிரதிநிதிகள் உள்படப் பதினுயிரம் பேர்களுக்கு மேல் விஜயம் செய்திருந்தார்கள். மேற்படி மகாநாட்டில் ஸ்ரீ கிருபளானி, அயல்நாட்டுப் பிரச்னைகளை ஒட்டி நேருஜி சர்க்கார் அனுஷ்டித்து வரும் கொள்கைகளை மனப்பூர்வமாக ஆதரித்தார்.

சமாதானத்தில் ஆர்வம் கொண்ட பாரதநாடு எந்த வல்லரசின் கோஷ்டியிலும் சேராமல் நடுநிலைமை வகித்து வருவதை அவர் பாராட்டினார்.

அமெரிக்கா — பாகிஸ்தான் இராணுவ உடன்படிக்கைப் பேச்சு சம்பந்தமாக ஜவாஹர்லால்ஜியின் அபிப்பிராயத்தை ஸ்ரீ கிருபளானி முற்றிலும் ஒத்துக் கொண்டார்.

அத்தகைய உடன்படிக்கை அமுலுக்கு வருமாயின், இந்தியாவும் மற்ற ஆசியா நாடுகளும் மூன்றாவது மகா யுத்த மண்டலத்தில் சிக்க நேரும் என்று எச்சரித்தார்.

இதிலிருந்து இந்தியா தேசத்தின் சுதந்திரத்தைப் பாதுகாக்கும் விஷயத்தில் பிரஜா—சோஷலிஸ்ட் கட்சி காங்கிரஸுக்குப் பின் வாங்காது என்றும், அவசியமான போது காங்கிரஸுடன் பூரணமாக ஒத்துழைக்கும் என்றும் ஏற்பட்டது.

பிரஜா சோஷலிஸ்ட் கட்சி விரும்பும் அரசியல், பொருளாதாரச் சீர்திருத்தங்கள் என்ன என்பதையும் ஆச்சாரிய கிருபளானி விவரித்தார்.

**இந்தியாவில் கல்வி முறையைக் காலதாமதமின்றி முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டும். வாக்காளர்களிடையே ஆரம்பக் கல்வியை விஸ்தரிக்க உடனே வழி வகை செய்ய வேண்டும்.**

**இந்தியாவின் ஒற்றுமைக்கும் பாதுகாப்புக்கும் குந்தகம் ஏற்படாத வகையில், ஸ்தல ஸ்தாபனங்களுக்குப் பூரண சுயேச்சை அளிக்கவேண்டும்.**

**விவசாயிகள் கூட்டு விவசாயப் பண்ணைகள் அமைத்து முன்னேறுவதற்கு உதவி புரியவேண்டும்.**

**கைத் தொழில்கள் அபரிமிதமாக அபிவிருத்தி அடைவதற்கான முறைகளைத் தாமதிக்காமல் கைக் கொள்ள வேண்டும்.**

**தொழிலாளர் ஸ்தாபனங்கள் சிறிதும் கட்சிப் பற்றற்ற முறையில் இயங்குவதற்குத் தகுந்த ஏற்பாடு செய்ய வேண்டும்.**

**சர்க்கார் நிர்வாகத்தில் படிந்துள்ள திறமையின்மை, லஞ்சம், சலுகை முதலிய ஊழல்களை அறவே ஒழிக்க வேண்டும்.**

இவைதான் ஸ்ரீ கிருபளானி குறிப்பிட்டுள்ள முக்கிய சீர்திருத்தங்கள் ஆகும்.

இந்த சீர்திருத்தங்களைக் கூடிய விரைவில் காரியத்தில் நிறைவேற்ற வேண்டும் என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

இவற்றைத் தவிர, ஸ்ரீ அசோக் மேத்தா, டாக்டர் ராம் மனோஹர் லோஹியா முதலிய தலைவர்கள் அடங்கிய கமிஷன் பரிசீலனை செய்து பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் இலட்சியத் திட்டத்தைச் சமர்ப்பித்திருந்தது.

1. எந்தத் துறையிலும் யாருக்கும் அதிகப்பட்ச வருமானம் ஆயிரம் ரூபாய்க்கு மேல் இருக்கக் கூடாது.

2. தரிசு நிலங்களைப் பண்படுத்தி உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்காகச் சர்க்கார் செலவில் பத்து லட்சம் பேர்கள் அடங்கிய உணவு உற்பத்திப் படையை நிறுவ வேண்டும்.

3. வேலையில்லாக் கஷ்டம் தீரவும் அதிகப் பேர்களுக்கு வேலை கிடைக்கவும் தகுந்த முறைகளைக் கைக்கொள்ள வேண்டும்.

4. நிலத்தை உழுது உழைப்போருக்கு நிலங்களைப் பகிர்ந்து அளிக்க வேண்டும்.

5. பெரிய கைத்தொழில்கள் யாவற்றையும் சர்க்கார் நிர்வாகத்தில் எடுத்துக் கொண்டு நடத்த வேண்டும்.

இவைதான் திட்டத்தின் முக்கிய அம்சங்கள் ஆகும். மேற்படி திட்டத்தை, மகாநாடு யாதொரு எதிர்ப்புமின்றி ஏகமனதாக அங்கீகரித்தது.

ஜெயப்பிரகாச நாராயண், ஆச்சாரிய கிருபளானி போன்ற சோஷலிஸ்டுக் கட்சித் தலைவர்கள் பல ஆண்டுகள் காங்கிரசில் இருந்து தியாகம் செய்தவர்கள்; தேசத் தொண்டில் பண்பட்டவர்கள்; தேச நலனையே தங்கள் வாழ்க்கையின் குறிக்கோளாகக் கொண்டவர்கள்.

காந்தியக் கொள்கைகளே தங்கள் கட்சியின் அடிப்படை என்று மேற்படி தலைவர்கள் அடிக்கடி கூறி வருகிறார்கள்.

அக்கொள்கைகளை அமுலுக்குக் கொண்டு வரும் விஷயத்தில் காங்கிரசைக் காட்டிலும் துரிதமாகவும் தீவிரமாகவும் செல்ல வேண்டும் என்றுதான் அவர்கள் வற்புறுத்தி வருகிறார்கள்.

எனவே, அவர்களைத் தலைவர்களாகக் கொண்ட பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி எதிர்காலத்தில் சிறந்த எதிர்க்கட்சியாக விளங்குவதற்கு எவ்விதத்திலும் தகுதி வாய்ந்தது என்பதில் ஐயமில்லை.

முன்னம், பேதுல் என்னுமிடத்தில் நடந்த பிரஜா – சோஷலிஸ்ட் மகாநாட்டில் அக் கட்சியின் முக்கியத் தலைவர்களுக்குள்ளே சில கருத்து வேற்றுமைகள் தோன்றியிருந்ததாக வெளிப்பட்டுக் கவலையை உண்டாக்கியது.

அக்கருத்து வேற்றுமைகள் நீங்கி அலகாபாத் மகாநாடு சுமுகமாக நடந்தது பற்றியும், நிர்ணயமான வேலைத் திட்டம் ஒன்றை மகாநாடு ஒப்புக் கொண்டது பற்றியும் மகிழ்ச்சி அடைகிறோம்.

அலகாபாத் மகாநாட்டின் விளைவாகப் பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி மேலும் பலம் பெற்று ஓங்கும் என்று எதிர்பார்க்கிறோம்.

# சுபிட்ச இந்தியாவின் சிற்பிகள்

அன்னியர் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெறும் வழியைப் பாரதத் தலைவர்கள் மக்களுக்குக் காட்டினார்கள்; சரித்திரத்தில் சுதந்திர இந்தியாவின் சிற்பிகள் என்ற நிரந்தரமான இடத்தையும் பெற்றார்கள்.

அது போலவே உணவுப் பற்றாக்குறை முதலிய பல்வேறு பற்றாக் குறைகளிலிருந்து ஜனங்கள் விடுதலை பெறும் வழியைக் காட்டும் முழுப் பொறுப்பும் நமது இஞ்ஜினீயர்களைச் சார்ந்திருக்கிறது. அவர்களைச் சுபிட்ச இந்தியாவின் சிற்பிகள் என்று கூறலாம். இந்த நாட்டின் உணவு உற்பத்தி பெருகுவதும், மின்சார சக்தி பெருகுவதன் மூலம் தொழில்கள் அபிவிருத்தி அடைவதும் இஞ்ஜினீயர்களின் சேவையையே பொறுத்திருக்கிறது. எனவே, இந்தியாவின் சுபிட்சத்துக்கு இன்றியமையாத இஞ்ஜினீயர்களின் மகாநாடு சில தினங்களுக்கு முன் சென்னையில் நடந்தது வரவேற்கத் தக்கது.

மேற்படி இஞ்ஜினீயர்களின் மகாநாட்டை ஆரம்பித்து வைத்த டாக்டர் சி. பி. ராமசாமி ஐயர் சென்னை மாகாணத்தில் உள்ள இஞ்ஜினீயர்களை வெகுவாகப் பாராட்டினார். உலகத்தில்

உள்ள பிரசித்தி பெற்ற இஞ்ஜினீயர்களுக்கு நமது இஞ்ஜினீயர்கள் திறமையில் சளைத்தவர்கள் அல்ல என்று பெருமிதத்துடன் குறிப்பிட்டார்.

பிரசித்தி பெற்ற மேட்டூர், பைகாரா மின்சாரத் திட்டங்களின் கர்த்தாவான டாக்டர் ராமசாமி ஐயர் அனுபவபூர்வமாக அவ்விதம் கூறியிருப்பது தமிழ் நாட்டில் உள்ள இஞ்ஜினீயர்களுக்குப் பெருமையே யாகும்.

சுமார் இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஸ்ரீ ராமசாமி ஐயர் மேட்டூர், பைகாரா திட்டங்களை அமுலுக்குக் கொண்டுவர முற்பட்டபோது அம் முயற்சிக்கும் மிகுந்த எதிர்ப்பு இருந்தது. அப்போது பைகாராத் திட்டத்தைப் பைத்தியக்காரத் திட்டம் என்று வர்ணித்தவர்களும் உண்டு! ஆனால், இன்றோ பைகாராத் திட்டம் இந்த மாகாணத்தின் பொருளாதாரத் துறையில் ஒரு புதிய சகாப்தத்தையே உண்டு பண்ணி யிருக்கிறது; தொழில் துறைகளின் அபிவிருத்திக்கு வழிகாட்டி யாகவும் அமைந்திருக்கிறது.

ஸ்ரீ ராமசாமி ஐயர் தாம் சென்னை சர்க்காரில் மந்திரி பதவி வகித்த காலத்தில் வகுத்த மற்றொரு மாபெரும் திட்டம் நிறைவேறாதது பற்றியும் குறிப்பிட்டார். ஒரிஸ்ஸா மாகாணத்தில் உள்ள மகா நதியிலிருந்து ஆரம்பித்து, அந் நதி உள்படக் கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணாறு, காவேரி ஐந்து நதிகளையும் இணைத்து நீர்ப்பாசனத்துக்கு வசதி செய்ய வேண்டும் என்பதே ஸ்ரீ ராமசாமி ஐயர் வகுத்த திட்டமாகும். அத் திட்டம் அமுலுக்கு வந்திருக்குமாயின், தென்னிந்தியாவின் உணவு உற்பத்தி சரித்திரத்திலேயே புரட்சிகரமான மாறுதல் ஏற்பட்டிருக்கக் கூடும். தற்போது மேற்படி நதிகளில் செல்லும் வெள்ளத்தில் பத்து சத விகிதம்கூட உருவான உபயோகத்துக்குக் கொண்டு வரப்படவில்லை. அப்படியிருக்க, வெள்ளத்தின் பெரும் பகுதியையும் பலன் தரத் தக்கதாகச் செய்யும் பட்சத்தில் அது எத்தகைய வரப்பிரசாதமாக அமையும் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை. ஆனால் அத்தகைய திட்டம் நிறைவேறாததற்குக் குறிப்பிட்ட மாகாண சர்க்கார்களும் இந்திய சர்க்காருமே காரணம் என்று ஸ்ரீ ராமசாமி ஐயர் கூறினார்.

எனவே, ஸ்ரீ ராமசாமி ஐயரைப் போன்ற மேதாவிகள் தீர்க்க தரிசனத்துடன் வகுக்கும் திட்டத்துக்குச் சர்க்கார்களும் பொது ஜனங்களும் ஆதரவளிக்கத் தவறிவிடக் கூடாது என்பதும் இதிலிருந்து தெளிவாகிறது.

இந்திய சர்க்கார் தயாரித்துள்ள ஐந்து ஆண்டுத் திட்டத்துக்கு இணங்க, இந்த மாகாணத்தில் முப்பத்தினாலு கோடி ரூபாய் செலவில் பதினாலு பெரிய நீர்ப்பாசனத் திட்டங்களின் நிர்மாண வேலைகள் ஆரம்பமாகி விட்டன. அவைகளின் பலனாகப் புதிதாக ஆறு லட்சம் ஏக்கருக்கு மேல் நீர்ப்பாசன வசதி கிடைக்கும் என்று தெரிகிறது.

சுதந்திர இந்தியா சுபிட்ச நிலையை அடைவதற்கு இன்னும் எத்தனையோ திட்டங்களும் காரியங்களும் நிறைவேறியாக வேண்டும். அவையெல்லாம் நிறைவேறுவதற்குற்ற பொறுப்பை வகிக்க டாக்டர் ராமசாமி ஐயர் போன்ற மேதாவிகளும் சிறந்த இஞ்ஜினீயர்களும் முன் வர வேண்டும். எனினும் அவர்களின் முயற்சி வெற்றி பெறுவது அவர்களுக்கு மத்திய – மாகாண சர்க்கார்களும் பொது மக்களும் அளிக்கும் பூரண ஆதரவையே பொறுத்திருக்கிறது.

# மானிட வர்க்கத்தை மகிழ்விக்கும் செய்தி

**மா**னிட வர்க்கத்தையே மகிழ்விக்கக் கூடிய சம்பவம் ஒன்று புது வருஷ ஆரம்பத்திலே பம்பாயில் நிகழ்ந்தது.

இன்னும் பத்து அல்லது பதினைந்து ஆண்டுகளுக்குள், இந்தியா உலக மக்களுக்கே மகத்தான நன்மை அளிக்கக் கூடிய விதத்தில் அணு சக்தியை உபயோகிப்பது சாத்தியமாக இருக்கும் என்ற நற்செய்தியைப் பண்டித ஜவாஹர்லால் நேரு வெளியிட்டார். அணு சக்தி ஆராய்ச்சிக்காகப் பம்பாயில் நிர்மாணிக்கப் போகும் கட்டிடத்துக்கு இம்மாதம் முதல் தேதியன்று நேருஜி அஸ்திவாரக் கல் நாட்டியபோது அவ்வாறு குறிப்பிட்டார்.

அணு சக்தியை மனித குலத்தின் க்ஷேமத்துக்குப் பயன் படுத்துவதா அல்லது உலகத்தின் நாசத்துக்குப் பயன் படுத்துவதா! இதுதான் புது வருஷத்தின் முன்னுள்ள மாபெரும் பிரச்னை என்றும் நேருஜி கூறினார்.

சென்ற பல வருஷங்களாக எல்லையின்றிப் போர்த் தளவாட உற்பத்திப் போட்டியில் ஈடுபட்டுள்ள வல்லரசுகள் இப்போது அணுகுண்டு உற்பத்திப் போட்டியில் கவனம் செலுத்தி வருகின்றன, அணுகுண்டு உற்பத்தியில் அமெரிக்காவுக்கு அடுத்தபடியாக ருஷ்யாவும் பிரிட்டனும் வெற்றி பெற்றுள்ளன. கனடா முதலிய இரண்டொரு நாடுகள் வெற்றி பெறும் தறுவாயில் இருப்பதாகப் பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன. இவ்வாறாக, நாசகரமான அணுகுண்டு உற்பத்தியில் பல நாடுகளிடையும் போட்டா போட்டி நிலவி வருகையில், மனித சமூகத்தின் க்ஷேமத்துக்காக அணுசக்தியை உபயோகிக்கும் முறைகளை இந்தியா கண்டு பிடிக்க முற்பட்டிருப்பது மானிட வர்க்கமே ஆனந்தம் அடையக் கூடிய செய்தி அல்லவா!

மனித வர்க்கத்துக்குப் பயன் படக்கூடிய முறையில் இந்தியா செய்து வரும் அணுசக்தி ஆராய்ச்சியைப் பற்றி ஏற்கெனவே சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி நிபுணர்கள் பாராட்டத் தொடங்கி யிருக்கிறார்கள். அணுசக்தி உற்பத்திக்கு இன்றியமையாத டைடேனியம் (*Titanium*), யுரேனியம் (*Uranium*), தோரியம் (*Thorium*) போன்ற அபூர்வ உலோகங்களை உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகள் இந்தியாவில் ஏற்பட்டுள்ளன.

ஆத்ம சக்தியினால் மானிட வர்க்கம் மகத்தான நன்மைகளை அடைய முடியும் என்ற உயர்ந்த தத்துவத்தை உலக மக்களுக்கு நிதர்சனமாகக் காட்டிய தனிப் பெருமை பாரத நாட்டைச் சார்ந்தது. அது போலவே மானிட வர்க்கத்தின் மகோன்னதமான நல்வாழ்வுக்கு அணு சக்தியை உபயோகிக்க முடியும் என்பதை உலகத்துக்கு நிரூபிப்பதற்குற்ற உருவான முறைகளை இந்தியா இப்போது கைக் கொள்ள முற்பட்டிருக்கிறது. இது உலகத்திலே பாரத நாட்டுக்கு மேன் மேலும் அழியாப் புகழையும் பெருமையையும் உண்டாக்கக் கூடிய காரியம் என்பதில் சந்தேகம் இல்லை.



# தென்னிந்திய

ராஜாஜி அவர்களைத் தமிழிசை விழாவின் தொடக்க நாளில் சில வார்த்தைகள் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொண்டபோது. "நம் நாட்டில் வழங்கும் சங்கீதத்தை எதற்காகக் கர்நாடக சங்கீதம் என்று சொல்ல வேண்டும்? அந்தப் பெயர் எந்தக் காரணத்தினால் வந்ததாக இருந்தாலும், இனி நம் சங்கீத முறையை 'தென்னாட்டுச் சங்கீதம்' என்று குறிப்பிடுவதே நல்லது" என்று ராஜாஜி கூறினார்.

ராஜாஜியின் கருத்தை முன் கூட்டியே எதிர்பார்த்து, சென்னை இந்தியன் பைன்ஆர்ட்ஸ் சங்கத்தார் இருபத்தோரு வருஷகாலமாகத் 'தென்னிந்திய சங்கீத மகாநாடு' நடத்தி வருகிறார்கள். மகாநாட்டையொட்டிச் சங்கீதக் கச்சேரிகளும் ஏற்படுத்தி வருகிறார்கள்.

இந்திய நுண்கலைச் சங்கத்தாருக்குப் பெரிய மனிதர்கள்—பிரமுகர்களின் ஆதரவு அவ்வளவாகக் கிடையாது. நமது பிரபல சங்கீத வித்வான்களின் ஒத்துழைப்பு, சங்க நிர்வாகிகளின் காரியத் திறமை, ரஸிக மகாஜனங்களின் கலை ஆர்வம்,—ஆகிய இந்த மூன்று உதவிகளைக் கொண்டு மேற்படி சங்கத்தாரின் ஆண்டு விழாக்கள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெற்று வருகின்றன.

சென்ற 1953-ம் வருஷத்து இறுதியில் ஆரம்பமான இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சங்கத்தின் இருபத்தோராவது தென்னிந்திய சங்கீத மகாநாடு, சென்னைக் கோகலே மண்டபத்தில் கவர்னர் கனம் ஸ்ரீ பிரகாசா அவர்களினால் ஆரம்பித்து வைக்கப்பட்டு, "கல்கி" ஆசிரியரின் தலைமையில் நடைபெற்று இனிது முடிந்தது.

மகாநாட்டின் மங்கள முடிவு தினமாகிய ஜனவரி மாதம் 3ந்தேதி நடந்த வைபவத்துக்கு இந்தியக் குடியரசின் உதவி அக்கிராசனர்

# சங்கீத மகாநாடு

டாக்டர் ராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார். மேற்படி சங்கத்துக்கு நீண்ட காலமாகத் தலைவராக இருந்து வரும் ஸ்ரீ ஜே. வேங்கட நாராயண நாயுடு, சங்கீதப் பேரா சிரியர் ஸ்ரீ பி. சாம்பமூர்த்தி, ஸ்ரீ கே.எஸ். ராமசாமிசாஸ்திரிகள், ஸ்ரீ ஸோண்டி ஸ்ரீபதி சாஸ்திரி ஆகி யவர்களுக்கு மகாநாட்டின் சார் பாக டாக்டர் ராதாகிருஷ்ணன் விருதுகள் வழங்கினர். சங்கீதத் துறையில் மட்டுமன்றி இலக்கியத் துறையில் செய்த சேவைகளுக் காகவும் இந்த விருதுகள் வழங்கப் பட்டன. ஸ்ரீ வேங்கட நாராயண நாயுடு, ஸ்ரீ கே. எஸ். ராமசாமி சாஸ்திரி ஆகிய இருவருக்கும் "தத்வ விமரிசக சிகாமணி" என்னும் பட்டமும், பேராசிரியர் சாம்பமூர்த்திக்குச் "சங்கீத சாஸ் திரப் பிரவீணர்" என்னும் பட்ட மும், ஸ்ரீபதி சாஸ்திரிக்கு 'ஸத்கவி ஹம்ஸர்' என்ற பட்டமும் அளிக் கப்பட்டன. சங்கீதப் போட்டியில் பரிசுகள் பெற்ற சகோதரிகளுக்கும் டாக்டர் ராதாகிருஷ்ணன் தம்புரா முதலிய பரிசுகள் வழங்கினர்.

இந்த வைபவத்துக்குத் தலைமை வகித்த டாக்டர் ராதாகிருஷ்ணன் அவர்களையும், விழா ஆரம்பத்தில் பிரார்த்தனை கீதம் பாடிய சகோதரி களையும், விருதுகள் பெற்ற பிர முகர்களையும், சங்கத்தின் திறமை வாய்ந்த காரியதரிசிகளான ஸ்ரீ வரதப்பச் செட்டியார், ஸ்ரீ வேணு கோபாலன், உதவிக் காரியதரிசி ஸ்ரீ ராமச்சந்திரன் ஆகியவர்களை யும் பக்கத்தில் உள்ள படங்களில் காணலாம். பட்டமளிப்பு விழாவை யொட்டி ஸ்ரீ கோபிநாத் கோஷ்டி யின் கதகளி நடனக் கச்சேரி நடை பெற்றது. கதகளி கலைஞர்களின் திறமையை உற்சாகமாகப் பாராட்டி அநுபவித்த மாபெரும் ரஸிக மகாசபையின் தோற்றத் தையும் படத்தில் பார்க்கலாம்.




# குமாரி ஸுதா


(டி. வி. சுந்தரம் அய்யங்கார் அவர்களின் பேத்தி)

நாட்டிய கலாகேசரி வழுவூர் ஸ்ரீ ராமையா பிள்ளை
அவர்கள் சிஷ்யை

## பரதநாட்டியம் — அபிநயம்

| காந்தி கிராமம் நிதிக்காக | மதுரை, ஸ்ரீ ஸத்குரு ஸங்கீத ஸமாஜம் |
| --- | --- |
| வெள்ளிக்கிழமை | சனிக்கிழமை |
| 8-1-1954 | 9-1-1954 |
| மாலை 6 மணி | மாலை 6 மணி |
| திருநெல்வேலி | மதுரை |
| பாபுலர் டாக்கீஸில் | விக்டோரியா எட்வர்டு ஹாலில் |




### அத்தியாயம் 66

## மதுராந்தகன் மறைவு

குதிரையும் தானுமாகத் திம்'ரென்று உருண்டு விழுந்தும் சிறிதும் மனங் கலங்காத கந்தமாறன், எழுந்திருக்கும் போதே கையில் வேலை எடுத்துக் கொண்டு எழுந்தான். அவனுடைய நோக்கம் ஏற்கெனவே மறு கரையை அணுகிக் கொண்டிருந்த குதிரையின் பேரில் சென்று விட்டது. அக்குதிரை மேல் ஏறிக் கொண்டிருந்தவன் சந்தேகமின்றி வந்தியத் தேவன்தான் என்று அவன் நிச்சயித்துக் கொண்டான்.

வந்தியத்தேவன் பேரில் கந்தமாறன் கொண்டிருந்த பழைய சிநேகம் இப்போது கடும் பகையாக மாறியிருந்தது. பலவிதத்திலும் வந்தியத் தேவன் சிநேகத் துரோகம் செய்து விட்டதாக அவன் எண்ணினான். தனக்கும் தன் குடும்பத்துக்கும் நேர்ந்த அபகீர்த்திக் கெல்லாம் காரணம் வந்தியத் தேவன்தான்! தன் வீட்டில் வந்து தங்கி யிருந்தபோது தெரிந்துகொண்ட இரகசியத்தைப் பலரிடத்திலும் சொல்லியிருக்கிறான்; இராஜ குடும்பத்தாரிடமும் கூறி யிருக்கிறான். எதற்காக? சோழகுலத்தினிடம் கொண்ட பக்தி விசுவாசம் காரணமாகவா? இல்லவே இல்லை! இந்த இரகசியத்தைச் சொல்லி அவர்களுடைய நம்பிக்கையைச் சம்பாதித்துக் கொண்டு, பிறகு அவர்களுக்கும் துரோகம் செய்வதற்காகத் தான்! பாண்டிய நாட்டு ஆபத்துதவிகளுக்கு அவன் உதவி செய்திருக்கிறான் என்பதில் சந்தேகமில்லை. இந்த இரட்டைத் துரோகத்தை நந்தினியின் தூண்டுதலினால் அவன் செய்தானா, வேறு தன் சொந்த லாபங் கருதியே செய்தானா என்பது தெரியவில்லை. நந்தினியின் மாயவலையில் தானும் சில காலம் சிக்கியிருந்தது உண்மையேதான்! ஆனாலும் இம்மாதிரி பயங்கரத் துரோகச் செயல்களைக் கனவிலேனும் தான் செய்ய எண்ணி யிருக்க முடியுமா?

இவற்றையெல்லாம் விடத் தனது அருமைச் சகோதரி மணிமேகலையின் மனத்தைக் கெடுத்து விட்டதன் பொருட்டுக் கந்தமாறனுக்கு வந்தியத் தேவன் மீது அளவில்லாத கோபம் பொங்கிக் கொண்டிருந்தது. மணிமேகலையைச் சாம்ராஜ்ய சிங்காதனத்தில் மணிமகுடம் தரித்துச் சக்கரவர்த்தினியாக வீற்றிருக்கச் செய்ய வேண்டுமென்று கந்தமாறன் ஆசை கொண்டிருக்க, அந்தக் கள்ளங் கபடமற்ற பெண்ணைக் 'கரிகாலரை நான் தான் கொன்றேன்' என்று பலரறியப் பிதற்றும்படி செய்த கொடிய வஞ்சகன் அல்லவா அவன்?

அவ்வளவு பெரிய பாதகங்களைச் செய்தவன் உயிர் தப்பி ஓடும்படி விட்டு விடுவதா? அதைத் தான் பார்த்துக் கொண்டிருப்பதா? ஒரு நாளும் இல்லை! வந்தியத் தேவனை உயிரோடு பிடித்துக்

கொண்டு போக முடியுமானால் நல்லது தான்! முடியாத வரையில், அவனைக் கொன்று தொலைத்து விட்டோம் என்ற ஆறுதலுடனாவது இங்கிருந்து திரும்பிப் போக வேண்டும்...இந்தத் தீர்மானத் துடனே தான் கந்தமாறன் அந்த மனித வேட்டைக்குப் புறப்பட்டான்.

இப்போது அவனுடைய குதிரை எதிர் பாராத விதமாகத் தடுக்கி விழுந்து விட்டது. அது இனி பிழைப்பதே துர்லபம். வைத்தியர் மகன் பினாகபாணியின் குதிரைக்கும் அதே கதிதான்!

வந்தியத் தேவனோ நதியின் அக்கரையை நெருங்கி விட்டான்!

பின்னால் வந்த வீரர்கள் அங்கு வந்து சேர இன்னும் சிறிது நேரம் பிடிக்கும். அவர்கள் வந்து விட்டாலும் வெள்ளத்தைக் கடந்து அக்கரை சென்று வந்தியத் தேவனைப் பிடிப்பது இயலாத காரியம். ஆகையால் அவனைக் கொன்று விடுவது ஒன்றே செய்யத் தக்கது...

இவ்வளவு எண்ணங்களும் கந்தமாறனுடைய உள்ளத்தில் சில கண நேரத்தில் தோன்றி மறைந்தன. எனவே, தரையிலிருந்து எழுந்து நின்றதும், கால்களை நன்றாக ஊன்றிக் கொண்டு, கையிலிருந்த வேலை உயர்த்திக் குறி பார்த்துப் பலங் கொண்ட மட்டும் வீசி எறிந்தான்.

வேல் 'விர்' என்ற சத்தத்துடன் சென்று கண்மூடித் திறக்கும் நேரத்தில் மதுராந்தகன் பேரில் பாய்ந்தது.

'வீல்' என்று சத்தமிட்டு விட்டு மதுராந்தகன் தண்ணீரில் விழுந்தான்.

குதிரை மட்டும் தட்டுத் தடுமாறிக் கரை மேல் ஏற முயன்றது.

மிகச் சொற்ப நேரத்துக்குள் நடந்து விட்ட மேற்கூறிய நிகழ்ச்சிகளை யெல்லாம் மரக் கிளையிலிருந்து பார்த்துக் கொண்டிருந்த கருத்திருமன், உள்ளம் பதறி உடலும் நடுங்கினான்.

இப்படி யெல்லாம் நடக்கக் கூடும் என்று அவன் எதிர்பார்க்கவே இல்லை.

வேகமாக வந்து திடீரென்று தடுக்கி விழுந்த குதிரைகளுக்கு அடியில் அகப் பட்டுக் கொண்டவர்கள் உயிரோடு தப்பி எழுந்தாலும் கைகால் ஒடிந்தவர்களாக எழுந்திருப்பார்கள் என்று அவன் எண்ணி யிருந்தான்.

அவன் சற்றும் எதிர்பாராதபடி எல்லாம் நடந்து விட்டது. கீழே விழுந்தவர்களில் ஒருவன் எழுந்து நின்று வேல் எறிந்து, அதுவும் மதுராந்தகன் பேரில் குறி தவறாமல் சென்று பாய்ந்து அவனை வெள்ளத்தில் வீழ்த்தி விட்டது. இதனால் ஏற்பட்ட முதல் அதிர்ச்சியைச் சமாளித்துக் கொண்டு, பயங்கரமான கூக்குரலுடன் கீழே பாய்ந்தான்.

ஆத்திர வெறியினால் ஏற்பட்ட ராட்சத பலத்துடன் கந்தமாறனைத் தாக்கிக் கீழே தள்ளி விட்டு அப்பால் சென்றபோது, அப்போதுதான் தட்டுத் தடுமாறி எழுந்து கொண்டிருந்த வைத்தியர் மகன் அவனைத் தடுக்கப் பார்த்தான். பினாகபாணிக்கு இதற்குள் பிசாசு பயம் நீங்கி, மரத்தின் மேலிருந்தவன் கருத்திருமன் என்பது தெரிந்து போயிருந்தது.

கருத்திருமன் தன் உள்ளத்தில் பொங்கிய கோபத்தை யெல்லாம் செலுத்திக் கையிலிருந்த சிறிய கத்தியால் பினாகபாணியைக் குத்திக் கீழே தள்ளி விட்டுப் பாலத்தை நோக்கி ஓடினான்.

மூங்கில் மரப் பாலத்தின் மீது ஒரு மனிதன் ஓடுவதைக் கந்தமாறனுக்கும் பினாகபாணிக்கும் பின்னால் குதிரைகள் மீது வந்த வீரர்கள் பார்த்தார்கள்.

தாங்கள் வருவதற்கு முன் நிகழ்ந்தவற்றை ஒருவாறு அவர்கள் ஊகித்துத் தெரிந்து கொண்டு குதிரைகளை அங்கே நிறுத்தினார்கள்.

கந்தமாறன் "பிடியுங்கள்! பிடியுங்கள்! பாலத்தின் மேல் ஓடுகிறவனைப் பிடியுங்கள்!" என்று கூவினான்.

நாலு பேரும் குதிரை மேலிருந்து தடதடவென்று குதித்துப் பாலத்தின் மீது முன்னால் சென்ற கருத்திருமனைத் தொடர்ந்து ஓடினார்கள்.

திடீரென்று இரண்டாவது முறையும் தள்ளப்பட்டுத் தலை குப்புற விழுந்த அதிர்ச்சியினால் சிறிது நேரம் செயலற்றுக் கிடந்த கந்தமாறன் விரைவிலேயே மறுபடியும் சமாளித்துக் கொண்டு எழுந்து அந்த நாலு வீரர்களுக்குப் பின்னால் தானும் ஓடினான்.

கத்தியினால் குத்தப்பட்டுப் படுகாயமுற்றிருந்த வைத்தியர் மகனும் ஆவேசங் கொண்டு எழுந்து அவர்களைப் பின் தொடர்ந்து பாலத்தின்மீது சென்றான்.

ஆனால் ஐந்தாறு அடி எடுத்து வைப்பதற்குள் அவனுடைய ஜீவசக்தி குன்றி விட்டது. கண்கள் இருண்டு வந்தன. தலை சுற்றியது. காலை ஊன்றி நிற்கப் பார்த்தும் முடியாமல் தள்ளாடி நதி வெள்ளத்தில் விழுந்தான்.

அவன் அவ்வாறு விழுந்ததை முன்னால் சென்றவர்கள் யாரும் கவனிக்கவில்லை.

பாவம், எத்தனை எத்தனையோ மனோ ராஜ்யங்கள் செய்து கொண்டிருந்த வைத்தியர் மகன் பினாகபாணி தன்னுடைய துராசைகளில் எதுவும் நிறைவேறப் பெறாதவனாக உயிர் நீத்தான்! அவன் கட்டிய ஆகாசக் கோட்டைகள் எல்லாம் வடவாற்று வெள்ளத்தில் மூழ்கி மறைந்தன! அவனுடைய உடலுக்கும் அந்த நதியில் ஓடிய பெரும் பிரவாகமே சமாதிக் குழி ஆயிற்று!

*　　　*　　　*

கந்தமாறனைத் தாக்கித் தள்ளி விட்டு வைத்தியர் மகனைக் கத்தியால் குத்தி விட்டு மூங்கில் பாலத்தின்மீது விரைந்து ஓடிய கருத்திருமன், அந்தப் பாலத்தில் முக்கால் பங்கு தூரம் கடந்ததும் ஒரு கணம் நின்று திரும்பிப் பார்த்தான். அப்போதுதான் குதிரைகள்மீது வந்த ஆட்கள் கீழே குதித்துப் பாலத்தின் முனையை அடைந்திருப்பதைக் கவனித்தான்.

உடனே அவன் ஒரு விந்தையான காரியம் செய்தான். அவன் நின்ற இடத்தில் மூங்கில் கழிகளை ஒன்றோடொன்று சேர்த்துக் கட்டியிருந்ததுடன், கீழேயும் முட்டுக் கொடுத்து நிறுத்தி யிருந்தது. பினாகபாணியைக் குத்திய அதே கத்தியினால் அந்தக் கட்டுக்களைச் சடசட வென்று அறுத்து விட்டான். கீழே முட்டுக் கொடுத்திருந்த கழிகளையும் காலினால் உதைத்துத் தள்ளி விட்டு மேலே விரைந்து ஓடினான்.

அக்கரையை அடைந்ததும், அங்கேயும் மூங்கில் கழிகளை மரத்து வேருடன் சேர்த்துக் கட்டியிருந்த கயிறுகளை அறுத்தான். உடனே பாலத்தின் முனையை அப்படியே கைகொடுத்து நெம்பித் தூக்கி அப்புறப்படுத்தி நதியின் வெள்ளத்தோடு விட்டான்.

மறுகணம் அந்த மூங்கிற் கழிப்பாலத்தில் ஏறக்குறைய மூன்றில் ஒரு பகுதி தனியாகப் பிய்த்துக் கொண்டு புறப்பட்டு ஆற்று வெள்ளத்தோடு மிதந்து செல்லத் தொடங்கியது.

பாலத்தின் மேலே ஓடி வந்தவர்கள், அவ்விதம் அங்கே பாலம் பிய்த்துக் கொண்டு போனதைக் கவனியாமல் மேலே மேலே ஓடி வந்து ஒவ்வொருவராக வெள்ளத்தில் விழுந்தார்கள்!

அவர்கள் எல்லாருக்கும் கடைசியாக வந்த கந்தமாறன் மட்டுமே அவ்வாறு ஆற்றில் விழாமல் தப்பினான்.

எதிர்பாராமல் வெள்ளத்தில் விழுந்தவர்கள் தண்ணீரைக் குடித்துத் திணறித் திண்டாடிய பிறகு, வெளியில் தலையை நீட்டினார்கள்.

கந்தமாறன் அவர்களைப் பார்த்து அக்கரைக்கு நீந்திச் சென்று கரையேறும்படி சத்தம் போட்டுக் கட்டளையிட்டான். அவர்களில் இரண்டு பேர் அதைத் தெரிந்து கொண்டு அக்கரையை நோக்கி நீந்திச் சென்றார்கள்.

மற்ற இருவர் மிக மிகப் பிரயாசைப்பட்டு எதிர் நீச்சல் நீந்தி வந்து எஞ்சி நின்ற பாலத்தைப் பிடித்துக் கொண்டு அதன்மேல் ஏறினார்கள்.


அவர்களை முதலில் கந்தமாறன் நன்றாகத் திட்டினான். ஆனால் அவர்களை மறுபடியும் நீந்திப் போகச் சொல்வதில் பயனில்லை என்று உணர்ந்தான்.

எனவே, பாலத்திலிருந்து இன்னும் சில மூங்கில் கழிகளைப் பிடுங்கித் தெப்பத்தைப்போல் கட்டும்படி செய்தான். அதை வெள்ளத்தில் மிதக்கவிட்டுக் கந்தமாறனும் மற்ற இருவரும் அதைப் பிடித்துக் கொண்டு மிதந்து அக்கரையை அடைந்தார்கள்.

அதற்குச் சற்று முன்னால் தட்டுத் தடுமாறி அக்கரை சேர்ந்திருந்த மற்ற இரு வீரர்களையும் சந்தித்தார்கள்.

அவர்கள் தாங்கள் கரையேறுவதற்குச் சற்று முன்பே அக்கரை சேர்ந்த மனிதன் இருளில் மறைந்து விட்டதாகவும், இரண்டு குதிரைகள் போகும் காலடிச் சத்தம் கேட்டதாகவும் சொன்னார்கள். குதிரைகளைத் தொடர்ந்து கால் நடையாகப் போவதில் பயனில்லை யென்று தாங்கள் நின்று விட்டதாகவும் அவர்கள் கூறினார்கள்.

ஆனால் கந்தமாறன் அவ்விதம் நின்று விடுவதற்கு விரும்பவில்லை. வைத்தியர் மகன் கூறிய சிறையிருந்த பைத்தியக்காரன்தான் மரத்திலிருந்து குதித்துத் தன்னைத் தள்ளி விட்டுப் பாலத்தின்மேல் ஓடியவனாக இருக்க வேண்டும். வந்தியத்தேவனைத் தப்புவிப்பதற்காகவே அவன் அவ்விதம் சாலைக்குக் குறுக்கே கயிற்றைக் கட்டி விட்டு மரத்தின்மேல் ஏறிக் காத்திருந்திருக்க வேண்டும். தன்னுடைய வேலுக்கு இரையானவன் வந்தியத்தேவன்தான் என்பதில் ஐயமில்லை. அவன் குதிரை மேலிருந்து வெள்ளத்தில் தலைகுப்புற விழுந்ததை அவன் கண்களாலேயே பார்த்தாகி விட்டது. ஆயினும் உயிர் பிரிந்த அவனுடைய உடலைக் கண்டு பிடித்துப் பார்த்து விட்டால்,



அவன் உள்ளம் மேலும் திருப்தி அடையும். ஒரு வேளை தஞ்சாவூருக்கே வந்தியத்தேவன் உடலை எடுத்துக் கொண்டு போனாலும் போகலாம். சோழகுலத்துக்கு மாபெரும் துரோகம் செய்த ஒருவனைக் கொன்று கொண்டு வந்த பெருமையை அடையலாம் அல்லவா? அதன் மூலம் சம்புவரையர் குலத்துக்கு நேர்ந்த அபகீர்த்தியையும் ஓரளவு போக்கிக் கொள்ளலாம். வந்தியத் தேவன் தப்பி ஓடிப் போக முயன்றது ஒன்றே அவன் குற்றத்தை நிரூபிக்கப் போதுமான காரணம் ஆகும். ஆதித்த கரிகாலரைக் கொன்றவன் வந்தியத்தேவன் என்பது நிச்சயமாகிவிட்டால், அந்தப் பயங்கரமான பழியைச் சம்புவரையர் குலம் சுமக்க வேண்டியிராதல்லவா?

இவ்வாறு யோசனை செய்துகொண்டு கந்தமாறன் வடவாற்றங் கரையோடு கீழ்நோக்கிச் சென்றான். வீரர் நால்வரும் அவனைப் பின்பற்றிச் சென்றார்கள். வந்தியத் தேவனுடைய உடல் எங்கேயாவது கரையில் ஒதுங்கிக் கிடக்கிறதா என்று பார்த்துக் கொண்டே சென்றார்கள். இருளடர்ந்த இரவு நேரத்தில் இந்தக் காரியம் அவ்வளவு சுலபமாக இல்லைதான் ஆயினும் கந்தமாறன் நம்பிக்கையைக் கைவிடாமல் மேலே மேலே போனான். இவ்வாறு வெகுதூரம் போன பிறகு பெரியதோர் அருவி மலையிலிருந்து விழுவது போன்ற ஓசைகேட்கலாயிற்று. அந்த ஓசை எழுந்த இடத்தை நெருங்கிச் சென்று பார்த்த போது, அங்கே நதியின் குறுக்கே ஒரு கலங்கல் கட்டியிருந்தது தெரிய வந்தது. அவ்விடத்தில் தண்ணீர் தேங்கி நின்று, அடுத்தாற்போல் பள்ளத்தில் அதிவேகமாக விழுந்து சுற்றிச் சுழன்று அலைமோதிக் கொண்டுசென்றது.




வந்தியத்தேவனுடைய உடல் அது வரையில் வந்திருக்குமானால் அந்தப் பெரும் பள்ளத்தில் விழுந்து அமிழ்ந்து போயிருக்கும். மறுபடியும் வெளியில் வருவதற்குப் பலநாட்கள் ஆகும். ஒரு வேளை வெளிப்படாமலே மறைந்து போனாலும் போய் விடலாம். ஆகையால் இனிமேலும் தேடிக்கொண்டு போவதில் பயனில்லை......

இவ்வாறு கந்தமாறன் எண்ணிக் கொண்டிருந்த போதே, நதிக் கலங்கலைத் தாண்டிக் கொண்டு வெண்ணிற நுரை மயமாகப் பொழிந்து கொண்டிருந்த நீரோட்டத்தோடு ஏதோ ஒரு கரிய பொருள் விழுவது தெரிந்தது. ஆகா! அதுதான் வந்தியத் தேவனுடைய உடலாக இருக்கவேண்டும்!—இந்த மண்ணுலகை விட்டு ஒரு பெரிய துரோகி ஒழிந்து போனான்! அவனுடைய பாவங்களை ஆண்டவன் மன்னிப்பாராக! — ஆனால் அது இயலுகிற காரியமா? அவனுடைய பாவங்களை ஆண்டவனால் கூட மன்னிக்க முடியுமா? முடியாது! முடியாது! அவற்றின் பலன்களை அவன் மறு பிறவியில் அநுபவித்தே யாக வேண்டும் அல்லவா?

எப்படியாவது போகட்டும். இவ்வுலகத்தில் வந்தியத் தேவனுடைய வாழ்க்கை முடிந்து விட்டது. இனி, அவனைப் பற்றி நாம் கவலைப்பட வேண்டியதில்லை. தஞ்சைக்குத் திரும்பிப் போய் மற்றக் காரியங்களைக் கவனிக்கலாம்.

இவ்வாறு கந்தமாறன் முடிவு செய்து கொண்டு வந்த வழியே திரும்பினான்......ஆகா! தஞ்சையிலே தான் அவனுக்கு எவ்வளவு பெரிய ஏமாற்றம் காத்திருந்தது? தான் வேல் எறிந்து கொன்று நதி வெள்ளத்தில் விழச் செய்தவன் வந்தியத்தேவன் அல்ல, — இளவரசன் மதுராந்தகன் என்று அறியும்போது கந்தமாறன் எப்படித் திடுக்கிடுவான்? அவன் காலின் கீழ் பூமி பிளந்து விட்டதாகவே தோன்றினாலும் சிறிதும் வியப் படைவதற்கில்லை யல்லவா?



# அத்தியாயம் 67

# "மண்ணரசு நான் வேண்டேன்"

பழுவேட்டரையர்கள் முதலான குறுநில மன்னர்களின் ஊர்வலம் அப்பால் சென்றதும் ஆழ்வார்க்கடியான் தன் ஆட்களுடனே சேந்தன் அமுதனுடைய பூந்தோட்டத்தை நோக்கி நடந்தான். பூந்தோட்டத்துக்குச் சமீபத்தில் ஒரு மரத்தடியில் சற்று மறைவாக மதுராந்தகத் தேவரின் சிவிகையும் அதைத் தூக்கும் ஆட்களும் நின்றார்கள். அவர்களிடம் விசாரித்து இளவரசர் கட்டளைப்படி அவர் திரும்பி வருகைக்காக அவர்கள் காத்துக் கொண்டிருந்ததை அறிந்து கொண்டான். பின்னர் மேலே சென்று பூந்தோட்டத்துக்குள் புகுந்தான். தன்னுடன் வந்தவர்களிடம் மெல்லிய குரலில் அத்தோட்ட மெல்லாம் சுற்றித் தேடிப் பார்க்கும்படி கூறிவிட்டுத் தான் மட்டும் குடிசை வாசலில் போய் நின்று கொண்டான். உட்புறம் தாளிட்டிருந்த கதவண்டை காதை வைத்து ஒட்டுக் கேட்கலானான். சேந்தன் அமுதனும் பூங்குழலியும் கவலையுடன் பேசிக் கொள்ளும் குரல்கள் கேட்டன. இடையிடையே யாரோ ஒருவர் மரணவஸ்தையில் முனகுவதுபோன்ற சத்தமும் கேட்டது.

தோட்டத்தைச் சுற்றித்தேடப் போனவர்களில் ஒருவன் விரைவில் திரும்பி வந்தான். அவன் கொண்டுவந்த பொருள்களைத் திருமலை நம்பி கதவிடுக்கின் வழியாக வந்த விளக்கின் ஒளிக்கிரணத்தில் உற்றுப் பார்த்தான். அவை இளவரசர் மதுராந்தகத் தேவர் வழக்கமாக அணியும் கிரீடம், இரத்தின ஹாரம், வாகு வலயம் முதலிய ஆபரணங்கள் என்று அறிந்து கொண்டான். அவற்றுடன் மதுராந்தகர் உத்தரீயமாகத் தரிக்கும் பீதாம்பரமும் இருந்தது. இவற்றைப் பார்த்ததும் ஆழ்வார்க்கடியானுடைய மனத்தில் உண்டான திருப்தி அவனுடைய முகத்தில் பிரதிபலித்தது.

"சரி; தேடியது போதும்! மற்றவர்களையும் இங்கே கூப்பிடு. எல்லாரும் கையில் ஆயுதம் ஏந்தி எதற்கும் ஆயத்தமாக நில்லுங்கள்!" என்று கூறிவிட்டு, ஆழ்வார்க்கடியான் குடிசையின் கதவை இலேசாகத் தட்டினான்.

உள்ளிருந்து மறுமொழி வராமற் போகவே, மீண்டும் தடதட வென்று கதவை வலுவாகத் தட்டினான்.

"யார் அங்கே? இங்கு என்ன வேலை?" என்று பூங்குழலியின் குரல் கேட்டது.

"அம்மணி! நான்தான் ஆழ்வார்க்கடியான் என்கிற திருமலை நம்பிதாஸன். தயவுசெய்து கதவைத் திறந்து அருள வேண்டும். முக்கியமான காரியம் இருக்கிறது!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

உள்ளே காலடிச் சத்தம் கேட்டது. பூங்குழலி கதவண்டையில் வந்து நின்று, "அப்படி என்ன முக்கியமான காரியம் இங்கே உமக்கு வைத்திருக்கிறது? நீரோ வீர வைஷ்ணவர். இதுவோ சிவனடியார்களின் குடிசை. இந்த வீட்டின் எஜமானருக்கு உடம்பு நலமில்லையென்பது உமக்குத் தெரியும். இரவு நேரத்தில் வந்து எதற்காகத் தொந்தரவு செய்கிறீர்?" என்றாள்.

ஆழ்வார்க்கடியான், "சமுத்திரகுமாரி! நான் வீர வைஷ்ணவன்தான்! அதனாலேயே துஷ்டநிக்கிரக சிஷ்டபரிபாலனம் செய்யும் பொருட்டு வந்தேன். கதவை உடனே திறக்காவிட்டால் உடைத்துத் திறக்கப்படும்!" என்றான்.

"வைஷ்ணவவீரரே! அவ்வளவு பெரிய வீராதி வீரரோ நீர்? உமது வீரத்தை எங்களிடம் காட்டவா வந்தீர்?" என்று சொல்லிக் கொண்டே பூங்குழலி குடிசைக் கதவைத் தடால் என்று திறந்தாள். அவளுடைய கயல் விழிகளில் கோபக் கனல் பறந்தது.

ஆழ்வார்க்கடியான்மீது தன் கோபத்தைக் காட்ட எண்ணியவள் அவனுக்கு அப்பால் வீரர்கள் சிலர் நிற்பது கண்டு திடுக்கிட்டாள். உடனே, கோபத்தைத் தணித்துக் கொண்டு, "ஐயா! இது என்ன? இவர்கள் யார்? எதற்காக இங்கே வந்திருக்கிறார்கள்? உம்முடனே தான் வந்தார்களா?" என்றாள்.

"ஆம்; என்னுடனேதான் வந்தார்கள். இராஜாங்கக் காரியமாக வந்திருக்கிறார்கள். இவர்களுடைய காரியத்தைத் தடை செய்கிறவர்கள் இராஜ தண்டனைக்கு உள்ளாக நேரிடும்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"நல்ல இராஜாங்கக் காரியம்; நல்ல இராஜ தண்டனை. இந்த மாதிரி பேச்சுக்களையெல்லாம் கேட்காமல் எப்போது கோடிக்கரைக்குப் போய்ச் சமுத்திரத்தின் அலை ஓசையைக் கேட்டுக் கொண்டு நிம்மதியாக இருக்கப் போகிறோம் என்றிருக்கிறது. போகட்டும்; இவர்களையெல்லாம் கொஞ்சம் தூரத்தில் இருக்கச்

சொல்லி விட்டுத் தாங்கள் மட்டும் உள்ளே வாருங்கள். இந்த ஓட்டைக் குடிசைக்குள்ளே என்ன இராஜாங்கக் காரியம் வைத்திருக்கிறதோ, தெரியவில்லை. அதைப் பார்ப்பதற்குத் தாங்கள் ஒருவரே போதாதா? அத்தான் அதோ கட்டிலில் படுத்து வேதனைப் பட்டுக் கொண்டிருக்கிறார். இவர்கள் உள்ளே வந்தால் அவர் திடுக்கிடுவார். அதனால் அவர் உடம்பு இன்னும் சீர்கேடடையும்!'' என்றாள்.

ஆழ்வார்க்கடியான் குடிசைக்குள் பிரவேசித்ததும் அவனாகவே கதவை மறுபடியும் சாத்தித் தாளிட்டான்.

"பூங்குழலி! உன்னுடைய வார்த்தை மிக்க வியப்பாயிருக்கிறது. இராஜாங்கக் காரியங்களின் பேரில் உனக்கு இவ்வளவு அருவருப்பு எப்போது உண்டாயிற்று? பட்டத்து இளவரசரை மணந்து சிங்காதனம் ஏறும் உத்தேசம் என்ன ஆயிற்று? அவ்வாறு நடக்கும்போது இராஜாங்கக் காரியங்களில் முழுக்க முழுக்கக் கவனம் செலுத்தித்தானே ஆக வேண்டும்?'' என்றான் திருமலை.

"ஐயா, வைஷ்ணவரே! அந்த உத்தேசத்தை நான் அடியோடு விட்டு விட்டேன். சென்ற சில தினங்களில் இராஜ்ய பாரம் தாங்குவது என்பது எவ்வளவு சங்கடமான காரியம், எத்தனை மன வேதனை தரும் விஷயம் என்பதைத் தெரிந்து கொண்டேன். சிங்காதனம் இருக்குமிடத்துக்குப் பத்து காத தூரத்திலே வருவதற்குக்கூட இனி நான் பிரியப்பட மாட்டேன். வைஷ்ணவரே! உமக்கு ஒரு சந்தோஷச் செய்தி தெரிவிக்கிறேன். என் அத்தான் சேந்தன் அமுதனை மணந்து கொள்ள நான் முடிவு செய்து விட்டேன். சற்று முன் இங்கு வந்த செம்பியன் மாதேவியிடம் சொல்லி அவருடைய ஆசியும் பெற்றுக் கொண்டோம். அமுதனுக்கு உடம்பு கொஞ்சம் குணமானதும் இருவரும் கோடிக் கரைக்குப் புறப்பட்டுப் போய்விடுவோம்......''

ஆழ்வார்க் கடியான் குறுக்கிட்டு, "ஆகா! நல்ல தீர்மானம் செய்தீர்கள்!

**ஆனாத செல்வத்து அரம்பையர்கள் தற்சூழ**
**வானாளும் செல்வமும் மண்ணரசும் யான்**
**வேண்டேன்**
**தேனார் பூஞ்சோலை திருவேங்கடச் சுனையில்**
**மீனாய்ப் பிறக்கும் விதியுடையே னாவேனே!**

என்று ஆழ்வார் அருளிச் செய்திருக்கிறார் அன்றோ? அதுபோல் நீங்களும் இந்த 'மண்ணரசு வேண்டாம்' என்று தீர்மானித்துக் கோடிக்கரைக் கடலில் மீன்களோடு மீன்களாக வாழலாம் என்று எண்ணினீர்கள் போலும்! ஆனாலும் யார் கண்டது? சிரஸிலே கிரீடத்தைச் சுமந்து சிங்காதனத்தில் வீற்றிருக்க வேண்டும் என்கிற விதி இருந்தால், அந்தப்படியே நடந்து தீரும். வேண்டாம் என்றாலும் விடாது!'' என்றான் ஆழ்வார்க்கடியான்.

"போதும் ஐயா, பரிகாசம்! எதற்காக இங்கு வந்தீர்கள் என்பதைச் சொல்லுங்கள்!'' என்றாள் பூங்குழலி.

"அம்மணி! தாங்கள் 'மண்ணரசு ஆளும்' ஆசையை மட்டும் விட்டொழித்திருக்கிறீர்களா? அல்லது தாங்களும் சேந்தன் அமுதனும் இந்த மண்ணுலகில் உயிரோடு வாழும் ஆசையையே விட்டொழித்து விட்டீர்களா? இதைத் தெரிந்து கொண்டு போகவே வந்தேன்!'' என்றான் வைஷ்ணவன்.

"இது என்ன கேள்வி? இம்மண்ணுலகில் இன்னும் சில காலம் வாழும் ஆசை எங்கள் இருவருக்கும் இருக்கிறது. இன்றைக்குத்தானே நாங்கள் திருமணம் செய்து கொள்ளத் தீர்மானித்திருக்கிறோம்? வைஷ்ணவரே! எங்களுக்கு வாழ்த்துக் கூறுங்கள்! அத்தான் விரைவில் குணமடையுமாறும் ஆசி கூறுங்கள்!'' என்றாள் பூங்குழலி.

"நான் வாழ்த்துக் கூறவும் ஆசி கூறவும் சித்தமாயிருக்கிறேன். ஆனால் என் வாழ்த்தும் ஆசியும் வீணாகப் போகலாகாது. உங்களிருவருக்கும் இவ்வுலகில் உயிரோடு வாழும் எண்ணம் இருந்தால், பாதாளச் சிறையிலிருந்தவர்கள் தப்பி ஓடுவதற்கு ஏன் உதவி செய்தீர்கள்?'' என்று கேட்டான் திருமலை.

பூங்குழலி முகத்தில் வியப்பை வருவித்துக் கொண்டு, "இது என்ன? எங்களுக்கு ஒன்றுமே தெரியாதே? யாரும் தப்பி ஓடுவதற்கு நாங்கள் உதவி செய்யவே இல்லையே?'' என்றாள்.

"கரிகாலரைக் கொன்றவன் என்று குற்றம் சாட்டப்பட்டுப் பாதாளச் சிறையிலிருந்த வந்தியத்தேவனும் மற்றொரு பைத்தியக்காரனும் இன்று தப்பிச் சென்று விட்டார்கள். அவர்கள் இந்த நந்தவனம் வரையில் வந்ததாகத் தெரிகிறது. பிறகு, இங்கிருந்து இரண்டு குதிரைகளில் இருவர் ஓடிப் போயிருக்கிறார்கள். இந்தக் குடிசைக்குப் பக்கத்தில் ஓரிடத்தில் மண்ணில் இரத்தம் சிந்தியிருக்கிறது. பலர் இந்த இடத்துக்கு

வந்து போன அடையாளங்களும் இருக்கின்றன. ஆகையால் நீங்கள்தான் தப்பி ஓடியவர்களுக்கு உதவி செய்திருக்க வேண்டுமென்று அனுமானிக்கப்படுகிறது. முதன் மந்திரி அநிருத்தருக்கு உங்கள் பேரில் உள்ள அபிமானத்தினால் என்னை அனுப்பி வைத்தார். கொடும்பாளூர் வேளாரின் ஆட்கள் வந்திருந்தால் உங்களை உடனே சிறைப்படுத்தியிருப்பார்கள்!" என்றான் ஆழ்வார்க்கடியான்.

"முதன் மந்திரிக்கும் உங்களுக்கும் மிக்க நன்றி. வைஷ்ணவரே! அத்தானுக்கு இன்னும் இரண்டு தினங்களில் உடம்பு சரியாகிவிடும். உடனே நாங்கள் புறப்பட்டுக் கோடிக்கரை போய் விடுகிறோம். அப்புறம் இந்தத் தஞ்சாவூர்ப் பக்கமே எட்டிப் பார்ப்பதில்லை. அதுவரையில் தாங்கள்தான் எங்களை இராஜ சேவகர்கள் யாரும் தொந்தரவு செய்யாமல் உதவி புரிய வேண்டும்!" என்று வேண்டினாள் பூங்குழலி.

"நான் உதவி புரிவதில் தடையில்லை. ஆனால் நீங்கள் உண்மையைச் சொல்ல வேண்டும்! இங்கே உங்கள் மூன்று பேரையுந் தவிர வேறு யாருமே வரவில்லையா?" என்று கேட்டான்.

"ஏன் வரவில்லை? இப்போது நீங்கள் வந்திருக்கிறீர்கள்! சற்று முன்னால் செம்பியன் மாதேவியும் இளவரசர் மதுராந்தகரும் வந்து அத்தானின் உடம்பைப் பற்றி அன்புடன் விசாரித்துவிட்டுப் போனார்கள். இப்போதுதான் தஞ்சாவூர்க் கோட்டையைச் சுற்றி எங்கே பார்த்தாலும் போர் வீரர்களின் நடமாட்டமாயிருக்கிறதே? யார் வந்தார்களோ, யார் போனார்களோ, எங்களுக்கு எப்படித் தெரியும்? வைஷ்ணவரே! நீங்கள் முதலில் கேட்ட கேள்விக்கு மட்டும் மறுமொழி நிச்சயமாகச் சொல்லுகிறேன். இங்கிருந்து தப்பிப் போவதற்கு நாங்கள் யாருக்கும் உதவி செய்யவில்லை......!"

"இது சத்தியமான வார்த்தையா?"

"ஆம்; சத்தியமாகச் சொல்கிறேன். இங்கிருந்து யாரும் தப்பி ஓடுவதற்கு நாங்கள் உதவி செய்யவில்லை!"

"அப்படியானால், சிறையிலிருந்து தப்பி ஓடி வந்த வந்தியத்தேவன் இந்தக் குடிசையிலேதான் இப்போது இருக்க வேண்டும்!" என்றான் திருமலை.

அவன் இவ்விதம் சொல்லி வாய் மூடுவதற்குள் சேந்தன் அமுதன் படுத்திருந்த கயிற்றுக் கட்டிலின் அடியிலிருந்து வேதனை நிறைந்த பரிதாபமான முனகல் சத்தம் கேட்டது. (தொடரும்)

# திரௌபதி சுயம்வரம்

"தனுவுண்டு காண்டீபம் அதன்பேர்!" என்றான். —பாரதியார்

நமக்குத் தெரிந்த ஒருவர் தூரத்தில் நடந்து வந்தால் அவர் நடையைக் கொண்டே அவர் இன்னார் என்று கண்டு பிடித்து விடலாம்.

அம்மாதிரியே, பிரபல எழுத்தாளர்களின் எழுத்து நடையைக் கொண்டே இன்னார் எழுதியதாகத்தான் இருக்க வேண்டும் என்று கண்டு பிடித்து விடலாம்.

இராமாயணம் மகாபாரத நாட்களில் நம் முன்னோர்கள் சிறந்த வில்லாளிகளின் அம்பு எய்யும் திறமையைக் கொண்டே 'இது இன்னார் எய்த அம்பு' என்று கண்டு பிடித்து வந்தார்கள்.

துரியோதனாதிகளின் இடையூறுகளினால் மாறு வேடம் தாங்கித் திரிந்து வந்த பஞ்ச பாண்டவர்கள் துருபதனுடைய நாட்டை அடைந்தார்கள். அவர்கள் சென்ற வேளை ராஜசபையில் திரௌபதிக்குச் சுயம்வரம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது!

தலைக்கு மேலே துவாரம் உள்ள ஒரு தட்டு சுழலும். அந்தத் தட்டுக்கு மேலே ஒரு மீன் இருக்கும். கீழே ஒரு தட்டில் தண்ணீர் இருக்கும். இந்தத் தண்ணீரில் சுழலும் தட்டிலுள்ள துவாரத்தின் நிழலையும், மீனையும் பார்த்துக் குறிவைத்து அம்பு எய்து அந்த மீனைக் கீழே வீழ்த்த வேண்டும். அப்படி வீழ்த்தும் வில்லாளிக்கே திரௌபதி மணமாலை சூட்டுவாள் என்று அறிவிக்கப்பட்டது.

பல ராஜ குமாரர்கள் முயன்றார்கள்! வில் வித்தையில் தேர்ச்சி பெற்ற பல வில்லாளிகள் முயன்றார்கள். யாராலும் இயலவில்லை.

கடைசியில் ஒரு பார்ப்பன இளைஞன் முன் வந்து, "நான் இந்தப் போட்டியில் கலந்து கொள்ளலாமா!" என்று கேட்டான். அதற்கு அனுமதி கிடைத்தது!

அந்தப் பார்ப்பன இளைஞன் கம்பீரமாக நடந்து சென்று, வில்லின் நாணை வளைத்துக் குறி பார்த்து, அம்பைத் தொடுத்தான்! குறி சிதறி விழுந்தது. திரௌபதி அவனுக்கு மாலை யிட்டாள்!

ஆனால் அங்கே கூடியிருந்த அரசர்களும் மற்ற வில்லாளிகளும் அந்த இளைஞன் வில்லை வளைத்து அம்பு விட்ட பாணியிலிருந்து, "இவன் பார்ப்பன வாலிபன் அல்ல! வில் வித்தையில் நிகரற்றவனான அர்ஜுனனாகவே இருக்க வேண்டும்!" என்றார்கள்.

உண்மை வெளிப்பட்டது!

இந்தத் திரௌபதி சுயம்வரக் காட்சியை நமது சித்திரக்காரர் 'சந்திரா' இவ்வாறு அட்டைப்படச் சித்திரமாகத் தீட்டி யிருக்கிறார்.


தமிழ்வாணன்
எழுதும்
புதிய தொடர் கதை
சங்கர்லால்
துப்பறிகிறார்
10-1-54
இதழ்
கல்கண்டில்
ஆரம்பமாகிறது
உங்கள் நண்பர்களிடம் சொல்லுங்கள்

ALL INDIA HANDLOOM BOARD

# கைத்தறி துணிகளை

## வாங்கி

### உங்கள் பரம்பரை கலாச்சாரத்தையும் கலைத்திறனையும் போற்றுங்கள்

நீங்கள் வாங்கும் ஒவ்வொரு கெஜம் கைத்தறித் துணியிலும் இந்தியாவின் — *உங்கள்* இந்தியாவின் — கலாச்சாரச் சரித்திரமே அடங்கியுள்ளது.

ஒரு பிரதானக் குடிசைத் தொழிலில் முக்கியமான அங்கம் வகிக்கும் நெசவாளரின் முன்னேற்றம் இந்திய கிராமங்களின் சுபீட்சத்திற்கு உதவி, கிராமிய பொருளாதாரத்தை நிலை நிறுத்துகிறது.

“இந்தியாவின் விமோசனம் குடிசைகளிலேயே உள்ளன”

— மகாத்மா காந்தி

வெளியிட்டவர்கள்

சென்டிரல் மார்கெடிங் ஸ்தாபனம், அகில இந்திய கைத்தறி போர்டு, இந்திய அரசாங்கத்தின் வர்த்தகம் & தொழில் மந்திரி இலாகா, 34, பாந்தியன் ரோடு, எழும்பூர், சென்னை

# திருத்தணியில் திருப்படி விழா

**எஸ். வி. எஸ்.**

ஒவ்வொரு ஆங்கில ஆண்டு முடியும் நாளன்று ஒரு பெரிய பக்த கோஷ்டி திருப்புகழ் மணி டி. எம். கிருஷ்ணஸ்வாமி அய்யரவர்கள் தலைமையில் திருத்தணிக்குச் சென்று, ஒவ்வொரு படியிலும் நின்று திருப்புகழ் பாடிக் கொண்டே. ஆண்டவனைத் தரிசனம் செய்து விட்டு, மறுநாள் காலை. புது வருஷ ஆரம்ப தினத்தில் ஆண்டவன் நினைவுடனேயே சென்னைக்குத் திரும்பி வருகிறது என்று கேள்விப் பட்டிருந்தேன். இதற்கு ரயில்வேக்காரர்கள் ஒரு விசேஷ ரயில் சென்னையிலிருந்து திருத்தணிகைக்கு விடுகிறார்கள் என்றும் கேள்விப்பட் டிருந்தேன். எனவே, எனக்கும் இந்தக் கோஷ்டியில் கலந்து கொள்ள வேண்டும் என்று வெகு நாட்களாக ஆசையிருந்தது.

டிசம்பர் 31உ காலை 6-மணிக்கு சென்டிரல் ஸ்டேஷனை அடைந்தேன். அப்பொழுது தான் இந்த விழா சம்பந்தமாக எல்லா ஏற்பாடுகளையும் செய்து வரும் ஸ்ரீமான் பாணியும் அங்கு வந்து சேர்ந்தார். அவர் என்னைக் கண்டதில் பெரு வியப்பு அடைந்தார். ஏனெனில் அவர் அவ்வளவு நிச்சயமாக இருந்தார் நான் வர மாட்டேன் என்று. "முருகன் திருவருள்தான் என்னையும் இந்த அடியார் கூட்டத்தில் சேர்த்து விட்டது!" என்று அடக்கத்துடன் அவரிடம் கூறினேன்.

"உண்மைதான்!" என்று கூறிக்கொண்டே என் கையில் ஒரு வட்ட வடிவமான அட்டையை ஒரு 'பின்' சகிதம் கொடுத்தார்! அதில் "17-வது வருஷத்திய திருப்புகழ் மணி திருத்தணி திருப்படி விழா" என்று அச்சிட்டிருந்தது!

'அப்பாடா! பதினேழு ஆண்டுகளாகவா இப்படியொரு விழா நடந்து வருகிறது!' என்று எண்ணி மலைத்தேன். ஆயினும், அதைக் காணும் பேறு எனக்கு இந்த முறைதான் கொடுத்து வைத்திருந்தது!


ஆண்டு தோறும் ரயில்வேக்காரர்கள் "திருத்தணி திருப்புகழ் மணி ஸ்பெஷல்" என்ற பெயருடன் டிசம்பர் 31உ காலை மூன்றாம் வகுப்புப் பெட்டிகள் (ஏழு அல்லது எட்டு பெட்டிகள்) அடங்கிய விசேஷ ரயில் விடுகிறார்கள். ஆனால் இந்த வருஷம் வடக்கே நடக்கவிருக்கும் கும்பமேளாவை உத்தேசித்து, திருத்தணிக்கு விசேஷ ரயில் விட முடியாது என்று முதலில் கூறி விட்டார்களாம். பின்னர் ஏதோ முருகன் திருவருளினால் விசேஷ ரயில் திருத்தணிக்கு விடப்படும் என்று தகவல் வந்ததாம்.

இதற்குப் போக வர டிக்கெட் சென்னையிலிருந்து ரூ. 2-8-0. இது 31உ காலை6-55க்குப் புறப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது.

காலை 5-45 லிருந்தே சென்னை சென்டிரல் ஸ்டேஷனில் அன்பர்கள் வந்து குழுமிய வண்ணம் இருந்தார்கள். நெற்றியில் பட்டை பட்டையாகத் திருநீறு அணிந்தவர்கள், வட்டச் சந்தனப் பொட்டு அணிந்தவர்கள்.

அடியார் திருக் கூட்டத்துடன் ஒலிபெருக்கியும் முன்னேறுகிறது!





ஓங்கார மண்டபத்தில் பக்தர் திருக்கூட்டம்

பிறைச் சந்திரன் போன்று கோபிசந்தனம் அணிந்தவர்கள். நீறு சந்தனம் அணிந்தவர்கள், கழுத்தில் ருத்திராட்ச மாலை அணிந்தவர்கள், நெற்றியில் பட்டை பட்டையாகத் திருமண் சாத்தி அதில் மையத்திலுள்ள ஸ்ரீசூரணத்தின் மேல் விபூதி யணிந்தவர்கள் —இப்படிப் பலர் வந்தவண்ண மிருந்தார்கள். பெண்கள் கூட்டத்துக்கும் குறைவில்லை.

இந்த மாபெரும் அடியார் கூட்டத்துக்கு ஆத்மாவாக விளங்கி வரும் திருப்புகழ் மணி அவர்கள் 6-50 க்கு பிளாட்பாரத்துக்கு வந்து ஒவ்வொரு பெட்டியாகச் சென்று தமக்கே உரிய அன்பு கனிந்த புன்முறுவல் பூத்து அடியார்களிடம் தாம் வந்து விட்ட சுபச் செய்தியைத் தெரிவித்தார்.

அன்பர்களும், ஐயரவர்களைப் பார்த்த மாத்திரத்தில் "அரோ ஹரா!" என்று கோஷமிட்டுத் தங்கள் மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் தெரிவித்துக் கொண்டார்கள்!

ஐந்து நிமிஷத்தில் ரயில் புறப்பட்டது! புறப்படும் பொழுதே பெட்டிக்குள்ளிருந்த அன்பர்கள் "அரோ ஹரா!" என்று உற்சாக மிகுதியால் கோஷமிட்டார்கள். வண்டி பிளாட்பாரத்தை விட்டுக் கடக்க இருந்தது. பிளாட்பாரத்தின் முனையில் வெள்ளை நிஜாரும், வெள்ளைக் கோட்டும் அணிந்திருந்த ரயில்வே அதிகாரி யொருவர் "திருத்தணி முருகனுக்கு அரோஹரா!" என்று கோஷமிட்டு வழியனுப்பிய காட்சி கண் கொள்ளாக் காட்சியாக இருந்தது!

சென்னைக்கும் திருத்தணிக்கு மிடையில் திருவள்ளூரிலும், அரக்கோணத்திலும் தான் வண்டி நின்றது. வேறு எங்கும் நிற்காமல் வண்டி சென்றதால் அடியார்கள் பஜனைகளில் ஈடுபட்டனர். இதற்கு உதவும்படியாகப் பல வியாபாரிகள் முருகன் நாமாவளியை அச்சிட்ட பல துண்டுப் பிரசுரங்களை எல்லோருக்கும் வழங்கி யிருந்தார்கள்! விளம்பரத்துக்கு விளம்பரம்! புண்ணியத்துக்குப் புண்ணியம்!

ரயில் திருத்தணி ரயிலடியைச் சரியாய் ஒன்பது மணிக்கு வந்தடைந்தது. ரயில்வே ஸ்டேஷனிலேயே, திருப்புகழ் மணியை வரவேற்கப் பல அன்பர்கள் கூடி யிருந்தார்கள்! திருப்புகழ் மணி அவர்களுக்கு மலர் மாலைகளும்,

"வருவீர் வருவீர்
குருமணியே,
தருவீர் திருப்புகழ்
தவமணியே!"

என்று பல பாமாலைகளும் சூட்டி, அந்தரங்க அன்புடன் வரவேற்றார்கள்!

பிறகு திருப்புகழ்மணி அவர்கள் "வாக்குண்டாம்" என்ற ஔவையாரின் பிள்ளையார் வாழ்த்துப் பாவுடன் விழாவை ஆரம்பித்து வைத்தார்கள்.

அதாவது திருத்தணி ரயில்வே நிலையத்திலிருந்து மலையடிவாரம் வரை அருணகிரியாரின் திருப்புகழ், கந்தரனுபூதி, கந்தரலங்காரம், சித்தர் பாடல்கள், நால்வர் பாசுரங்கள் ஆகியவற்றைப் பாடிக் கொண்டும், விளக்கிக் கொண்டும், நாம சங்கீர்த்தனம் செய்து கொண்டும் செல்வது விழாவின் முதற் பகுதி. இது ஒன்பது மணிக்கு ஆரம்பித்து ஒரு மணிக்கு முடிந்தது! ரயில் நிலையத்திலிருந்து மலையடி வாரத்திலிருந்த சத்திரம் ஒன்றரை மைல்தான் இருந்தது! ஆண்டவன் புகழ் பாடிக் கொண்டு வருவதில் இத்தனை நேரம் ஆகிறது!

இப்படித் தெருவெல்லாம் பாமாலைகளைப் பாடிச் செல்வதை ஆயிரக்கணக்கான அன்பர்கள் நீண்ட நெடுந் தூரத்துக்கு நின்று அந்த மண்டை வெடிக்கும் வெய்யிலைப் பொருட்படுத்தாது கேட்டுக் கொண்டும் பாடிக் கொண்டும் வருவதைக் காணும் பொழுது ஏதோ ஒரு சக்திதான் அத்தனை பேர்களையும் அப்படி ஈர்த்துச் செல்கிறது என்பது நிதர்சனமாகத் தெரிகிறது. இப்படித் தெருவில் பாடிச் செல்வதை யாவரும் நின்ற இடத்தில் கேட்கும் வண்ணம் கூடவே நகர்ந்து செல்லும்படியாக ஒலி பெருக்கி ஏற்பாடு செய்யப்பட்டிருந்ததைக் கண்டு யாரும் வியக்காமலிருக்க முடியாது! ஒலி பெருக்கி வேலை செய்யும் யந்திரம் ஒரு மாட்டு வண்டியில் கூடவே சென்றது! திருப்புகழ் மணி அவர்கள் வாயின் அருகில் 'மைக்'கை வைத்

துக் கொண்டு கூடவே தொண்டர்கள் நடந்து சென்றார்கள்.

திருத்தணிக்கு அன்று எல்லாம், இந்த ஸ்பெஷல் ரயிலில் தவிர, பின் வண்டிகளிலும், பஸ்களிலும் அண்டையிலுள்ள பல ஊர்களிலிருந்தெல்லாம் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் வந்த வண்ணமாக இருந்தார்கள்! பஜனை கோஷ்டிகளுக்கும் கணக்கில்லை!

அன்றைய விழாவின் இரண்டாம் பகுதி மாலை ஆறரை மணிக்கு ஆரம்பமாகியது! இதற்குத்தான் திருப்படி விழா என்று பெயர்.

மூந்நூற்றைம்பது படிகள் கொண்ட திருத்தணி மலையில் ஏறும் பொழுது திருப்புகழ் மணி அவர்கள் முன்பெல்லாம் படிதோறும் நின்று திருப்புகழ் பாடிக் கொண்டு செல்வது வழக்கமாம். ஆனால், இப்பொழுது கூட்டம் அதிகமாகி விடவே நின்று பாடச் சௌகரியமில்லாததினால் பாடிக்கொண்டும் நாமாவளி பஜனை செய்து கொண்டும் ஏறி விடுகிறார்கள். ஆனாலும் மண்டபம் தோறும் நின்று சற்று நாம சங்கீர்த்தனம் செய்யாமற் மேலே செல்வதில்லை.



பிராகாரத்திலுள்ள மண்டபத்தில் நாமசங்கீர்த்தனம்


மலைமீது செல்லும் வழியில் ஒரு மண்டபத்தில் 'ஓம்' என்ற வடிவத்தில் கற்பூரத்தை வைத்து அதை ஏற்றி ஜோதி ஸ்வரூபமான அந்தப் பிரணவத்தை வணங்கிவிட்டு மேலே செல்கிறார்கள். இதனாலேயே அந்த மண்டபத்துக்கு ஓங்கார மண்டபம் என்ற பெயர் விளக்கலாயிற்று.

படி ஏறிக் கடந்தவுடன் கோவில் வெளிப் பிராகாரத்திலுள்ள மண்டபத்தில் பேச்சும், பாட்டும், பஜனாவளியும் ஆரம்பமாகியது. ஆயிரக்கணக்கில் மக்கள் பிராகாரத்தின் வெட்ட வெளியில் அமர்ந்து கேட்கலானார்கள். ஒரு இடத்தில் திருப்புகழ்மணி அவர்கள் முருகனுடைய நாமத்தைச் சொல்லும்படி அடியார்களைக் கேட்டுக் கொண்டு "முருகா—முருகா—முருகா" என்றார்.

அப்படியே அங்கே கூடியிருந்தவர்கள் அனைவரும் சொன்னார்கள். இப்படித் திருப்புகழ் மணி அவர்கள், 20, 30 தடவை வெவ்வேறு இடங்களில் சங்கதிகளையும் கார்வை

தெருவெல்லாம் முருகன் திருப் புகழ் ஒலிக்கிறது !







பிரசித்தி பெற்ற

**டால்டா**

**சமையல் புத்தகத்தில்**

தரப்பட்டுள்ள 300 ருசிமிக்க
தின்பண்டங்களில் இது ஒன்று



சிறந்த தின்பண்டங்களைத் தயாரிப்பதற்கான 300 செய்முறைக்குறிப்புகள், சமையலறை பராமரிப்பு முதலிய உபயோகமான விவரங்கள் இப்புத்தகத்தில் அடங்கியுள்ளன. ஆர்ட் காகிதத்தில் அச்சடித்ததும், பல சித்திரங்கள் அடங்கியதுமான டால்டா சமையல் புத்தகம்' இப்பொழுது தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, வங்காளி என்ற பாஷைகளில் கிடைக்கிறது.

**ரூபாய் இரண்டு தான்**

தபால் செலவு அணா 12/- தனி

உங்கள் பிரதிக்கு இன்றே எழுதுங்கள்

**தி டால்டா அட்வைஸரி ஸர்விஸ்**

தபால்பெட்டி நெ. 353, பம்பாய் 1

HVM. 213-X6 TM

யும் கொடுத்து நாம சங்கீர்த்தனம் செய்த போது முருக பக்தர்கள் அதே மாதிரி பாடியதைக் கேட்டுத் திருப்புகழ் மணி மெய் சிலிர்த்தார்கள். "பக்தியினால் சங்கீதம் கூடக் கிட்டிவிடும் என்பது நிதர்சனமாகத் தெரிகிறது" என்று கூறினார்கள்.

நாங்கள் அன்று மத்தியானமே கோயிலுக்குள் சென்று சுவாமி தரிசனம் செய்து விட்டதனால் இரவு 9-30 மணிக்கு மலையை விட்டுக் கீழே இறங்கினோம். வழி யெல்லாம் இன்னும் பல பஜனை கோஷ்டிகள் மேலே வந்த வண்ண மிருந்தன! அடிவாரம் வரைக்கும் இப்படிப் பல கோஷ்டிகள். ஏன், அதற்கு மேலும் ஒரே பக்தஜனக் கூட்டம்!

ஆம், அன்றைக்கு வந்த கூட்டத்தைக் கணக்கெடுத்தால் சுமார் லட்சம் பேர்களுக்கு மேலிருப்பார்கள் என்று ஒரு அன்பர் கூறினார்.

"மற்ற உற்சவ நாட்களில் கூட்டம் எப்படி யிருக்கும்?" என்று அவரைக் கேட்டேன்.

"அப்பொழுது கூட இவ்வளவு கூட்டமிருக்கும்; இதற்கு மேலும் இருக்கும். ஆனால் அப்பொழுதைய கூட்டத்திற்கும் இப்பொழுதைய கூட்டத்திற்கும் ஒரு வித்தியாசம்!" என்று கூறினார்.

"என்ன?" என்று கேட்டேன்.

"இந்தக் கூட்டத்திலுள்ளவர்களில் அநேகமாக எல்லாருமே படித்தவர்கள்" என்றார்.

'படித்தவர்கள்' என்று சொல்லிக் கொள்பவர்கள் எதையும் எளிதில் நம்புவதில்லை. நம் நாட்டுக் கலை, கோயில், பக்தி முதலியவற்றை அவர்களுக்கு உணர்த்தி அதன் ஏற்றத்தை உணரச் செய்வதற்குப் பலர் கஷ்டப்பட்டிருக்கிறார்கள். திருப்புகழ் மணியோ ஒரு சிரமமு மில்லாமல் எத்தனையோ ஆயிரக்கணக்கான படித்தவர்களை "முருகா, முருகா, முருகா!" என்றும் "அரகரோ ஹரா — ஸ்வாமி — அரகரோ ஹரா" என்றும் தங்களை மறந்து சொல்லச் செய்திருக்கிறார்கள்!

கடைசியாக ஒரு வார்த்தை. தமிழ்க் கடவுளாகிய முருகப் பெருமான் எழுந்தருளியிருக்கும் திருத்தணி' தற்சமயம் 'தகராறுக்குரிய பிரதேசம்' என்ற நாமகரணம் சூட்டப்பட்ட பிரதேசத்தில் விளங்குகிறது! ஆனால் சாதாரணமாகத் திருத்தணிக்குச் செல்பவர்களே அங்கு வாழும் மக்கள் அனைவரும் தமிழர்கள்தான் என்பதை எளிதில் அறிந்து கொள்ளலாம். மேலும் இந்தத் திருப்படி விழாவுக்கு வந்தவர்கள் அத்தனை பேரும் தமிழர்கள்! அப் பகுதி மக்கள் திருத்தணி தமிழ் நாட்டுடன் சேர்ந்து விட வேண்டியதன் நியாயத்தை நிரூபிக்கப் பெருமுயற்சி எடுத்து வருகிறார்கள்! முயற்சியும், திருத்தணி முருகன் திருவருளும் நம் பக்கம் இருக்கிறது என்ற தைரியத்துடன் 1—1—54 காலை 6-15 மணிக்கு ஸ்பெஷல் ரயிலில் திருத்தணியை விட்டுப் புறப்பட்டேன்.

"லலிதா! நான் கோவிலுக்குப் போய் விட்டு வருகிறேன். நீ வீட்டைப் பத்திர மாகப் பார்த்துக் கொள்கிறாயா?" என்றாள் லலிதாவின் தாயார்.

"ஆகட்டும், அம்மா! நீ சீக்கிரம் வந்து விடு" என்று கூறி விட்டு லலிதா ஒரு பாப்பா மலர் கதைப் புத்தகத்தை எடுத்து வைத்துக் கொண்டு உட்கார்ந்தாள். அவள் அம்மா கோவிலுக்குப் போய் விட்டாள். லலிதா மட்டும் தனியாக இருந்தாள்.

கதையில், பூதம் ராஜ குமாரி ஒருத்தியைத் தூக்கிக் கொண்டு போகும் இடத்தில் வந்ததும் அவளுடைய கவனம் நின்றது. ஏதோ ஒரு பயம் அவளை மேலே படிக்கவொட்டாமல் தடுத்தது. படிப்பதை நிறுத்தி விட்டுச் சுற்று முற்றும் ஒரு தடவை பார்த்தாள் லலிதா. தனிமை அவளுக்கு மிகுந்த பீதியை அளித்தது. ஆனால் மனம் விட்டு, "பூதமாவது, கீதமாவது! வெறும் பிரமை! நம்மை என்ன செய்து விடும்!" என்று தனக்குள் சமாதானம் செய்து கொண்டாள் லலிதா.

மேலே கதையைப் படிப்பதில் அவள் கவனம் செலுத்தினாள். ஆனால் என்ன அதிசயம்! எழுத்துக்களெல்லாம் வரவரப் பெரிதாகிப் பூதமாக அவளுக்குக் காட்சியளித்தன. அடுத்த கணம் அந்த எழுத்துக்களிலிருந்து ஒரு பூதம் உருவெடுத்தது.

அந்தப் பூதம் பயங்கரமாக, "ஏ, பெண்ணே! என்னை எவ்வளவு அலட்சியமாக நினைத்தாய்? உன்னை என்ன செய்கிறேன், பார்!" என்று கூறியது. லலிதா 'ஹோ' என்று கூக்குரலிட்டாள். ஆனால் அந்தப் பூதம் அவளைத் தூக்கிக் கொண்டு அங்கிருந்து கிளம்பியது. அவள் எவ்வளவு கதறியும் பூதம் அவளிடம் சிறிதும் இரக்கம் காட்டவில்லை. பூதம் அந்தச் சிறுமியுடன் பாதாளத்திலுள்ள பூத ராஜாவின் முன்னிலையில் போய் நின்றது.

"யார் இந்தப் பெண்? எதற்காக இவளைத் தூக்கிக்கொண்டு வந்தாய்?" என்று கேட்டது பூத ராஜா.

"அரசே! இவள் நம் பூத குலத்தையே இழிவாகப் பேசி விட்டாள். அதனால்..."

"அப்படியா? சரி! இவளைச் சிறையில் கொண்டு போய்த் தள்ளுங்கள்" என்று கட்டளையிட்டது பூத ராஜா.

"அரசே! நான் ஒரு குற்றமும் செய்யவில்லை!" என்று மன்றாடினாள் லலிதா.

"மன்னனே! இவள் நம்மைப் பூதமாவது கீதமாவது என்று அலட்சியப் படுத்தினாள்" என்று கூறியது பூதம்.

"பார்த்தாயா? நீ குற்றம் செய்து விட்டுப் பின் பொய் வேறு சொல்கிறாயே? உனக்குரிய தண்டனையை நீ அநுபவித்துத்தான் தீர வேண்டும்" என்றது பூதராஜா.

பூதங்கள் அவளை இழுத்துச் சென்று சிறையில் தள்ளின. சிறையில் தன்னைப்போல் மற்றொரு பெண் இருப்பதைப் பார்த்ததும் அவள் பயம் சிறிது தணிந்தது.




"நீயும் என்னைப் போல் துரதிர்ஷ்டம் பிடித்தவள் தானா?" என்று லலிதாவைக் கட்டிக் கொண்டு அந்தப் பெண் அழுதாள்.

"உன்னை ஏன் பூதம் சிறையில் அடைத்து விட்டது?" என்று லலிதா அந்தப் பெண்ணைக் கேட்டாள்.

"நான் மகிழ்புரி மன்னனின் பெண். ஒரு நாள் தோட்டத்தில் விளையாடிக் கொண்டே அடர்ந்த மரங்களுக்கிடையிலிருந்த ஒரு காய்ந்த ஆலமரத்தின் அருகில் சென்று விட்டேன். அப்பொழுது என்

தோழிகள், 'ஐயோ! அந்த ஆலமரத்தின் அருகில் போய் விடாதே! பூதமிருக்கிறது. உன்னைப் பிடித்துப் போய்விடும்' என்றனர். பூதம் என்னை என்ன செய்து விடும் என்று அதை நெருங்கினேன். என் தோழிகள் என் கையைப் பிடித்து அரண்மனைக்குள் இழுத்துச் சென்றனர். எனக்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. அடுத்த நாள் அந்தப் பூதம் வாழும் ஆலமரத்தை வெட்டச் செய்தேன். பூதம் உள்ள ஆலமரத்தை ஒழித்துக் கட்டிய பிறகுதான் என் கோபம் அடங்கியது. அதற்குப் பிறகு அந்த இடத்தில் தைரியமாக விளையாடுவதற்குத் தோழிகள் மறுத்து விட்டனர். நான் மட்டும் தனியாகச் சென்று ஆலமரமிருந்த பள்ளத்தில் எட்டிப் பார்த்த போது திடீரென்று ஒரு பெரிய கை என்



னைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டது. அதிலிருந்து விடுவிக்க நான் செய்த முயற்சிகள் பலிக்கவில்லை. 'பூதத்தினிருப்பிடத்தை அழித்த உனக்கு என்ன தண்டனை கிடைக்கப் போகிறது, பார்!' என்று கூறி அந்தப் பள்ளத்திலுள்ள பூதம் என்னை இந்தப் பாதாளத்துக்குக் கொண்டு வந்து விட்டது. பூத ராஜா எனக்குச் சிறைத் தண்டனை கொடுத்து விட்டார்!'' என்று கூறினாள் ராஜகுமாரி.

"நாம் இங்கிருந்து தப்பிப் போக முடியாதா?'' என்று கேட்டாள் லலிதா.

"எனக்குத் துணிகளில் பூவேலை செய்யத் தெரியும். அதில் நான் பாதாளத்தில் அடைபட்டிருப்பதையும் உடனே படையுடன் வந்து விடுவிக்க வேண்டும் என்று அலங்காரமாக எழுதலாம். நமக்குச் சாப்பாடு கொண்டு வரும் பூதத்தினிடம் 'இதை மகிழபுரி மன்னனிடம் கொடுத்தால் பூப் பட்டு ஆடைக்காக நிறையப் பணம் தருவான்' என்று கூறிக் கொடுக்கலாம். பூதத்துக்குப் பணம் என்றால் ஆசை. நாமும் விடுதலையடைந்து விடலாம்.''

"ஆகா! நல்ல யோசனை. இன்றைக்கே அதைக் காரியத்தில் நிறைவேற்றலாம்'' என்று கூறினாள் லலிதா.

ராஜகுமாரி சிறிய துணியில் எழுத்துத் தெரியாமல் பூவேலை புனைந்து பூதத்தினிடம் கொடுத்து அனுப்பினாள். பூதமும் பணத்தாசையினால் அதை மகிழபுரி மன்னனிடம் எடுத்துச் சென்றது.

மகிழபுரி மன்னன் ஒரு படையைப் பூதராஜாவைத் தோற்கடித்துத் தன் குமாரியை மீட்டு வர அனுப்பினான்.

பூதராஜா அதன் மீது மகிழபுரி மன்னன் படையெடுத்து வருகிறான் என்று கேள்விப் பட்ட பொழுது அதற்கு வந்த கோபத்துக்கு அளவில்லை. சிறையிலிருந்த ராஜகுமாரியையும் லலிதாவையும் அழைத்து வரச் செய்தது.

"நீங்கள் செய்த ஏதோ தந்திரத்தினால் தான் மகிழபுரி மன்னன் எங்கள் மீது படையெடுத்து வர முடிந்தது. உங்கள் இருவரையும் சிரச்சேதம் செய்யப் போகிறேன்'' என்றது பூத ராஜா.

"எனக்குத் தெரியாது. நான் தவறு செய்யவில்லை. எல்லாம் இந்த ராஜகுமாரி தான்'' என்று கதறினாள் லலிதா.

கோவிலுக்குப் போய்விட்டுத் திரும்பி வந்த லலிதாவின் அம்மா, "என்னடி? என்ன கத்துகிறாய்?'' என்றாள்.

லலிதா அப்பொழுதுதான் தூக்கக் கலக்கத்திலிருந்து விடுபட்டு, "நான் எங்கே இருக்கிறேன்? எனக்கு ஒன்றும் ஆபத்து நேரவில்லையே?'' என்றாள்.

"நீ வீட்டிலேதான் இருக்கிறாய்! நீ ஏதாவது கெட்ட சொப்பனம் கண்டாயா?'' என்று கேட்டாள் லலிதாவின் அம்மா.

"ஒன்றுமில்லை. பூதம் வந்து என்னைத் தூக்கிக் கொண்டு போனமாதிரி......''

"பார்த்தாயா? இரவிலே பூதக் கதையெல்லாம் படிக்காதே என்றால் கேட்டால் தானே? இனிமேலாவது படிக்காமல் இரு'' என்று புத்திமதி கூறினாள் அவள் அம்மா.

"ஆகட்டும், அம்மா!'' என்று லலிதா தலையசைத்தாள். அப்பொழுது தான் அவளுக்குப் பயம் நீங்கியது.

### உண்மையான

# ஹேர் டானிக்

### (கூந்தல் தைலம்)

கடைகளில் எவ்வளவோ கூந்தல் தைலங்கள் இருக்கின்றன. ஆனால் கோத்ரெஜ் கூந்தல் டானிக்கில் உள்ள **ஜி-11 (G-11)** தனிச்சிறப்பு வாய்ந்தது.


ஜி-11 என்னும் உலகப் பிரசித்திபெற்ற கிருமிநாசினி 1941-ஆம் வருஷம் கண்டுபிடிக்கப்பட்டது. விஞ்ஞான உலகத்தில் இதற்கு ஹெக்ஸாக்ளோரஃபேன் (டைஹைட்ராக்ஸி-ஹெக்ஸாக்ளோரோ-டைபெனில்-மீதேன்) என்று பெயர். இது ஒரு சிறந்த மென்மையான ரசாயனப் பொருள். இதை வாசனைத் திரவியங்களுடன் கலந்தாலும் கிருமிகளை அழிக்கும் இயல்பும் நாற்றத்தைப் போக்கடிக்கும் தன்மையும் கெடாமல் இருக்கின்றன என்று நிரூபிக்கப்பட்டது. சருமத்தின்மேல் உள்ள கிருமிகளை அழிப்பதில் வியக்கத்தக்க பலன் இதில் இருப்பது விசேஷ அம்சம். 33-வருஷங்களுக்கு முன்பு முதன் முதலாக தாவர எண்ணெய் டாய்லட் சோப்புக்களைத் தயாரிப்பதில் முதன்மை ஸ்தானம் பெற்றவர்கள் கோத்ரெஜ். ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் நல்ல பலனை அளித்த புகழ்பெற்ற ஜி-11 கலந்த அலங்காரப் பொருள்களைத் தயாரிக்கும் பூரண உரிமையைப் பெற்று இந்தியாவுக்கு இப்பொருள்களைக் கொடுக்கிறார்கள் இவர்கள்.

**இந்த உண்மையான**

**கூந்தல் டானிக் . . .**

தினந்தோறும் உபயோகப்படுத்தி வந்தால் பொடுகுவிழுவதை நிறுத்துகிறது. ஆம், கோத்ரெஜ் கூந்தல் டானிக்கில் உள்ள ஜி-11 தான் உங்கள் கூந்தலுக்கு பளபளப்பையும் ஆரோக்கியமான வளர்ச்சியையும் கொடுக்கிறது. கண்ணுக்குக் கெடுதல் தராத அபூர்வமான ஜி-11 கலந்த 'விந்தால்' டாய்லட் சோப்பால் உங்கள் கூந்தலைக் கழுவினால் இன்றும் சிறந்த பலனைப் பெறுவீர்கள்.

பொடுகு என்பது கூந்தலையும் மண்டைச் சருமத்தையும் பாதிக்கும் நோய். அசட்டையாக இருந்தால் வழுக்கையும் பலவிதமான சரும நோய்களும் உண்டாகும்.





தேர்ந்தெடுக்கப்பட்ட தாவர எண்ணெய்களுடன் சேர்க்கப்பட்ட ஜி-11ஐ உடைய (க்ளோரோபில் அல்ல) ஒரே


**கோத்ரெஜ் ஹேர் டானிக்**

மினுமினுக்கும் கோத்ரெஜ் கூந்தல் டானிக் ஹெக்ஸாக்ளோரஃபேனை உடையது. இதன் மகிழ்ச்சிதரும் நறுமணம் எந்தவிதமான தலை அலங்காரத்தையும் ஜடையையும் மேம்படுத்தும்.

**ரூ. 1-6 வரிகள் தவிர 4 oz. மற்றும் 1-பு. பாட்டில்கள்.**

ரிஜிஸ்டர்டு **கோத்ரெஜ்** சோப்ஸ், லிமிடெட்.

அங்கத்தினர் : இந்தியன் சோப் அண்ட் டாய்லட்ரீஸ் மேக்கர்ஸ் அஸோஸியேஷன்



# ஏ.சி.சி சிமெண்ட்

நீலகிரி
பிராண்டு
சிமெண்ட்

## உங்கள் கட்டிடத் தேவைகளுக்கு இப்பொழுது கிடைக்கிறது.

ஒரு சிறு வீடு, பங்களா, பல வீடுகள் அடங்கிய கட்டிடம், தொழிற்சாலை, பண்டகசாலை, தொழிலாளிகள் வசிக்க வீடுகள், கிணறு, தொழுவம், தானியக் குதிர், நீர்ப்பாசனக்கால்வாய் இவை எதையும் உறுதியாகக்கட்ட பயன் படும் சிறந்த வஸ்து சிமெண்ட். பிரிட்டிஷ் ஸ்டாண்டர்ட் நிபந்தனைகளுக்கு ஓரளவு மிஞ்சியே நிற்கும் ஏசிசி சிமெண்டு இப்பொழுது தாராளமாகக் கிடைக்கிறது.

உங்கள் தேவைக்கு இன்றே எழுதுங்கள். அருகாமையிலுள்ள சி.எம்.ஐ. ஸ்டாகிஸ்டு அல்லது வியாபாரியிடம் அல்லது நேராகவே

**தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி ஆப் இந்தியா லிட்.,**

| | | |
|---|---|---|
| 9, மௌண்ட் ரோடு | 4/12, ரேஸ் கோர்ஸ் ரோடு | ஷுகர் கம்பெனி பில்டிங் |
| மதராஸ். | கோயமுத்தூர் | பெங்களூர் |

கான்கிரீட் உபயோகித்து கட்டுவது சம்பந்தமான எல்லா பிரச்னைகளுக்கும் தி கான்கிரீட் அஸோஸியேஷன் ஆப் இந்தியா 9, மௌண்ட் ரோடு. மதராஸ். அல்லது ஷுகர் கம்பெனி பில்டிங், பெங்களூர் என்ற விலாசத்திற்கு எழுதி தொழிற்நுட்ப ஆலோசனைகளை இலவசமாகப்பெறுங்கள்.

ஏ சி சி

இவர்களின் வியாபார மானேஜர்கள்
தி சிமெண்ட் மார்க்கெட்டிங் கம்பெனி
ஆப் இந்தியா லிமிடெட்.

SISTA'S CMI 148 TAMIL



# மன்னி வந்தாள்!

ரா. பாலகிருஷ்ணன்

ரகுபதி தன் காரியாலயத்தை விட்டுக் கிளம்பும் தருவாயில் வேலைக்காரன் கந்தசாமி அவனை அணுகி ஒரு கும்பிடு போட்டான். அவன் ஏதோ கேட்கத் தயங்கி நிற்கிறான் என்பது ரகுபதிக்கு விளங்கியது.

"என்ன, கந்தா! என்ன விசேஷம்!" என்று பரிவுடன் விசாரித்தான் ரகுபதி. அவன் குரலின் நயம் கந்தசாமிக்குத் தன் கோரிக்கையை வெளியிடத் தைரிய மூட்டியது.

"ஒரு பத்து ரூபாய் இருக்குமா, ஸார்! சம்பளம் வந்தவுடன் கொடுத்து விடுகிறேன். என் பெண்சாதிக்கு இது பிரசவ சமயம். பணம் கொடுத்தால் ரொம்ப ஒத்தாசையா யிருக்கும். இப்போது கிடைச்சதுன்னு..." என்றான் கந்தசாமி.

கந்தசாமி அனாவசியமாக யாரையும் கடன் கேட்பதில்லை என்பது ரகுபதிக்குத் தெரியும். பிரசவச் செலவுக்கு என்று பணம் கேட்கிறான் அவன் என்றதும் ரகுபதியின் மனசு இளகி விட்டது. பர்ஸைத் திறந்து ஒரு பத்து ரூபாய் நோட்டை எடுத்து அவனிடம் கொடுத்து விட்டு, "உன் சம்சாரத்தை அழைத்துக் கொண்டு மாமனார் வீட்டுக்குப் போகப் போகிறாயாக்கும்! அப்படியானால் நாளைக்கு ஆபீசுக்கு வரமாட்டாயா!" என்றான்.

இதைக் கேட்டுக் கந்தசாமி வாய் விட்டுச் சிரித்தான். "மாமியாரு வீடா! எனக்கு மாமியாரும் இல்லே, மாமனாரும் இல்லீங்க! அது — என் பெண்சாதி—ஒரு அனாதைங்க! நான்தான் அவளுக்கு எல்லாம்" என்று சொல்லிவிட்டுப் பணத்தைப் பெற்றுக் கொண்டு கும்பிடு போட்டுச் சந்தோஷத்துடன் போய்விட்டான் கந்தசாமி.

"அனாதை! அவளுக்கு நான்தான் எல்லாம்!" என்று கந்தசாமி சற்று முன்பு கூறிய வார்த்தைகள் இன்னும் ரகுபதியின் காதுகளில் ஒலித்துக்கொண்டிருந்தன. ஆகா! கந்தசாமி பெற்ற பாக்கியம்கூட எனக்குக் கிட்டவில்லை. ஏன், என் மனைவியும் ஒரு அனாதையாக இருந்திருக்கக் கூடாது! அப்படியிருந்திருந்தால் என் வாழ்க்கை எவ்வளவோ இன்பகரமா யிருக்குமே! அதைப் பற்றி இப்போது எண்ணிப் பயன்! உண்மையில் அவன் மனைவி அனாதையா! இல்லவே இல்லை. பெற்றோரை இழந்தவள் என்று வேண்டுமானால் கூறமுடியுமே யொழிய அனாதை என்று சொல்லுவது பிசகல்லவா! கணவனைத் தெய்வமாகப் பாவிக்கும் மேலான பண்பின் அடிப்படையிலே உருவாகியதல்லவா நமது சமூகம்! 'அவளுக்கு நான் தான் எல்லாம்' என்று கந்தசாமி கூறியது தான் சரி! அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால் என் விஷயத்தில்...!

இதே சிந்தனையுடன் ரகுபதி வழியில் எதிர்ப்பட்ட ஒரு ஹோட்டலுக்குள் நுழைந்தான். சூடான காப்பி உள்ளே சென்றதும் அவன் மூளை தீவிரமாக வேலை செய்யத் தொடங்கியது. 'கந்தசாமியைப் போல எனக்கும் மாமனார், மாமியார் என்று யாருமே இல்லாமலிருந்தால் லலிதா இப்படியா இருப்பாள்! ஒரு லட்சிய மனைவி எப்படி இருப்பாளோ, அதே போலப் புருஷனை விட்டே கதி என்று கிடப்பாளே! அடிநிலத்தில் பிறந்த வீடு இருப்பதால் தானே இப்படிக் காடாறு மாதம்

விடாது மாசம் என்று நாடகமாடிக் கொண்டிருக்கிறான், இவன்! ஹூம், என் தலைவிதி!

ரகுபதியின் சிந்தனை தெளிவு பெறவில்லை. அந்தக் குழப்பத்துக்கு ஒரு முடிவு கட்டவும் முடியவில்லை அவனால். அருவருப்பான விஷயங்களை எவ்வளவுதான் மறக்க முயன்றாலும் நீருக்குள் அமிழ்த்திய கட்டை போல மேலே மேலே கிளம்பிக் கொண்டிருக்கிறதே யொழிய அமுக்கிவிட முடிகிறதில்லையே! தனக்குக் கல்யாணமானது முதல் அந்த நிமிஷம் வரையில் நிகழ்ந்த பல சம்பவங்கள் அவன் மனத்திரையில் நிழலாடின. மனம் நிம்மதி யிழந்து தவிக்கவே, அந்த நிலைமையில் நேரே வீட்டுக்குப் போக விருப்பமில்லை அவனுக்கு. வழியிலிருந்த சினிமாக் கொட்டகை ஒன்றில் நுழைந்தான்.

அவன் டிக்கட் வாங்கிக் கொண்டு உள்ளே நுழைந்த போது படம் ஆரம்பமாகி விட்டது. உள்ளே சூழ்ந்திருந்த அந்தகாரம் அவனுடைய அப்போதைய மன நிலைக்கு ஏற்றதாயிருந்தது. தட்டுத் தடுமாறிக் காலியாயிருந்த நாற்காலி ஒன்றைத் தேடிப் பிடித்து உட்கார்ந்தான்.

அவன் அமர்ந்திருந்த வரிசைக்கு முன் வரிசையில் உட்கார்ந்திருந்த சிறு குடும்பம் அவன் மனத்தைக் கவர்ந்தது. ஒரு கணவன், மனைவி, இரு குழந்தைகள் அடங்கிய அந்தக் குடும்பத்தைப் பற்றிக் குறிப்பிடும்படியாக எதுவுமில்லை. ஆயினும் படத்தைப் பார்த்து இருவரும் மகிழ்ந்த விதமும் குழந்தைகள் இருவரும் சேர்ந்து சிரித்ததும் அந்தக் குடும்பத்தில் நிலவிய மகிழ்ச்சியையும் அமைதியையும் வெளிப்படுத்தியது. படத்தில் வந்த ஒரு சம்பவம் பற்றி அந்தத் தம்பதி ஒருமித்த அபிப்பிராயம் கூறிச் சம்பாஷணை செய்தது. "நீயுந்தான் இருக்கிறாயே!" என்று அவனைப் பார்த்து ஏளனம் செய்வது போலிருந்தது! 'எனக்கும் வந்து வாய்த்திருக்கிறதே, ஒரு ஜடம்!' என்று அப்போது எண்ணாமலிருக்க முடியவில்லை ரகுபதியால்.

சினிமா சற்று நின்றது; இடைவேளை குறுக்கிட்டது. கணவனும் மனைவியும் முன் வரிசையில் சிரித்துப் பேசிக் கொண்டிருந்ததை விளக்கொளியில் கண்டதும், அவனுக்கு என்ன தோன்றியதோ! 'என் கண்திருஷ்டி பட்டு உங்கள் சந்தோஷமும் பாழாகி விடாமலிருக்கட்டும்' என்று நினைத்தானோ, என்னவோ! உடனே இடத்தை விட்டு எழுந்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான், ரகுபதி.

"அம்மா!" என்று கூப்பிட்டுக் கதவை இலேசாகத் தட்டினான், ரகுபதி.

"வாடாப்பா, ரகு! ஏன் இத்தனை நாழிகை! எனக்கு ரொம்பவும் விசாரமா யிருந்தது, நீ எட்டரை மணி ஆகியும் வீடு திரும்பாதது. கையை அலம்பிக் கொண்டு சாப்பிட வா. நான் போய் இலையைப் போடுகிறேன்" என்று சொல்லிவிட்டுச் சமையலறையை நோக்கி அடியெடுத்து வைத்தாள் அவன் தாயார் விசாலாட்சி.

உண்மையைக் கூறினால், சினிமாவுக்குப் போனவன் அதற்குள் எப்படி வர முடிந்தது என்ற சந்தேகம் எழும். தன் மனத்தில் ஏற்பட்ட கொந்தளிப்பை, விளக்கிக் கூறினால் ஏற்கனவே புண்பட்ட தன் தாயின் உள்ளம் மேலும் வேதனைக் குள்ளாகும். ஒரு கணம் யோசனை செய்துவிட்டு, "நண்பர்களுடன் கடற்கரைக்குப் போயிருந்தேன். அரட்டையின் சுவாரஸ்யத்தில் பொழுது போனதே தெரியவில்லை" என்று புளுகி வைத்தான்.

"கடிதத்தைத் தபாலில் சேர்த்து விட்டாயா!" என்று தாயார் கேட்டதும் அவனுக்குச் சொரே லென்றது. ஆபீஸ் நேரம் முழுவதும் அதைப் பற்றிய ஞாபகமே இல்லை அவனுக்கு.

"ஓ! போட்டு விட்டேனே!" என்று மனமாரப் பொய் சொன்னான். இல்லாவிட்டால், தான் வேண்டுமென்றே செய்ததாகப்படும் அம்மாவுக்கு.

சாப்பிட்டு விட்டுப் படுக்கையில் வந்து படுத்த ரகுபதிக்கு வெகு நேரம் தூக்கமே வரவில்லை. எண்ணற்ற நினைவுகள் கடல் அலைபோல் எழும்பி அவன் மனத்தில் வந்து மோதின.

கிராமத்தில் ஒரு நல்ல வீடும், காவிரிப் படுகையில் இரண்டு வேலி நன்செய் நிலமும் ஏகபோகமாயிருந்தன அவனுக்கு. தவிர, தாயாரின் பெயரில் பாங்கியில் கொஞ்சம் ரொக்கமாகப் பணமும் இருந்தது. பி. ஏ. வரையில் படித்துவிட்டுக் கிராமத்தில் வீண்பொழுது போக்க விரும்பாமல் சென்னையில் ஒரு நல்ல உத்தியோகம் தேடிக் கொண்டான். அப்போதுதான் அவனுக்குக் கல்யாணம் நிச்சயமாயிற்று. வக்கீல் வெங்கடராமய்யரின் பெண் லலிதாவைப் பார்க்கச் சென்ற ரகு, 'பெண்ணைப் பிடித்திருக்கிறதா!' என்று தாயார் ஒப்புக்குக் கேட்டதற்குக்கூட இடம் வைக்கவில்லை! அவன் தாயாருக்கே லலிதாவின் சௌந்தரியம் பிரமாதமாகத் தோன்றியபோது ரகுபதியைப் பற்றிக் கேட்பானேன்!

உண்மையில் லலிதா படைப்புத் தேவனின் திறமைக்கே ஒரு எடுத்துக் காட்டாக விளங்கினாள். யௌவனத்தின் பூரணப் பொலிவு அவளது முகத்தில் பிரதிபலித்ததைக் கண்டு ரகுபதி சொக்கி விட்டான். ரகுபதியின் களை பொருந்திய முகம் லலிதாவுக்கும் திருப்தியளித்தது.

ரகுபதி எழிலுருவான லலிதா தனக்கு மனைவியானதைப் பெரும் பாக்கியமாகவே கருதினான். அவன் கல்யாணமான புதிதில் எல்லாம் கிரமப்படிதான் நடந்தன. தலை தீபாவளி கார்த்திகை முதலிய பண்டிகைகளுக்கு மாமனார் செய்த சுமாரான சீர் வரிசைகள்கூட அவனுக்குப் பெரிதாகவே தோன்றியது.

'ஒரு நல்ல நாள் பார்த்துப் பெண்ணைக் கொண்டு வந்து விடவும்' என்று வெங்கடராமய்யருக்குக் கடிதம் எழுதியபோதுதான் அவருடைய உண்மையான கருத்து வெளியாகியது. அவர் நாளும் பார்க்கவில்லை. லலிதாவையும் புக்ககத்துக்கு அனுப்பவில்லை. அதற்குப் பதிலாக ரகுபதியைத் தன் வீட்டோடு வந்து இருந்து விடும்படி கூறினார். அவன் அதற்கு இணங்கவில்லை. கிராமத்திலிருந்த தன் தாயாருக்கு மாமனாரின் கருத்தைப் பற்றி எழுதி விட்டு, தான் புரசை வாக்கத்தில் ஒரு ஜாகை பார்த்திருப்பதாயும் அங்கேயே தன் தாயாரும் வந்திருக்க வேண்டுமென்றும் எழுதினான். விசாலாட்சி கிராமத்தி லிருந்த நிலங்களைக் குத்தகைக்கு விட்டு விட்டுச் சென்னைக்கு வந்து சேர்ந்தாள்.

மாப்பிள்ளை தனியாகக் குடித்தனம் வைத்து விட்டதைக் கண்டு இனிமேல் பெண்ணை வீட்டோடு வைத்துக் கொண்டிருப்பது அழகல்ல என்ற முடிவுக்கு வந்தார் வெங்கடராமய்யர்.

ஒரு சுபதினத்தில் புக்ககம் வந்து சேர்ந்தாள் லலிதா. வந்து பதினைந்து நாட்கள் ஆனதும் நவராத்திரிப் பண்டிகைக்காகப் பிறந்தகம் செல்ல விரும்பினாள் அவள். இதைக் கணவனிடம் பிரஸ்தாபித்ததும் அவன், "அம்மாவைக் கேட்க வேண்டும்" என்று ஒரே வார்த்தையில் பதில் சொல்லி விட்டான். லலிதா வேண்டா வெறுப்பாக மாமியாரிடம் தன் எண்ணத்தைக் கூறினாள்.

"நாளும் கிழமையுமாக வீட்டிலே இருந்து விளக்கேற்றி வைக்காமல் பிறந்த வீட்டுக்குப் போக ஆசைப்படுகிறாயே!" என்றாள் மாமியார். இது பொறுக்கவில்லை லலிதாவுக்கு. சதா கண்ணீரும் கம்பலையுமாகவே இருந்து சத்தியாக்கிரகம் செய்யத் தொடங்கினாள்.

'ஒரே பெண். செல்லமாக வளர்த்திருக்கிறார்கள். அவளிஷ்டப்படிதான் விட்டுப் பிடிக்கலாமே' என்று பிறந்தகம் போக அனுமதி யளித்தாள் விசாலாட்சி. சரஸ்வதி பூஜைக்குள் திரும்பி விடுமாறு சொல்லி அனுப்பினாள். ஆனால் லலிதா திரும்பிவர இரண்டு மாதங்களுக்கு மேல் ஆகி விட்டன. அதுவும், ரகுபதி விடாமல் பல கடிதங்கள் எழுதியும் மாமனாருக்கு டெலிபோனில் செய்தி யனுப்பியும் தொந்தரவு செய்த பிறகு தான் லலிதா திரும்பி வந்தாள்!

புக்ககத்தில் மூன்று மாதங்களும் பிறந்த வீட்டில் பாக்கியுமாகக் கழித்து வந்தாள் லலிதா. இதே ரீதியில் இரண்டு வருடங்கள் ஓடிவிட்டன. ரகுபதிக்கு வாழ்க்கையே கசந்து விட்டது. 'உள்ளூரிலேயே பிறந்தகம் இருந்தால் தான் என்ன! இப்படியா ஓடிக் கொண்டிருக்க வேண்டும்! வயது வந்த பெண் இப்படியா பொறுப்பின்றி இருப்பாள்!' என்று விசாலாட்சிக்கே அலுத்து விட்டது.

விசாலாட்சி தான் ஏற்கெனவே செய்திருந்த முடிவைப் பிள்ளையிடம் தெரிவித்தாள். தான் கிராமத்தோடு சென்று விட்டால், வீட்டில் கணவனைத் தனியாக விட்டுவிட்டு அடிக்கடி பிறந்தகம் போகும் எண்ணம் லலிதாவுக்கு ஏற்படாது என்று தோன்றியது அவளுக்கு. ஆகவே கொஞ்சகாலம் காவிரி ஸ்நானம் செய்து கொண்டு கிராமத்தோடு வசிக்க விரும்புவதாக அவள் தீர்மானமாகச் சொன்னபோது ரகுபதி சரியென்று ஒப்புக் கொண்டான்.

தான் இல்லாமல், தனிக்குடித்தனம் செய்தாலாவது லலிதாவுக்குப் புக்ககத்தில் ஒட்டுதல் ஏற்படுகிறதா என்று பார்க்க விரும்பிய விசாலாட்சிக்குப் பெரிதும் ஏமாற்றமே ஏற்பட்டது! லலிதாவின் போக்கில் எவ்வித மாறுதலுமில்லை என்று ரகுபதியின் கடிதம் ஒவ்வொன்றும் விளக்கின. தனிக் குடித்தனம் இதே ரீதியில் ஒரு வருடம் நடந்தது.

அன்று லலிதாவின் தகப்பனார் வந்திருந்தார். அவளுடைய அண்ணாவுக்குக் கல்யாணம் நிச்சயமாகி யிருப்பதாகவும் இருபது நாட்கள் கழித்து முகூர்த்தம் என்றும் சொல்லிவிட்டுப் போனார். இரண்டு நாட்கள் கழித்துத் திருமணப் பத்திரிகையும் வந்தது. 'தங்கள் வரவை அன்புடன் எதிர்பார்க்கும்' என்ற ஜாபிதாவில் ரகுபதியின் பெயர் கொட்டை எழுத்துக்களில் அச்சடிக்கப் பட்டிருந்தது. லலிதா அன்றே பிறந்தகம் செல்ல ஆயத்தம் செய்தாள். அவள் அவ்வாறு துடிப்பாள் என்று தான் ரகுபதியும் எதிர்பார்த்தான்.

"நான் நாளைக்கே போக வேண்டும். போய் வரட்டுமா!" என்றாள் லலிதா தயக்கத்துடன்.

"தாராளமாகப் போகலாம்!" என்றான் ரகுபதி. அவன் மனசு தீவிரமாகச் சிந்தனையில் ஈடுபட்டிருந்ததைத் தன்னுடைய உற்சாகத்தில் கவனிக்கவில்லை லலிதா.

மகிழ்ச்சிப் புன்னகையுடன் உள்ளே போகத் திரும்பினாள் அவள். 'தடார்' என்ற ஓசையுடன் நாற்காலியைப் பின்னால் தள்ளி விட்டு எழுந்த ரகுபதி, "போகலாம். ஆனால் திரும்பி வரலாம் என்ற எண்ணத்தை மறந்துவிடு!" என்றான்.



மதுரை ஸ்ரீ டி. வி. சுந்தரமய்யங்கார் அவர்களது பேத்தியும் நாட்டிய கலாகேசரி வழுவூர் ஸ்ரீ ராமையாப் பிள்ளை அவர்களின் சிஷ்யையுமான குமாரி சுதாவின் பரத நாட்டிய, அபிநயக் கச்சேரி ஜனவரி மாதம் 8ம் தேதி வெள்ளிக்கிழமை திருநெல்வேலி பாபுலர் டாக்கீஸில் நடைபெறுகிறது. இந்தக் கச்சேரியில் வசூலாகும் பணம் காந்தி கிராம நிதிக்கு அளிக்கப்படும். ஆகவே இக்கச்சேரிக்குப் பணம் கொடுத்துச் செல்பவர்கள், ஒரு நற்காரியத்துக்கு உதவிய புண்ணியத்தையும் கட்டிக் கொள்வார்கள்.

மறுநாள் 9-1-54 அன்றும் மதுரையில் குமாரி சுதாவின் பரதநாட்டியக் கச்சேரி ஸ்ரீ ஸத்குரு சங்கீத சமாஜத்தின் ஆதரவில் நடைபெறும்.

எதிர்பாராத அவனுடைய கோபத்தைக் கண்டு அவள் முகம் வெளுத்து விட்டது.

"ஏன், என்ன அப்படிக் கோபம்!" என்றாள் தயங்கியவாறு.

"ஒன்றுமே தெரியாதவள்போல் கேட்கிறாயே! ஆபீஸில் இது 'இன்ஸ்பெக்ஷன்' சமயம். இரவு ஒன்பது மணி, பத்து மணிகூட ஆகுமென்று உனக்குத் தெரியும். வேலை ஒழிந்தபோது போய் நின்றால் என் ஒருவனுக்காக ஹோட்டலில் சாப்பாடு வைத்துக் கொண்டு காத்திருப்பார்களா!" என்று கோபமாகக் கேட்டான்.

"அம்மாவோ ஒண்டிக்காரி. கல்யாணத்தன்று போய் நின்றால் நன்றா யிருக்குமா! கல்யாணத்துக்கு முன்னால் சுமங்கலிப் பிரார்த்தனை முதலிய எவ்வளவோ காரியங்கள் இருக்கின்றன. பத்து நாட்கள் ஹோட்டலில் சாப்பிட்டுக் கொண்டால் என்ன!" என்றாள் அவள் கொஞ்சம் பாவனையாக.

அவளுடைய பதில் அவனுக்குச் சொல்லி முடியாத எரிச்சலை ஏற்படுத்தியது.

"உன் அம்மா ஒண்டிக்காரி. உன் அப்பா ஒண்டிக்காரர். இங்கே நான்......! இதோ பார், லலிதா! நீ இந்தமாதிரி வீடாறு மாதம், காடாறு மாதம் என்று ஓடுவதெல்லாம் எனக்கு அடியோடு பிடிக்கவில்லை. இத்தனை வருடங்களும் ஏதோ போனால் போகட்டும் என்று சகித்து வந்தேன்.

இனிமேலாவது இந்த ஓடிப் பிடிக்கிற விளையாட்டுக்களை யெல்லாம் மூட்டை கட்டி வைத்து விட்டு ஒழுங்காகக் குடித்தனம் செய்வதா யிருந்தால் செய். இல்லாவிட்டால்......" என்று கூறி முடிப்பதற்குள் கையை ஓங்கிக்கொண்டு அவளை நெருங்கிய ரகுபதி 'பளார்' என்று ஒரு அறை கொடுத்தான் அவள் கன்னத்தில். பிறகு அங்கிருக்கப் பிடிக்கவில்லை. ஆபீசுக்குக் கிளம்பி விட்டான்.

மாலை வீடு திரும்பியபோது தன் வீடு பூட்டிக் கிடந்ததைக் கண்டு துணுக்குற்றான் ரகுபதி. அந்த வீட்டுச் சிறுவன், "மாமி இதை உங்களிடம் கொடுக்கச் சொன்னா. அவ அப்பாவோடே மயிலாப்பூருக்குப் போயிருக்கா" என்று சொல்லி ஒரு சாவியை நீட்டினான்.

"சே! இவளும் ஒரு பெண்ணா! என்ன ஆணவம் இவளுக்கு, இப்படி வீட்டை விட்டுப் போக! ஒரு அடி வாங்கினால்தான் என்ன! உயிரே போய் விடுமா! அணைக்கிற கைதானே அடித்தது! இனி மேல் இந்த வீட்டுக்குள் அடியெடுத்து வைக்கும் உத்தேசமிருந்தால் இப்படிச் செய்திருப்பாளா! உம், பார்க்கலாம், பிறந்தகத்தில் எத்தனை நாட்கள்தான் இருக்க முடியுமென்று!" அந்த நிலையில், அவன் மனத்தில் எத்தனையோ வித விதமான எண்ணங்கள் தோன்றி மறைந்தன.

கல்யாணத்துக்கு இரண்டு நாட்கள் முன்பு மைத்துனன், மாமனார் இருவரும் அவனை அழைக்க வந்தனர். அப்போது அவன் வீட்டில் இல்லை. பக்கத்து வீட்டில் சொல்லி விட்டுத் திரும்பி விட்டனர். மறுநாள் ஒரு உள்ளூர்த் தபாலும் வந்தது. அன்றிரவே ரகு தன் கிராமத்துக்குக் கிளம்பி விட்டான். நடந்த விஷயங்களைத் தன் தாயாரிடம் சொல்லி, அவளையும் அழைத்துக் கொண்டு சென்னைக்குத் திரும்பினான். அதற்குள் மைத்துனன் கல்யாணமும் முடிந்து விட்டது, ரகுபதி போகாமலே! ஒரு மாதமாகியும் லலிதா புக்ககத்துக்குத் திரும்பி வரவில்லை.

"என்ன இருந்தாலும் கர்ப்பிணியை அடிக்கலாமா, ரகு! படித்தவன், முன் யோசனையுள்ளவன்; நீயே பொறுமை யிழந்து விட்டாயே!" என்று விசாலாட்சி ஒருநாள் கேட்டாள்.

வளையல் காப்புச் செய்யப் போவதாக வெங்கடராமய்யர் விசாலாட்சிக்குக் கிராமத்து விலாசத்துக்கு எழுதிய கடிதம் சென்னைக்கு வந்து சேர்ந்தது. கடிதத்தைப் படித்து விட்டு ரகுபதியிடம் கொடுத்தாள், விசாலாட்சி. "அது ஒன்றுதான் குறைச்சல்!" என்று எரிச்சலுடன் கூறிவிட்டுக் கடிதத்தைக் கசக்கி மூலையில் எறிந்து விட்டான். அந்த அளவுக்குக் கசந்துவிட்டது அவன் உள்ளம்!

பின்னைக் குழந்தை பிறந்திருக்கிறதென்று டெலிபோனில் தெரிவித்து விட்டு ஒரு கடிதமும் எழுதினார், வெங்கடராமய்யர். நண்பர்கள் விருந்து எப்போது, என்று கேட்டுத் தமாஷ் செய்தார்கள். அவன் நிலைமை அவர்களுக்குத் தெரிந்தால்தானே!

பேரனைப் பார்க்க வேண்டு மென்ற ஆர்வம் நாளுக்கு நாள் அதிகமாகி வந்தபோதிலும் அதைத் தன் பிள்ளையிடம் வெளியிடத் துணிவு இல்லை விசாலாட்சிக்கு.

ஒருவாறு மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு ரகுபதியிடம் விஷயத்தைப் பிரஸ்தாபித்தாள்.

"என்னைக் கேட்டுக் கொண்டா இங்கிருந்து கிளம்பிச் சென்றாள்! நான் ஏன் எழுத வேண்டும்! போன சமர்த்துப்போல திரும்பி வந்தால் வரட்டும். இல்லாவிட்டால் அங்கேயேதான் இருக்கட்டுமே!" என்றான் ரகுபதி.

விசாலாட்சி, "நீ எழுத வேண்டாம். அது உனக்குக் கௌரவக் குறைச்சலாய்த் தானிருக்கும். நான் எழுதுகிறேன். அதற்காவது சம்மதமா சொல்" என்றாள். வேண்டா வெறுப்பாகத் தலை யசைத்தான் ரகுபதி.

விசாலாட்சி அன்றே கையோடு கடிதத்தை எழுதிப் பிள்ளையின் கையில் கொடுத்தாள், தபாலில் சேர்க்க. ஆபீஸ் வேலையில் மும்முரமாக ஈடுபட்டு விட்ட ரகுபதிக்குக் கடிதத்தைப் பற்றிய ஞாபகமே யில்லை!

மறுநாள் காலையில் கறிகாய் வாங்கிக்கொண்டு திரும்பிய ரகுபதி தன் வீட்டுக்குள் குழந்தை அழும் சப்தம் கேட்டு ஒரு கணம் ஸ்தம்பித்து நின்றான். லலிதாவின் குரல் தெளிவாகக் கேட்டது.

"குழந்தைக்கு ஜன்ம நட்சத்திரம் ரோகிணி. ரோகிணி நட்சத்திரத்தில் குழந்தை பிறந்தால் மாமாவுக்கு ஆகாதாமே!" என்றாள்.


"ஆமாம். புண்யாஹவாசனத்தின்போது ஒரு பாத்திரத்தில் எண்ணெயை நிரப்பி அதில் குழந்தையின் நிழல் தெரியுமே, அதைத்தான் முதலில் குழந்தை பார்க்க வேண்டும். பிறகுதான் மாமாவின் முகத்தைப் பார்க்கலாம்" என்று மாட்டுப் பெண்ணுக்கு விளக்கினாள் விசாலாட்சி.

"ஆமாம்! அதெல்லாம் செய்தார்கள். ஆனால் அன்று முதல் என் மன்னிக்குக் குழந்தையி னிடத்தில் ஒரே வெறுப்பு. அண்ணா குழந்தையை எடுத்து வைத்துக் கொள்ளுவதுகூட அவளுக்குப் பொறுக்காது! நேற்றுக் காலையில் குழந்தை அழுது கொண்டிருந்தது. நானும் அம்மாவும் சமையற்கட்டில் ஏதோ வேலையா யிருந்தோம். அண்ணா குழந்தைக்கு விளையாட்டு காட்டிக் கொண்டிருந்ததைப் பார்த்துக் கொண்டே வந்த மன்னி, 'அந்தச் சனியனை வைத்துக் கொண்டு என்ன விளையாட்டு!' என்று முணுமுணுத்தாள். எனக்கு அழுகை, அழுகையாக வந்தது. 'நான் இருக்க வேண்டிய இடத்தில் இருந்தால் இவளிடம் ஏன் பேச்சுக் கேட்க வேண்டும்!' என்று தோன்றியது. உடனே அப்பாவிடம் சொல்லிக் கொண்டு இங்கே கிளம்பி வந்து விட்டேன்" என்றாள் லலிதா.

"அப்படியானால் என்......" என்று விசாலாட்சி தான் எழுதிய கடிதத்தைப் பற்றிக் கேட்க வாய் எடுத்தபோது ரகுபதி உள்ளே பிரவேசித்தான்.

# கோவை தந்த சோஷலிஸ்ட் தலைவர்

தொழிலாளர்கள் உழைத்துப் பாடுபட்டுத் தங்களைத் தாங்களே காப்பாற்றிக் கொள்வதோடு பொருள் உற்பத்தி செய்வதின் மூலம் தேசத்துக்கே தொண்டு செய்து கொண்டு வருகிறார்கள். ஒரு நாட்டின் வாழ்வை உருவாக்குபவர்கள் தொழிலாளர்கள். தொழிலாளர்கள் இன்றேல் தொழில்கள் இல்லை. தொழில்கள் இல்லாவிடில் உலகம் இயங்காது. இந்த உண்மையை எடுத்துக் கூறி உழைப்பாளிகளின் மகிமையை உலகுக்கு உணர்த்த எத்தனையோ அறிஞர்கள் உலகில் முயன்றிருக்கிறார்கள். அவர்களில் தலைசிறந்து விளங்கியவர் காந்தி மகாத்மா. இன்னொருவர் நமது தேசிய மகாகவி பாரதியார். அவர்களுடைய உபதேசங்களைப் பின் பற்றி எண்ணற்ற ஊழியர்கள் தொழிலாளர் நலத்துக்குத் தன்னலம் பாராது உற்சாகத்துடன் சேவைசெய்து வருகின்



உண்மைக்குத் திரைபோட
முயல்கிறார்கள் சிலர்.
அறிவைக் கொண்டு
தங்கள் குறைகளை மூட
ஆடை செய்கிறார்கள்.
விளக்கின் ஒளியை
இரும்புக் கம்பிகளால்
மறைக்க முடியுமா?
முடியுமானால்
இவர்கள் முயற்சியும்
வெற்றி பெறலாம்...
இதை அடிப்படையாகக்
கொண்டு உருவானதுதான்

நியூ இரா
ப்ரொடக்ஷன்ஸாரின்
முதல் சித்திரம்

# விடுதலை

'நியூ இரா'
அளிக்கும்
டைரக்ஷன்
ராமனுஜம்

நாகய்யா - மனோஹர்
கிருஷ்ணகுமாரி - குமுதினி
விமலா - மோகன் - பீர்மகமது நடிக்கும்...
ஸ்டூடியோ : பிலிம் சென்டர்



● மாமியார் மாட்டுப் பெண் சண்டை,
நாத்தனார் கொடுமை,
காதல் இல்லாமல் கதையா?

இதற்கு ராஜாஜி தரும் ருசிகரப் பதில்

● வினைகளை காக கொடுத்தும் வாங்கலாம்! ● பெண் யானைக்குக் கொம்பு இருக்கிறதாமே! ● முகவெட்டை மாற்றிக் கொள்வதா? ● ரஸிகர்களுக்கு மட்டுமல்ல சங்கீதம் — சித்தப்பிரமை கொண்டவர்களும் பயன்பெறத்தான்!

இதுபோன்ற விசேஷக் கருத்துக்கள் கொண்ட 50க்கு மேலான கதை, கட்டுரைகள் எல்லாம்

இம்மாத "திரட்டு" இதழில்

விலை 8 அணா

உங்கள் பிரதியை
உள்ளூர் ஏஜண்டிடம் இன்றே பெறுங்கள்.

○●○

அல்லது எங்களுக்கு எழுதுங்கள்:

"திரட்டு" காரியாலயம்
1/C, 17, டின்ரோஸ் எஸ்டேட்
மவுண்ட் ரோடு :: சென்னை - 2



எல்லா சோதனைகளிலும்
தேர்ச்சி பெற்ற
ஆதர்ச டூத் பிரஷ்
இன்றே வாங்குங்கள்-
அதன் குணங்
களை தெரிந்து
கொள்ளுங்கள்





இந்தியாவிலேயே மிக்க
அனுபவம் வாய்ந்த டூத் பிரஷ்
தயாரிப்பாளர்கள்

றனர். இத்தகைய வழி யர் திருக்கூட்டத்தில் தமி ழகத்தில் இன்றைக்கு முன் னணியில் நிற்பவர் தோழர் ப. க. சின்னதுரை.

சென்ற பதின்மூன்று வருஷ காலத்தில் திரு சின்ன துரையின் வாழ்க் கையில் பெரும் பகுதி போராட்ட வாழ்க்கையா கவே கழிந்திருக்கிறது.

இன்று கோவை ஜில் லாவிலே ஆயிரமாயிரம் தொழிலாளர்களின் நன் மதிப்புக்கும் மரியாதைக் கும் திரு ப.க. சின்னதுரை உரியவரா யிருக்கிறார்.



தமிழ்நாட்டிலேயே ஏன் சென்னை ஆந்திர ராஜ் யங்களுக்குள்ளேயே மிகச் சிறந்த தொழிற் சங்க மாக விளங்கி வருவது கோவை பஞ்சாலைத் தொழிற் சங்கம் என்பது பிரசித்தம். இந்தத் தொழிற் சங்கம் வளர்வ தற்குப் பாடுபட்டு அதை ஸ்தாபன ரீதியாகக் கட்டி வளர்ப்பதற்கு ஸ்ரீ என். ஜி. ராமசாமியுடன் தோளோடு தோள் நின்று உழைத்தவர் தோழர் சின்னதுரை.

1942-ம் ஆண்டு ஏகாதிபத்திய அடக்கு முறைக்கு மேற்படி தொழிற் சங்கத் தலைவர் திரு என். ஜி. ஆர். பலியானவுடன் ஸ்ரீ சின்ன துரை பஞ்சாலைத் தொழிற் சங்கத்தின் காரியதரிசி பத வியை ஏற்று மிகச் சிறந்த முறையில் தொண் டாற்றி இந்தியத் தொழிற் சங்கங்களுக் குள் ளேயே அதற்கு ஒரு தனி மதிப்பையும் உயர்ந்த ஸ்தானத்தையும் ஏற்படுத்தி விட்டார்.

இந்தத் தொழிற் சங்கம் கோவை ஜில்லாவில் சிங்காநல்லூர், குனியமுத்தூர், குறிச்சி, திருப்பூர், காட்டூர், உடுமலைப்பேட்டை, வரதராஜபுரம், பீளமேடு முதலிய இடங்களில் கிளைச் சங்கங்களை ஏற்படுத்தி யிருக்கிறது. இத்தனை இடங்களிலும் மேற்படி சங்கங்களுக்குச் சொந்தமாகக் கட்டி டங்கள் இருக்கின்றன.

சங்கத்துக்குச் சொந்தமாகச் சுமார் ஒன்றரை லட்ச ரூபாய் மதிப்புள்ள கட்டிடங்களும், பத்து ஒலிபெருக்கிக் கருவிகளும் இருக்கின்றன. அவை களைத் தொழிலாளர்களின் ஆதரவற்ற குடும்பங் களுக்கு வசதிகள் செய்யவும், இறுதிச் சடங்கு களும் இதர சகாயங்கள் செய்வதற்கும் க்ஷேம நிதி ஏற்படுத்தி யிருக்கிறார்கள்.

இவ்வளவு சிறந்த முறையில் நடைபெறும் கோவை பஞ்சாலைத் தொழிற் சங்கத்தின் காரிய தரிசியாக இருந்து ஸ்ரீ ப. க. சின்னதுரை அவர்கள் எல்லாக் காரியங்களையும் மிகத் திறம்பட நடத்தி வருகிறார். தொழில் ஸ்தாபனங்கள் சம்பந்தமான எல்லா விஷயத்திலும் அவருடைய அபிப்பிராயம் என்னவோ அதுதான் கோவை பஞ்சாலைத் தொழிலாளர்களின் அபிப்பிராயம் என்று சொல்ல லாம். ஸ்ரீ சின்ன துரையிடம் கோவை ஜில்லா தொழிலாளர்களுக்கு அவ்வளவு நம்பிக்கை.

ஸ்ரீ சின்னதுரை 1940-ம் ஆண்டு நடந்த தனி நபர் சத்தியாக்கிரகத்தில் கலந்து கொண்டு எட்டு மாதச் சிறைத் தண்டனை அடைந்தார். சிறையி லிருந்து வெளிவந்ததும் கோவை ஜில்லா முழு வதும் சுற்றி மக்களைச் சுதந்திரப் போருக்குத் தயார் செய்தார். பிரிட் டிஷ் ஏகாதிபத்தியம் சீற்றம் கொண்டது. "வாட்டி உன்னைச் சிறை யில் மடக்குவேன்" என்று சிங்காநல்லூர் விமான நிலையம்கொளுத்தப்பட்ட வழக்கில் அவரைச் சம் பந்தப் படுத்தி 1942-ம் ஆண்டு ஸ்ரீசின்னதுரைக்கு ஆயுள் தண்டனை கொடுத் தது. நம் பாரத தேசம் சுதந்திரம் பெற்றவுடன் சுதந்திர சர்க்கார் அவரை விடுதலை செய்தனர்.

விடுதலை பெற்ற திரு சின்ன துரை சுதந்திரம் பெற்ற தேசத்தின் முன்னேற்றத்துக்காக உழைத்து வருகிறார். 1949-ம் ஆண்டு மத்திய சர்க்கார் கூட்டிய அகில இந்திய பஞ்சாலைத் தொழிலாளர் மகாநாட்டில் தொழிலாளர் பிரதி நிதியாகக் கலந்து தொண்டாற்றினார்.

1952-ம் ஆண்டு மாகாண சர்க்கார் நியமித்த சென்னை ராஜ்ய பஞ்சாலை முக்கூட்டு விசாரணைக் கமிட்டியில் அங்கம் வகித்துப் பணியாற்றி வரு கிறார். சென்ற வருஷம் நவம்பர் மாதம் மத்திய சர்க்கார் நியமித்துள்ள தென்பிராந்திய இன்ஷ்யூ ரன்ஸ் போர்டுக்கு ஒரு அங்கத்தினராக அவரைத் தேர்ந்தெடுத் திருக்கிறது. இப் பொறுப்புகளை யெல்லாம் அடக்கத்துடன் ஏற்றுக் கொண்டு தொழிலாளர் நலனுக்காகப் பாடுபட்டு வருகிறார்.

1948-ம் ஆண்டு முதல் சோஷலிஸ்ட் கட்சி நிர் வாகக் குழுவில் ஓர் அங்கத்தினராக இருந்து வருவதுடன் சோஷலிஸ்ட் கட்சியின் தொழிலா ளர் பகுதியின் பொறுப்பாளராகவும் இருந்து மேற்படி கட்சிக்கு அருமையான முறையில் பணி யாற்றி வந்துள்ளார்.

இவ்வாறு ஏழைத் தொழிலாளர்களுக்கும், எண்ணற்ற மக்களுக்கும், பாரத நாட்டுக்கும் உற்சாகமாகத் தொண்டாற்றி வரும் தோழர் ப. க. சின்ன துரை அவர்களைத் தமிழ்நாடு பிரஜா சோஷலிஸ்ட் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுத் திருப்பது மகிழ்ச்சிக்குரிய விஷயம். அவருடைய தன்னலமற்ற உற்சாகமான உழைப்பினால் தமிழ் நாடு பிரஜா-சோஷலிஸ்ட் கட்சி மிக்க பலம் அடையும் என்பதில் ஐயமில்லை.

அகில இந்திய பிரஜா-சோஷலிஸ்ட் கட்சியின் நிர்வாக சபையிலும் ஸ்ரீ சின்னதுரை அங்கத்தின ராக நியமிக்கப் பட்டிருக்கிறார்.

கோவை ஜில்லா பல்லடத்தைச் சேர்ந்த திரு ப. க. சின்ன துரைக்கு இப்போது முப்பத்து மூன்று வயதுதான் ஆகிறது. இளம் பிராயத் தின் ஊக்கத்துடன் நீடித்த தொண்டின் அனுபவ மும் தோழர் ஸ்ரீ சின்னதுரை பெற்றுள்ளார். ஆகவே, தமிழ் நாட்டுப் பிரஜா — சோஷலிஸ்ட் கட்சி மிக்க அதிர்ஷ்டம் வாய்ந்த கட்சி என்று சொல்லுவது சிறிதும் மிகையாகாது.



துரிதமாகத் தேர்வு பெறுகிறார்—

டாக்டர்

ஓவல்டினுக்கு

உத்தரவு செய்ததுமுதல்!

நோய்க்குப் பிறகு தேறிவரும் காலத்தில் டாக்டர்களும் நர்ஸ்களும் ஆரோக்கியம் தரும் ஓவல்டினை சிபாரிசு செய்கின்றனர்! ஓவல்டினின் சத்துக்கள் ஆரோக்கியத்திற்கு மிக முக்கியமானவை என்று அவர்களுக்குத் தெரியும். அதில் பழுத்த பார்லி மால்ட், ஆடை நிரம்பிய பசும்பால், சிறந்த கொக்கோ, பி & டி விடமின்கள் ஆகியவை சேர்த்து இருப்பதால் அது இன்றியமையாத உணவு பானமாகும். ஓவல்டின் லேபரட்டரிகளில், விஞ்ஞானிகள், ஓவல்டினின் பரிசுத்தத்திற்கு அதன் தயாரிப்பின் ஒவ்வொரு படியிலும் பரிசோதனை நடத்துகிறார்கள். எந்த நோயாளிக்கும் அவருடைய உணவுடன் ஓவல்டினையும் கொடுத்து வந்தால் தேர்வு துரிதப்படுவது திண்ணம்! நினைவிருக்கட்டும்— அது குடும்பத்தில் அனைவரின் ஆரோக்கியத்திற்கும் உகந்த பானம். ஓவல்டினையே கேளுங்கள்; போலிகளைத் தள்ளிவிடுங்கள்.

விநியோகஸ்தர்கள்:
கிரஹாம்ஸ் டிரேடிங் கோ. (இந்தியா) லிட்.

ஓவல்டின்



நோய்க்குப் பிறகு தேர்வைத் துரிதப்படுத்துகிறது

OV. 392

**வா**சலில் நாய் குரைக்கும் சத்தம் கேட்டு வெளியே வந்து எட்டிப் பார்த்தான் குப்புசாமி. அங்கே, உள்ளே போகலாமா வேண்டாமா என்று தயங்கியபடி நின்று கொண்டிருந்தாள், ஒருபெண்.

"வத்ஸலா இருக்கிறளா?" என்று கேட்டுக் கொண்டே, அசைந்தாடிக் கொண்டு வந்தாள் அவள். விழி யசையாமல் அவளின் அழகைரசித்துக்கொண்டிருந்தான் குப்புசாமி.



"ஹும்; உள்ளே இருக்கிறள்! போய் பாருங்கள்!" என்றன் குப்புசாமி.

அந்த நாய் சங்கிலிப் பிணைப்பில் இருந்தாலும் தன் மீது எங்கே பாய்ந்து விடுமோ என்று பயந்த வண்ணம் ஒரு விளுடியில் வராந்தாவைக் கடந்து உள்ளே ஓடிச் சென்றள் அந்தப் பெண்.

மீண்டும் வந்து கூடத்தில் சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து கொண்டிருந்த குப்புசாமியின் மனம் ஏதோ இனந் தெரியாத ஒரு வித சஞ்சலத்தால் தாக்குண்டு அலைபாயத் தொடங்கியது.

"இவள் கலாவதியைப் போலவே இருக்கிறளே! அதே சாயல்; அதே புதுமை நடை; அப்படியே இம்மியும் வித்தியாசமின்றி இருக்கும் இவள்.......ஒரு வேளை...... அவளேதாளே?" என்று நினைவுக்கு வந்ததும் அவனுக்கு ஒரு மாதிரியான சிரிப்புத்தான் வந்தது. ஐந்தாறு வருஷங்களுக்கு முன் இருந்தது போலவே கலா இப்போதும் இருப்பாள் என்று நினைப்பது எவ்வளவு பயித்தியக்காரத்தனம்? அவளுக்குக் கல்யாணமாகி......எத்தனை குழந்தைகளுக்குத் தாயாகி விட்டிருக்கிறளோ? அல்லது ஒரு வேளை......ஒரு வேளை மணக்காமலே இருந்தால்...இருந்தால்......

இந்த எண்ணம் அவன் மன அரங்கில் தோன்றியதும், அவன் உள்ளம் துடியாய்த் துடித்தது. முகம் சிவக்க, கடுமையான தோற்றத்துடன் பாண்டியன் முன் சென்ற கண்ணகியைப் போல், எதிரே நின்று துடிக்கும் உதடுகளுடன், 'அயோக்கியா, உனக்கு இத்தனை வஞ்சனை நெஞ்சமா? பணத்தின் திமிரால் நீ நடத்துகிற இந்த அக்கிரமத்தைக் கடவுள் கூட சகிக்கமாட்டார்' என்று சபித்துக் கொண்டிருக்கும் ஒரு பெண்ணுருவம் அவன் கற்பனைக் கண் முன்னே தோன்றியது.





வெட்கத்தால் இரு கைகளாலும் தன் முகத்தை மூடிக் கொண்டான் குப்புசாமி.

நினைவிழந்து சோம்பிக் கிடந்த அவனை, "சித்தப்பா! இவள்தான் என் சிநேகிதி குணபூஷணம். எங்கள் கலாசாலையில் மிகுந்த கெட்டிக்காரி என்று சொன்னேனே, அவள் இவள்தான்!" என்று வத்ஸலா அறிமுகப்படுத்தியதும் மிகுந்த சிரமத்துடன் சமாளித்துக் கொண்டு உட்கார்ந்தான்.

"உன் சிநேகிதிக்குக் காப்பி, டிபன் கொடுத்தாயா?" என்று கேட்டபடி குணபூஷணம் இருந்த பக்கம் தன் பார்வையைத் திருப்பினான் குப்புசாமி.

அந்தப் பெண்ணும் கைகூப்பியபடி "ஓ! எல்லாம் ஆகிவிட்டது; நான் போய் வருகிறேன்!" என்றாள்.

கலாவதியே நேரில் வந்து போவதுபோல் பிரமை தட்டிய குப்புசாமி அவள் மறையும் வரை அவளையே இமை யசையாது பார்த்துக் கொண்டிருந்தான்.

வாசல் வரையில் வழியனுப்பிவிட்டுத் திரும்பிய வத்ஸலா, குப்புசாமியின் அருகில் வந்து அமர்ந்தாள். அவன் கேட்கு முன்பாகவே அவளாக, "குணபூஷணம், ராயபுரத்தில் இருக்கிறாள். அவள் அப்பா அம்மா எல்லோரும் கிராமத்தில் இருக்கிறார்களாம். இங்கு அவள் அத்தை கலாவதி வீட்டில் இருக்கிறாள். அவள் அத்தை எங்கள் கலாசாலையில் உபாத்தியாயினி!" என்று பட படவென்று பொரிந்து தள்ளினாள். பிறகு எழுந்து கொண்டே, "சித்தப்பா! குணபூஷணம் அழகாயில்லை?" என்று கேட்டாள்.

"ஆமாம், ...ம்......அழகுதான்!" என்று மேலுக்குச் சொல்லிவிட்டுக் குப்புசாமி அங்கிருந்து மேல் மாடிக்குச் சென்று விட்டான். அப்போது அவன் மனமலரைச் சுற்றிப் பழைய நினைவு வண்டுகள் வட்டமிட்டுத் திரிந்து கொண்டிருந்தன.

குப்புசாமி செல்வச் சீமானின் கடைசிப் பிள்ளை. அவனை விடப் பத்து வயது பெரியவரான அவன் அண்ணனைத் தவிர வேறு சகோதர சகோதரிகள் ஒருவரும் இல்லை. ஆகையால் அவன்தான் அந்த வீட்டில் எஜமானன். அவன் தந்தையிலிருந்து அந்த வீட்டு வேலைக்காரர்கள் வரை எல்லோருக்கும் செல்லப் பிள்ளைதான் அவன். எந்தவிதமான கஷ்டமும், கவலையும் உணர்ந்தவன் அல்ல. பட்டணத்தில் கல்லூரியில் சேர்ந்து படிக்கும்போதும், தான்தோன்றித்தனமாகத் தன் மனம் போனபடி தந்தை அனுப்பிய பணம் போதாமல் இருமடங்கு செலவு செய்து கொண்டிருந்தான். இயற்கையிலே படிப்பில் மட்டும் பற்றுள்ளவனானதால் பரீட்சைகளில் மட்டும் தேறிக்கொண்டு வந்தான்.

குப்புசாமி சிவந்த நிறமும், சரியான உயரமும், அதற்கேற்ற பருமனும் பெற்று அழகனாகவே இருந்தான். ஏற்கெனவே தற்பெருமை கொண்டவன் குப்புசாமி. அதோடு அவன் கலாசாலை மாணவிகள் அவனிடம் பேசிப் பழகவே அவனுடைய கர்வம் தலைக்கேறிவிட்டது. எப்பொழுது பார்த்தாலும் பெண்களோடு பேசுவதிலும், கும்மாளியடிப்பதிலும் அவன் மனம் ஈடுபட்டது. இதனால் அவன் படிப்பு முடிந்ததும் ஊருக்குப் போகாமல் தந்தைக்குப் பல சாக்குப் போக்குகள் சொல்லிக் கொண்டே பட்டணத்தில் தங்கிவிட்டான்.

இவன் செய்யும் ஆர்ப்பாட்டங்களைப் பட்டணத்திலேயே இருந்த உறவினர்கள் விபரீதமாக நினைத்து அவனைப் பற்றிப் பல விதமாகத் திரித்துக் கூறினர். அவர்களுடைய வதந்திகள் அவன் பெற்றோர்கள் காதில் விழுந்தன. அவர்கள் துடிதுடித்துப் போயினர்.

அதன் விளைவாக அவன் தந்தை பட்டணத்துக்கு நேரிலேயேவந்து அவனை ஊருக்கு அழைத்துச் சென்றார்.

"அப்பா! நீ நல்ல பிள்ளையா யிருந்து எங்களுக்குப் பெருமை தேடித் தருவாய் என்று நினைத்தேன். ஆனால் எங்களுக்கு அபகீர்த்தி ஏற்படுத்தி விட்டாயே?" என்று சொல்லி அவன் தாயார்



அழுதபோது குப்புசாமி பொங்கி வரும் ஆத்திரத்தால் அதிர்ந்தே போனான்.

"இனியாவது நல்ல பிள்ளையாக நடந்து கொண்டு நம் குடும்ப கௌரவத்தைக் காப்பாற்று!" என்று அவன் அண்ணா அவனுக்குப் புத்தி சொல்ல வந்தபோது குப்புசாமியின் உடல் கூசிக் குறுகியது.

இதனால் எல்லாம் அந்தக் குடும்பத்தில் ஏற்பட்டிருந்த கொந்தளிப்பு தணியப் பல மாதங்கள் கழிந்தன. குப்புசாமி, தான் பட்டணத்தில் சொந்தமாகத் தொழில் ஆரம்பித்து நடத்தப் போவதாகத் தந்தையிடம் சொன்னான். பல ஆட்சேப சமாதானங்களுக்கிடையே அவனுக்கு அநுமதி கொடுத்தார். பட்டணத்தில் குப்புசாமி தங்குவதற்காக ஒரு சிறிய பங்களாவையும் வாங்கிக் கொடுத்தார். அவன் அண்ணா, மன்னி, அவர்கள் குமாரத்தி வத்ஸலா ஆகியோரும் பட்டணத்தில் அவனுடனேயே தங்கினார்கள். இந்த நாட்களில்தான் அவன் மனம் விரக்தி ஏற்படும்படியும் அவன் வாழ்க்கை சாரமற்றதாகச் செய்யவும் ஒரு நிகழ்ச்சி ஏற்பட்டது.

அன்று அவன் வீட்டுக்கு வந்தபோது, வீட்டில் எல்லோரும் மத்தியான சினிமா ஆட்டத்துக்குப் போயிருந்தார்கள். வேலைக்காரன் மட்டும் இருந்தான். "ஐயா! பெரிய ஐயா, அம்மா வெல்லாம் சினிமாவுக்குப் போயிருக்காங்க. உங்களைத் தேடி யாரோ வந்திருக்காங்க. அவங்களை மாடியறையில் உட்கார வைச்சிருக்கேன்" என்றான் அவன்.

ஒருவேளை தன்னுடன் கல்லூரியில் படித்த பெண்ணாக இருக்கலாம் என்று நினைத்தபடியே மாடிக்கு விரைந்தான் குப்புசாமி. மாடி அறையில் நாற்காலியில் உட்கார்ந்திருந்த அந்தப் பெண் குப்புசாமியைக் கண்டதும் எழுந்திருந்தாள். தான் இதுவரையில் பார்த்திராத அந்தப் பெண்ணின் அழகு அவனை மிகவும் வியப்பில் ஆழ்த்தியது.

அவள் மெல்லிய குரலில் "உங்களைப் பார்க்கத்தான் வந்தேன். இந்தக் கடிதம் நீங்கள் எழுதியதுதானே?" என்று ஒரு கடிதத்தை அவனிடம் நீட்டினாள் கோபத்துடன்.

கடிதத்தை வாங்கிப் படித்த குப்புசாமியின் கண்கள் அந்தப் பெண்ணை அதிசயத்தோடு நோக்கின.

"இப்படிப்பட்ட கடிதத்தை நான்தான் எழுதினேன் என்று உங்களுக்கு யார் சொன்னது? மேலும் உங்களையே எனக்கு யார் என்று தெரியாதபோது, உங்கள் குடும்ப விவகாரங்களில் நான் எப்படித் தலையிட முடியும்?" என்று கடுமையாகக் கேட்டான் குப்புசாமி.

"உங்களோடு நேத்ரா என்று ஒரு பெண் படித்துக் கொண்டிருந்தாளே, அவளை மறந்து விட்டீர்களா?" என்றாள்.

அவன் சற்று யோசித்த பின், "ஆமாம்! அதற்கும் இந்தக் கடிதத்துக்கும் என்ன சம்பந்தம்?" என்று கேட்டான்.

"அவளை என் அண்ணாவுக்குக் கல்யாணம் செய்ய நிச்சயித்திருந்தார்கள். இச் சமயத்தில் இந்த அநாமதேயக் கடிதம் வந்திருக்கிறது. அதன் பலனாகக் கல்யாணம் தடைப்பட்டு நிற்கிறது. நேத்ரா, நீங்கள் ஒருவர் தான் இப்படி எழுதக்கூடியவர் என்று உறுதியாகச் சொன்னாள். அதனால்........." என்று சொல்லியபடியே அவன் முகத்தைக் கூர்ந்து நோக்கினாள் அந்த பெண்.

"நானா எழுதியது? நேத்ராவுக்கு உன் அண்ணனை மணக்க இஷ்டமில்லாமல் இருக்கலாம். அதற்காக ஒருவேளை என்மீது பழியைச் சுமத்துகிறாளோ, என்னமோ?"

"அவர்கள் மன ஒற்றுமையை அறியாதவர்கள் ஒருவேளை உங்கள் வார்த்தையை நம்பலாம். இப்போதுகூட என் அண்ணா அந்த அநாமதேயக் கடிதத்தை நம்பத்தான் இல்லை. என் அப்பாதான் 'நெருப்பு இல்லாமல் புகையாது. அதனால் உண்மையைத் தெரிந்து கொண்டுதான் முடிவு செய்ய வேண்டும்!' என்று ஒரே பிடிவாதமாக இருக்கிறார்" என்றாள்.

"ஓகோ அப்படியா? அனாவசியமான மொட்டைக் கடிதங்கள் நம்பும் தந்தையும், அந்த வார்த்தையை ஊர்ஜிதப்படுத்தும் உன் தமையனும் உன்னை அநாமதேயக் கடிதங்களை எழுதும் என்னிடம் தனியாக வந்து வாதாட எப்படி அனுப்பினார்கள்?" என்று கேட்டான் குப்புசாமி. அவன் முகத்தில் கேலியும், ஏளனமும் தாண்டவ மாடின.



"நான் இங்கு வந்தது அவர்களுக்குத் தெரியாது" என்றாள் அவள். மேலும் தொடர்ந்து "நேத்ரா இரவும் பகலுமாய் நினைத்து வருந்துகிறாள். முன் ஒரு சமயம் நீங்கள் அவள் காதலை விரும்பியபோது, அவள் அதை வெறுத்து விலக்கியிருக்கிறாள். அந்தக் கோபத்

தின் காரணமாக நீங்கள்தான் அவள் திருமணத்தைத் தடுக்கும் நோக்கத்துடன் இத்தகைய அநாமதேயக் கடிதம் எழுதியிருப்பீர்கள் என்று சொல்லுகிறாள். என் தந்தையிடம் அவள் மாசு மறுவற்றவள் என்று தங்களைக் கொண்டே நிரூபிக்கச் செய்யவே வந்தேன்'' என்றாள்.

குப்புசாமியின் முக மண்டலத்திலே தீச்சுடர் ஒளிவிட்டு வீசியது. "இதென்ன கதை? முதலில் கடிதம் நீங்கள் எழுதியது தானா என்றாய். சற்று பேசாமலிருந்ததும், நான் எழுதியதாக நானே உன் தகப்பனாரிடம் ஒப்புக்கொண்டு உண்மையை விளக்க வேண்டுமென்கிறாய். நீ யாரிடம் அவதூறாகப் பேசுகிறாய் என்பது ஞாபகமிருக்கட்டும்'' என்று அவன் அதட்டினான்.

அவள் சிறிது நேரம் குப்புசாமியின் கடுமையான கோபத்தைக் கண்டு அசந்து போனாள். ஆனால் உடனே சமாளித்துக் கொண்டாள். அவள் கண்கள் சிவக்க, அதரம் படபடவென அடித்துக் கொள்ள நாற்காலியிலிருந்து எழுந்திருக்க எத்தனித்தவளாகச் சிறிது முன்னால் நகர்ந்து கொண்டே, "உண்மையைச் சொன்னால் உடம்பு எரிகிறதோ? நேத்ராவின் சொல்லை மட்டும் நம்பி நான் இங்கு வந்துவிடவில்லை. என் சிநேகிதிகள்கூட உங்களின் அருங்குணங்களைப் பற்றிச் சொல்லியிருக்கிறார்கள். உங்கள் கோபம் என்னை என்ன செய்தாலும் சரி, உங்களுக்கு நான் சொன்னபடி செய்ய விருப்பமில்லாவிட்டால் கடிதத்தை இப்படிக் கொடுங்கள். இதை உங்கள் மன்னியிடம் கொடுத்து விஷயத்தைச் சொல்லி விடுகிறேன்'' என்றாள்.

அடுத்த நிமிஷம் அவள் சற்றும் நினைக்காத முறையில் அந்தப் பெண்ணின் ரோஜா இதழ்க் கன்னத்தில் 'பளீ'ரென ஓங்கி ஒரு அறை அறைந்துவிட்டான் குப்புசாமி. மனம் கலங்கிய அவள் தன் கன்னத்தைத் தடவியபடி நின்று தடுமாறினாள்.

"நீ பெண் என்பதால் இதோடு விட்டேன். இங்கே இனி ஒரு நிமிஷமும் என்னெதிரே நிற்காதே. ஓடிப்போய் விடு!'' என்று பலமாகக் கத்தினான் குப்புசாமி.

அவன் மிரட்டலில் புது உணர்வு பெற்ற அந்தப் பெண் துடிக்கும் உதடுகளுடன், "உனக்கு இத்தனை வஞ்சனை நெஞ்சமா? பெண்ணைத் தொட்டு அடித்த பாவம் சும்மா விடாது; உன்னால் நிம்மதியாக வாழ முடியும் என்று நினைக்கிறாயா? மன அமைதிக்காக ஏங்கித் தவிக்கும் இந்தக் கலாவதியின் வயிற்றெரிச்சல் வீண் போகாது என்பதை மட்டும் ஞாபகம் வைத்துக் கொள்!'' என்று கூவினாள். அடுத்த நிமிஷம் அவள் அங்கிருந்து பாயும் அம்புபோல 'விர்'ரென்று போய் விட்டாள்.

பேயறைந்தவன்போல ஸ்தம்பித்து நின்ற குப்புசாமி தன் கையிலிருந்த அந்தக் கடிதத்தைப் பார்த்தான். அவன் கண்களில் நீர் நிறைந்தது. 'என்ன அநியாயம்? நான் என்


# மூளைக் கோளாறு

வைத்திய சாஸ்திரத்தின்
ஒரு பெரிய பிரச்னை

மனிதன் சுயநிலை யற்றுப்போனால்
பைத்தியக்காரனாகிறான்

○●○

★ உடை, பழக்கவழக்கங்களில் புதுமை
★ வெற்றுப் பார்வை
★ கவலையும் பீதியும் கொண்ட தோற்றம்
★ ஞாபகச் சக்தியின்மை
★ எதையும் புரிந்துகொள்ள முடியாமை
★ தன்னடக்க மின்மை
★ மாயை, ஒரே காரியத்தை திரும்ப திரும்ப செய்வது, பிரமை.

இவைகளே மூளைக் கோளாறின் அறிகுறிகள்

○●○

இவைகளை மூளையிலேயே கிள்ளிவிட
வைரம், கெம்பு, முத்து
முதலிய நவரத்தினங்கள் சேர்க்கை கொண்ட

# நவரத்ன கல்பம்

எனும் உலகப் பிரசித்தமான மருந்தை உட்கொள்ளுங்கள்



கவிராஜ் பண்டிட்
துர்க்காதத்த சர்மா
வைத்திய வாசஸ்பதி
அவர்களால்
கண்டு பிடிக்கப் பட்டது.

○●○

இலவசப் பிரசுரங்களுக்கு எழுதவும்:

THE MANAGER:
**NAVRATNA KALPA PHARMACY**
JULLUNDUR CITY (India)
Grams: 'NAVRATNA' Phone: 401

வாழ்நாளில் நினைத்துக்கூடப் பார்க்காத "பழி"யைச் சுமந்து கொள்ள வேண்டுமா? கோபம் எவ்வளவு பொல்லாதது! ஆத்திரத்தில் அவதூறு கூறிய ஒரு பெண்ணை யல்லவா அடித்து விட்டேன்!'

இருள் கவிந்து கிடந்த அந்த அறையில் யாரோ திடீரென்று மின்சார விளக்கைப் பொருத்தும் சத்தம் கேட்டது. அதைத் தொடர்ந்து பளீரென்று படர்ந்த ஒளியில் தன் அருகில் நிற்கும் வத்ஸலாவைப் பார்த்ததும் குப்புசாமி சுய நினைவு பெற்றான்.

"சித்தப்பா! நீங்கள் ஏன் ஒருமாதிரியாக இருக்கிறீர்கள்? உடம்புக்கு என்ன, சித்தப்பா? ஐயோ! கண்கள் ஏன் கலங்கி விட்டன?" என்று கூறிக்கொண்டே அவன் அருகில் அமர்ந்தாள் வத்ஸலா.

சட்டென்று கண்களைத் துடைத்து விட்டுக் கொண்டான் குப்புசாமி. வத்ஸலா பிடிவாதமாகக் கேட்கவே அவன் எல்லா விஷயங்களையும் அவளிடம் சொல்லிவிட்டான்.

பிறகு சிந்தனையில் இருந்து விடுபட்டு, "சித்தப்பா! உங்கள் மனம் கலாவின் வசவுக்கு வருந்தவில்லை. உண்மையில் உங்களை நீங்களே தவறாக நினைத்துக் கொண்டு இவ்வளவு நாட்கள் வருத்தப்பட்டிருக்கிறீர்கள்!" என்றாள் வத்ஸலா.

"எப்படி இருந்தால் என்னம்மா? குற்றம் அவளிட மிருந்தாலும் அவளை அடித்தது தவறுதானே? இப்போது உன்னிடம் சொல்லும்போதுகூட என் மனம் என்ன பாடுபட்டது, தெரியுமா?" என்றான் குப்புசாமி.

வத்ஸலா சிரித்தாள். "சித்தப்பா! அவள் கூட அமைதியாக இருப்பதாகத் தெரியவில்லை. நீங்கள் சொல்வதைப் பார்த்தால் எங்கள் பள்ளி உபாத்தியாயினி கலாவதிதான் நீங்கள் சொல்லும் கலாவாக இருக்குமென்று நினைக்கிறேன். ஏனென்றால், குணபூஷணத்தைப் போலவேதான் கலாவதியும் இருப்பாள். ஆனால் நீங்கள் கூறியபடி இப்போதெல்லாம் அவள் படபடப்பாக நடந்து கொள்வதில்லை. அமைதியின் விளக்கமாகவே இருக்கிறாள்!" என்றாள்.

குப்புசாமி சிரித்தபடியே "வத்ஸலா! உண்மையில் என்மீது தவறே இல்லை என்கிறாயா?" என்றான்.

"இருந்தாலும், அயலார் பெண்ணை நீங்கள் அடித்திருக்கக் கூடாதுதான்!"

"சிறு வயதில் எல்லோரும்தான் தவறு செய்கிறார்கள். நன்றாயிருக்கிறது. இவ்வளவு நாட்களாக இதை மனத்தில் வைத்துக் கொண்டு வருந்திக் கொண்டிருக்கிறாயே? இதற்குப் போய், உண்மையை என்னிடம் கூடச் சொல்லாமல் கல்யாணமே வேண்டாமென்று அடம் பிடிக்கிறதா?" என்று கூறிக் கொண்டு அவன் எதிரில் வந்து நின்ற மன்னியைக் கண்டதும் வாயடைத்துப் போனான் குப்புசாமி.

"சரி, சரி இதற்குப்போய் கவலைப்பட்டு இப்படி மெலிந்து போயிருக்கிறாயே? வேறு பெரிய விஷயமாக இருந்தால் எப்படி ஆகியிருப்பாயோ...? வத்ஸலா! நீ போய் நாளைக் காலை குணபூஷணத்தையும், உங்கள் உபாத்தியாயினி கலாவையும் உன் பிறந்த நாள் விழாவுக்கு அழைத்து விட்டு வா!" என்றாள் அவன் மன்னி.

மறு நாள் மாலை வழக்கமாக யாரோ புதிதாக வருவதற்கு அறிகுறியாக நாய் குரைக்கும் சத்தம் கேட்டு, ஆவலை அடக்க முடியாமல் வாசல் பக்கம் எட்டிப் பார்த்தான் குப்புசாமி. வாசற்படிக்கு அருகே உள்ளே வரத் தயங்கிக் கொண்டு நிற்கும் இரு பெண்களைக் கண்டான். அதற்குள் அங்கு ஓடி வந்த வத்ஸலா "நமஸ்காரம்! உள்ளே வாருங்கள்!" என்று கூறியபடி அவர்களை உபசரித்து உள்ளே அழைத்துச் சென்றாள்.

குப்புசாமி கூடத்துப் பக்கம் நுழைந்த போது வத்ஸலா மாடியிலிருந்து வேகமாக ஓடி வந்து அவனைக் கையைப் பிடித்து மாடிக்கு அழைத்துச் சென்றாள்.

அங்கே இரு சுக ஆசனங்களில் கலாவதியும், குணபூஷணமும் அவன் மன்னியும் அருகருகே அமர்ந்து பேசிக் கொண்டிருந்தார்கள்.

"இவர்தான் என் சித்தப்பா!" என்று கலாவதிக்குக் குப்புசாமியை அறிமுகம் செய்து வைத்தாள் வத்ஸலா.

குப்புசாமியைப் பார்த்துக் கலாவதி கை கூப்பி வணங்கினாள்.

குப்புசாமியும் பதிலுக்குப் புன்சிரிப்புடன் "என்னை நீங்கள் மறந்து விட்டிருக்க மாட்டீர்கள் என்று நினைக்கிறேன்" என்றான்.

கலாவதியின் முகம் சற்று சிடுசிடுத்தது. அதற்குள் ஒரு நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு அமர்ந்த குப்புசாமி, "அன்றைய என் செய்கைக்காக நான் மிகவும் வருந்துகிறேன். உங்கள் கோபம் என்னைச் சும்மா விடவில்லை. அன்றிலிருந்து மன அமைதியை நாடித் தவிக்கிறேன். உங்கள் வாயால் மன்னித்தேன் என்று ஒரு முறை சொன்னாலன்றி என் மனம் அமைதி யடையாது!" என்றான், தழு தழுத்த குரலில்.

"இதோ சமையல் கட்டுக்குப் போய் ஒரு நிமிஷத்தில் வந்து விடுகிறேன்; பேசிக் கொண்டிருங்கள்" என்று சொல்லிக் கொண்டே குப்புசாமியின் மன்னி கீழே இறங்கிச் சென்றாள்.

அடுத்த கணம், "குணம்! நான் ஒரு கதை எழுதியிருக்கிறேன்! அதை வந்து படித்துப் பார், எந்தப் பத்திரிகைக்கு அனுப்பலாம் என்று சொல்லு, பார்க்கலாம்" என்று ஜாடையாகக் குணபூஷணத்தைக் கீழே அழைத்துக் கொண்டு வந்தாள் வத்ஸலா.

இவ்வளவு நேரம் குப்புசாமியின் வார்த்தைக் கடலில், பழைய சம்பவ அலைகளில் அலைந்து கொண்டிருந்த கலா இலேசாகச் சிரித்தாள். "இங்கு நடக்கும் ஏற்பாட்டைப் பார்த்தால் உங்கள் வீட்டில் எல்லோருக்குமே அன்றையச் சம்பவம் தெரிந்து விட்டிருக்கும் போலிருக்கிறதே?" என்றாள்.

"ஆமாம்! உங்கள் குணபூஷணத்தை நேற்றுத்தான் பார்த்தேன். ஆகையால் வத்ஸலாவிடம் விஷயத்தைச் சொல்லும்படியாகி விட்டது. அந்தச் சமயத்தில் மன்னியும் தெரிந்து கொண்டு விட்டாள்."

சாந்தமே உருவாக அமர்ந்திருந்த கலாவதியின் கண்களில் கண்ணீர் முத்துச் சுடர் போல் பிரகாசித்தது.

"உண்மையில் அந்த விஷயத்துக்காக என்னைத்தான் நீங்கள் மன்னிக்க வேண்டும். நேத்ரா ஆத்திரத்தால் அந்தக் கடிதத்தை நீங்கள்தான் எழுதியிருப்பீர்கள் என்று அழுது தீர்த்தபோது, நானும் ஆழ்ந்து யோசியாமல் ஆவேசத்தோடு உங்களிடம் வந்து கண்டபடி பேசி விட்டேன். பல மாதங்களுக்குப் பிறகு அண்ணாவே இந்த உண்மையைச் சொல்லி விட்டான்.

"நேத்ரா உண்மையில் தன்னை விரும்புகிருளா என்று அறிய என் அண்ணாவேதான் அந்தக் கடிதத்தை எழுதினானும். நீங்கள் இங்கிருப்பதும் உங்கள் அண்ணா மகள்தான் வத்ஸலா என்பதும் எனக்கு முன்பே தெரிந்திருந்தால் முன்பே வந்து உங்களிடம் மன்னிப்பு கேட்டிருப்பேன். ஏதோ தெரியாமல் தவறு நேர்ந்து விட்டது. முன்பின் யோசியாமல் நான் கூறிய வார்த்தைகளுக்கு அன்றே பதில் தந்து விட்டீர்கள். இருந்தாலும் என் மனம் ஏதோ வேதனையால் வெந்து கொண்டிருந்தது. இன்று உங்களைப் பார்த்து உண்மையைக் கூறிய பின்தான் மனம் அமைதியடைந்தது. நான் போய் வருகிறேன்!" என்று சொல்லியபடி எழுந்தான் கலாவதி.

குப்புசாமியும் சிரித்துக் கொண்டே "குணபூஷணமும் வத்ஸலாவும் வரவில்லையே! போகலாம் இருங்கள். உங்கள் கணவர் என்ன வேலை செய்கிருர்?" என்று கேட்டு விட்டு அவள் முகத்தைக் கூர்ந்து பார்த்தான். அவள் கணத்திஞல் தலையைக் கவிழ்ந்து கொண்டாள்.

"உங்களுக்கு இன்னும் மணமாகவில்லையா?" என்று அவ்ள் முகத்தை ஆவலோடு பார்த்தான் குப்புசாமி. அவள் மௌனமாயிருந்தாள்.

"உங்கள் மனத்தை மீண்டும் ஒரு முறை புண்படுத்தி விட்டேன் என்று நினைக்கிறேன். உங்களுக்கு மணமாகாமலிருப்பதற்குக் கூட நான்தான் காரணமோ என்கிற பயத்தால் கேட்டேன்" என்றான்.

அவள் சட்டென்று நிமிர்ந்து "ஆமாம், அதற்கும் நீங்கள்தான் காரணம்! அன்று வெகு உரிமையுடன் என்னைத் தீண்டிய தோடல்லாமல் சதா என் நினைவில் இருக்கும் உங்கள் முகம்தான் என்னை வேறொருவரை மணக்க அனுமதிக்கவில்லை!" என்றாள்.

குப்புசாமிக்குப் பேச நா எழவில்லை.

# வட்ட மேஜை

## இனம் விவசாயிகளின் தவிப்பு!

**வா**னம் பார்த்த சீமையான எங்கள் இராமநாதபுரம் ஜில்லாவில், கடந்த ஆறு வருடங்கள் தொடர்ந்து மழை பெய்யாத தாலூக்காக்களில் கோவில்பட்டிக்கு அடுத்துள்ள எங்கள் சாத்தூர் தாலூக்காவும் ஒன்று. அந்தத் தாலூக்காவில், சாத்தூர் இனம் கிராம விவசாயிகளாகிய நாங்கள், தொடர்ந்து ஆறு வருடங்களுக்கு மேலாகவே சரியானபடி மழையில்லாததால் பெரிதும் கஷ்டமடைந் திருக்கிறோம். விவசாயத்தைத் தவிர வேறு தொழிலில் பழக்கப் படாத நாங்கள் பல வருடங்கள் கஷ்டமடைந் திருந்தும் வழியில்லாமல் விவசாயச் செலவுகளுக்காகவும் குடும்பப் பராமரிப்புக்காகவும் எங்கள் நிலங்களை ஒத்தி வைத்துக் கடன் வாங்கியிருக்கிறோம். எங்களுக்குக் கடன் கொடுத்தவர்கள், (30 வருட) ஒத்தி சட்டத்துக்குப் பயந்து, ஒத்திப் பத்திரத்திலேயே கடன் வாங்கின தேதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் கடனைத் திருப்பிக் கொடுக்கா விட்டால், இதையே கிரயமாகவும் எழுதி வாங்கிக்கொண்டு, எங்களிடமே நிலங்களைக் கட்டுக் குத்தகைக்கு விட்டு விட்டார்கள். எங்களில் பலருக்கு, ஐந்து வருடக் கடன் தவணை முடிவு, 1954-ம் வருட மத்தியில் ஏற்படுவதால் சாத்தூர் ஸ்ரீ வில்லிபுத்தூர் தாலுகாக்களின், ஸ்ரீ வில்லிபுத்தூரிலிருக்கும் கூட்டுறவு நில அடமான பாங்கிக்கு எங்கள் சாத்தூர் இனம் கிராமத்தையும், பாங்கியின் விவகார எல்லைக்குள் சேர்த்து, எங்களுக்கும் நீண்டகால கடன் கொடுத்து உதவும்படி 19—3—53ல் மனுச் செய்து கொண்டோம்.

சர்க்காரின் கீழ் ஏற்கெனவே இருக்கும் சர்வே ஆன ரயத்துவாரி நிலங்கள் அடங்கிய கிராமங்களில் உள்ள விவசாயிகளுக்கு மட்டும் தான் நீண்டகால கடன் வசதி கொடுக்க முடியும் என்றும், சர்க்காரால் எஸ்டேட், இனம் ஒழிப்புச் சட்டப்படி சர்க்காரின் கீழ் ஆர்ஜிதப்படுத்தப் பட்ட இனம் கிராமங்கள் சர்வே ஆனவொழிய அந்த இனம் கிராம விவசாயிகளுக்குக் கடன் கொடுக்க இயலாதபடி கூட்டுறவு இலாகா சட்ட திட்டங்கள் இருப்பதாகவும் தெரிய வருகிறது. எங்கள் வருடாந்திர விவசாய வருமானத்தில் பெரும் பகுதியைக் கடும் வட்டியாக வாங்கும் கடன்காரர்களின் இரும்புப் பிடியிலிருந்து நீங்கி, கடனை ஒழித்து நிம்மதியாக மேற்படி நில அடமான பாங்கில் எங்கள் நிலத்தை அடமானம் வைத்துச் சிறிது சிறிதாக நீண்டகாலத் தவணையில் அசலும், நியாய வட்டியுடன் திருப்பிக் கடனை அடைக்க உதவும்படி செய்யக் கூட்டுறவு இலாகா நில அடமான பாங்குகளின் சட்ட திட்டங்களைத் தகுந்த முறையில் சென்னை சர்க்கார் உடனடியாக மாற்றி அமைத்து எங்களை உய்விக்க வேண்டுகிறோம். சாத்தூர் இனம் கிராம விவசாயிகளின் சார்பில் இதை எழுதுகிறேன்.

சாத்தூர்
26—12—53

லெ. இராமலிங்கம்பிள்ளை



செங் :நீபட்டு சேவா சங்கத்தார் ராஜாஜி ஜயந்தியைச் சிறந்த முறையில் கொண்டாடினர். மாலையில் நடந்த பொதுக் கூட்டத்துக்கு ஸ்ரீ ஷாபி முகம்மது தலைமை வகித்தார். ஸ்ரீ சின்ன அண்ணாமலை, ஸ்ரீ பாலசுப்பிரமணியம் முதலியோர் ராஜாஜியின் சேவைகளைப் பாராட்டி அவர் நீடூழி வாழப் பேசினர்.

## பம்பாயில் வில்லுப் பாட்டு!

சமீபத்தில்தான் ஆரம்பிக்கப்பட்ட போதிலும் வெற்றிகரமாக இலக்கிய, கலை நிகழ்ச்சிகளை நடத்தி வரும் கோரேகான் தமிழ்ச் சங்கம், பம்பாய்த் தென்னிந்திய சமூகத்தினரிடையே சிறந்த பணியாற்றி வருகிறது. மேற்படி சங்கத்தின் ஆதரவில் 25-12-53 அன்று அமர கவி பாரதியாரின் "பாஞ்சாலி சபதத்தை", ஸ்ரீ சுபஸ்ரீ கோஷ்டியார் வில்லுப் பாட்டில் இசைத்தார்கள்.

வில்லின் கிணுகிணுப்போடு, பானையின் நாதமொலிக்கப் பாரதியின் வீரச் சுவை மிக்க கவிதைகளைத் தக்க மெட்டில் ஸ்ரீ டி.எஸ். ஹரிஹரன் முதலியோர் உணர்ச்சிகரமாகப் பாடியபோது சபையோர் மெய் மறந்து களித்தனர்.

கலை நிகழ்ச்சிக்குத் தினமணி ஆசிரியர் ஸ்ரீ ஏ. என். சிவராமன் அவர்கள் தலைமை வகித்தார். விழாவுக்கு ஏராளமான பெண்கள் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

பம்பாய் — காரியதரிசி,
26-12-53 — கோரேகான் தமிழ்ச் சங்கம்

## விபரீத ஹாஸ்யம்!

இரண்டு நாட்களுக்கு முன் பம்பாயிலுள்ள "லிபர்ட்டி" தியேட்டரில் "சாச்சா சௌத்ரி" என்ற படத்தைக் கண்டேன். அதில் வரும் சில அருவருப்பளிக்கும் காட்சிகளைக் குறித்தே இக் கடிதம் எழுதுகிறேன். இப்படத்தில், தமிழ் நாட்டுப் பழக்கங்களைப் பரிகசித்து ஹாஸ்யம் உண்டுபண்ண முயன்றிருப்பது மிக்க கேவலமான காரியமே யாகும். ஒரு தமிழ் சங்கீத வித்வானைப் படத்தில் புகுத்தி, அவர் வேஷ்டி கட்டிக் கொள்ளும் முறையிலிருந்து அவரது பாட்டு வரை எல்லாவற்றையும் இகழ்ந்திருக்கின்றனர். கர்நாடக சங்கீதத்தில் ஆலாபனை குதிரை கனைப்பது போல் இருப்பதாகக் கூறும் அந்த "சாச்சா", வடநாட்டு முறையில் ஒரு பாட்டுப் பாடுகிறான். (கர்நாடக ஸங்கீதத்தை விட வடநாட்டு சங்கீதம் சிறந்தது என்பதைக் குறிக்கும் நோக்கத்தோடு தான்). இதைக் கேட்ட நம் தமிழ் வித்வான், அவன் காலில் விழுந்து மன்னிப்புக் கேட்பதாகவும், அவ்வூரை விட்டே ஓடிவிடுவதாகவும் காண்பிக்கப் படுகிறது. இவைபோல், தமிழ் நாட்டுக்கும் அதன் அற்புத இசைக்கும் குந்தகம் விளையும்படி வேறு சில காட்சிகளும் அமைந்திருக்கின்றன.

ஏற்கெனவே, ஒற்றுமையும், நாம் எல்லோரும் ஒரு தேசத்தினர் என்ற பரந்த மனப்பான்மையும் நமக்கிடையே வேண்டியிருக்கும் இக்காலத்தில், இது போன்ற படங்கள் வீண் மனத்தாங்கலையும் வெறுப்பையும் உண்டுபண்ணும் என்பதைப் படமெடுப்பவர்கள் உணர்வார்களாக.

பம்பாய்
27—12—53 — ரா. நடராஜன்

## தீக்ஷிதர் விஷயம்

கல்கி 27-12-53 இதழில் பிரசுரமான "சங்கீத நீதிபதி" என்ற கட்டுரையைப் படித்தேன். அதில் எழுதியிருக்கும் வரலாறு சிறிது வேற்றுமைப் படுகிறது.

கனம் நீதிபதி டி. எல். வெங்கட்ராம அய்யர் அவர்கள் பிரபல வக்கீலாயிருந்த பொழுதே சங்கீதத்தில் மிகுந்த ஆர்வம் கொண்டிருந்தார். அதிலும் சம்ஸ்கிருதத்தில் அமைந்த ஸாஹித்யங்கள் என்றால் மிகவும் சந்தோஷமடைவார். 1931-32—ல் மயிலாப்பூரில் சங்கீதத்தை விருத்தியாகக் கொண்டிருந்தவரும், தற்சமயம் கல்கத்தாவில் வசிக்கும் ஸ்ரீ அனந்த கிருஷ்ணன் என்பவரிடம் தீக்ஷிதரவர்களின் குடும்ப வரலாறுகளைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அய்யரவர்கள் தீக்ஷிதர் கீர்த்தனைகளை நிரம்பப் பாடம் செய்தும், அதை உலகத்தாருக்குப் பரவச் செய்ய வேண்டுமென்றும், அதை அந்த வம்சத்தார்களிடமே நேர் முகமாகப் பாடம் செய்வதில் ஆர்வங் கொண்டவராய் 1932-33-ல் கோவில்பட்டியில் என் தகப்பனார் ஸ்ரீ அம்பி தீக்ஷிதர் அவர்களைச் சந்தித்தார். தன் விருப்பத்தையும் தெரிவித்தார். அவ்வமயம் எங்கள் குடும்பம் எட்டயபுரம் ஜமீன்தார் அவர்களின் ஆதரவில் இருந்தது. இருந்தாலும் நீதிபதி அவர்களின் அழைப்பிற்கிணங்கித் தீக்ஷிதர் சென்னை சென்று தங்கினார். அய்யர் அவர்களுக்குக் கீர்த்தனைகளை அன்புடன் போதித்தார். இதுதான் உண்மை. என் தந்தை ஒருபோதும் தம் கஷ்ட நிலையை எடுத்துக் கூறி எங்கும் சென்றதில்லை. ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர்தான் தீக்ஷிதர் வீடு தேடி வந்தார்.

கடந்த பதினைந்து ஆண்டுகளாகச் சென்னையிலும், மற்றும் தான் செல்லும் ஊர்களிலும் தீக்ஷிதர் கீர்த்தனையையும், அதன் மகிமையையும் ஸ்ரீ டி. எல். வெங்கட்ராமய்யர் எடுத்துச் சொல்லத் தவறுவதில்லை.

திருச்சி
27-12-53 — எம். பாலுசாமி தீக்ஷிதர்

நடுக்கும் குளிர் ஜுரம் மேலும் உடலில் வலி இவற்றுடன் ஆரம்பமாகும்

# மலேரியாவை 'பாலுட்ரின்' நீக்குகிறது

மலேரியாவின் சின்னங்களைத் தெரிந்து கொள்ளுங்கள்

முதலில் குளிரால் நடுக்கம் உண்டாகும். ஜுரம் ஆரம்பமாகும். பிறகு உடம்பு முழுவதும் வியர்த்து வலி உண்டாகும். இந்த அறிகுறிகள் ஏற்பட்டால் உடனேயே டாக்டரைப் பாருங்கள்.

எப்பொழுதும் 'பாலுட்ரின்' சாப்பாட்டிற்குப் பிறகு ஒரு டம்ளர் தண்ணீருடன் உட்கொள்ளுங்கள்.

வயதுவந்தவர்களுக்கும், 12 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும்: ஒரு மாத்திரை

6 லிருந்து 12 வயதுவரையுள்ள குழந்தைகளுக்கு: அரை மாத்திரை

6 வயதுக்கு கீழ்ப்பட்ட குழந்தைகளுக்கு: கால் மாத்திரை

தினந்தோறும் ஜுரம் குணம் அடையும் வரை கொடுக்கவும்.





ஒரு நல்ல ஆரோக்கியமான சின்னஞ்
சிறு குழந்தை தனது தாயின் இத
யத்தை மகிழச் செய்கிறது. திடகாத்
திரமான சிறிய உடல், வெண்மை
யான முத்துப்பற்கள்... இவைகளை
ஸெவன்ஸீஸ் காட் லிவர் ஆயில்
உட்கொள்ளுவதால் அடையலாம்.
இயற்கையான போஷாக்கு அளித்து
வலிவூட்டும் விட்டமின் சத்துக்கள்
நிரம்பியது காட் லிவர் ஆயில்.

**SevenSeaS**

ஸெவன் ஸீஸ்

ஓர் இயற்கையான விட்டமின் உணவு




விவரங்களுக்கு:

கார் அண்டு கம்பெனி லிமிடெட்

த. பெ. 152 - 7814 - 1243

பம்பாய் - கல்கத்தா - மதராஸ்

# 31. வேலை நிறுத்தம் ஏன்?

ஜ்வாலாப் பிரஸாதின் மூளை ஒரு நிலையில் இல்லை. ஏனெனில் எத்தனையோ மில்களில் வேலை நிறுத்தம் ஆரம்பமாகி விட்டது. அன்றைக்கே அவருடைய மில்லிலும் வேலை நிறுத்தம் ஆரம்பமாவதாக இருந்தது. 'இன்றைக்கு இருக்கும் குழப்பத்தில் நாம் மில்லுக்குப் போவானேன்?' என்று அவர் மில்லுக்குப் போகும் எண்ணத்தையே ஒத்திப் போட்டு விட்டார். இரண்டு மூன்று மில்களில் தொழிலாளிகள் கலகம் செய்வதற்குக் கூடத் தயாராகி விட்டார்கள். போலீஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்வதாகப் பயமுறுத்தின பிறகு தான் அவர்களுடைய அந்த ஆவேசமும் ஆக்ரோஷமும் கொஞ்சம் குறைந்தன. தம்முடைய மில்லிலும் அம்மாதிரிப் பயங்கர நிகழ்ச்சிகளுக்கு அடிகோலப் படாமல் இருக்க வேண்டுமே என்று ஜ்வாலாப் பிரஸாதுக்கு உள்ளூறத் திகிலாயிருந்தது. எனவேதான் அவர் அநாவசியமாக நாம் சம்பவம் நிகழும் இடத்துக்குப் போகவும் வேண்டாம், தொழிலாளிகளிடையே தலைதூக்கி நிற்கும் தாக்குதல் உணர்ச்சிக்குத் தூபம் போட்ட கைங்கரியத்தை ஏற்றுக்கொள்ளவும் வேண்டாம் என்று எண்ணி வீட்டிலேயே இருக்கத் தீர்மானித்து விட்டார்.

பணம் பத்தும் செய்யும், பணத்தினால் ஆகாத காரியம் இந்த உலகத்தில் ஒன்றுமே கிடையாது என்கிறோமே! ஆனால் அந்தப் பணத்தைப் பொருட்படுத்தாமலே, பலர் பிறருக்காகத் தங்கள் உயிரையும் தியாகம் செய்யச் சித்தமாகி விடுகிறார்களே! அப்படிப்பட்டவர்களைப் பத்தும் செய்யும் பணத்தினால் மாற்றி விட முடிகிறதா, அல்லது விலைக்குத் தான் வாங்கிவிட முடிகிறதா?

ஜ்வாலாப் பிரஸாத் இவ்விஷயத்தை நன்கு உணர்ந்திருந்தார். எனவே, வேலை நிறுத்தம் காரணமாக ஏற்படக் கூடிய பயங்கரச் சூழ்நிலைகளைச் சமாளிப்பதற்காக வேண்டி, அவர் மில்லில் உள்ள மானேஜருக்கும் மற்றும் உள்ள நிர்வாக அதிகாரிகளுக்கும் உத்தரவுக்கு மேல் உத்தரவுகள் கொடுத்திருந்தார்; எச்சரிக்கைகளுக்கு மேல் எச்சரிக்கைகள் விடுத்திருந்தார்.

தொழிலாளிகள் தங்கள் கூலியை உயர்த்த வேண்டும் என்று எதற்காக இப்படிக் குழப்பம் விளைவிக்கிறார்கள்? — இவ்விஷயம் முதலாளிகளின் மூளைக்கே எட்டாத விஷயமாக இருக்கிறது. பெரும்பாலான பங்குகளை வாங்கிச் சேர்த்துக் கொண்டு, டைரக்டர்களாகவும், மானேஜிங் ஏஜெண்டுகளாகவும் தரகர்களாகவும் கமிஷன் வியாபாரிகளாகவும் ஆகும் பணம் படைத்த பெரியவர்களுக்கு, தொழிலாளிகளிடையே அதிருப்தி நிலவுவதைக் காணும்பொழுது, நாலு கோணல் எழுத்துப் படித்துவிட்ட சிலர்தான் தொழிலாளிகளைச் சிண்டு தட்டிவிட்டுத் தூண்டிவிடுகிறார்கள், அதனால் இதுபோன்ற குழப்பங்கள் உண்டாகின்றன என்று தோன்றுகிறது.

கூலியாள் வேலை செய்தால் கூலி பெறுகிறான். தொழிலாளி தனக்குக் கொடுத்த வேலையைச் சரியாகச் செய்தால் சம்பளம் பெறுகிறான். அதற்கு மேலாக அவன் அதிக வேலை செய்தால் அதிகக் கூலி 'எக்ஸ்டிரா' வாகப் பெறுகிறான். வேலைக்குத் தகுந்த கூலி அவனுக்குக் கிடைக்கிறது. வாழ்நாள் முழுவதும் வயிற்றுப் பாட்டுக்குக் கவலையில்லாமல் வழி தேடிக் கொள்ள முடிகிறது. இதையெல்லாம் ஏன் இந்த ஏழைத் தொழிலாளிகள் எண்ணிப் பார்ப்பதில்லை?

நிர்வாகிகளுக்கு லக்ஷம் லக்ஷமாக லாபம் கிடைத்து விட்டால் தொழிலாளிகளுக்குப் போனஸ் கொடுக்கிறார்கள். தொழிலாளி தப்பித் தவறி யந்திரத்தில் காலைக் கையைக் கொடுத்து ஒடித்துக் கொண்டாலோ அல்லது யமபுரியை எட்டிப் பார்த்தாலோ அவன்




குடும்பத்துக்கு இரண்டொரு மாதத்துக்குக் காணக்கூடிய அளவிற்கு அவன் மனைவி மக்களுக்கு நஷ்டஈடு கொடுக்கிறார்கள். அப்படியிருக்கும் பொழுது, அதாவது இவ்வளவு சௌகரியங்கள் செய்து கொடுத்த பின்னரும் தொழிலாளிகளிடையே திருப்தி யின்மை நிலவுமானால், முதலாளிகள் என்ன செய்வார்கள், பாவம்! கொடுக்கக் கொடுக்க இந்தத் தொழிலாளிகளுக்குத் திருப்தி என்பதே ஏற்படாதோ என்று தானே எண்ணத் தோன்றும்? அதன் காரணமாகத் தொழிலாளிகளிடையே நிலவியிருப்பது உண்மையான அதிருப்தி தானா, இல்லையா என்பதை அவர்களால் சரிவரப் புரிந்து கொள்ள முடிவதில்லை. அதனால், பாவம்! முதலாளிகள் ஒன்றும் புரியாமல் மூளையைக் குழப்பிக் கொண்டு இதற்கு என்ன வழி வகை செய்வது என்று சிறிதும் விளங்காமல் திண்டாடுகிறார்கள்.

முதலாளிகளில் பலர் இரக்க சிந்தனை படைத்தவர்களாகவும் இருக்கிறார்கள். தங்

களைப் பொறுத்த வரை மட்டும் அல்ல; தொழிலாளிகளிடமும் நெஞ்சம் நெகிழ்ந்து இரக்கம் காட்டுகிறார்கள். எப்படித் தெரியுமா? சிற்சில சமயம் தற்செயலாக வெளி வியாபாரத்தில் செல்வாக்கைக் குறைத்து விடக் கூடிய—விற்க முடியாத துணிகள் மில்களில் தயாராகி விடுகின்றன அல்லவா? அவற்றைக் கருணை கூர்ந்து தங்களிடம் ஊழியம் செய்யும் எளிய தொழிலாளிகளுக்கு மார்க்கெட் நிலவரத்துக்குக் காலணா குறைத்தே கொடுத்து விடுகிறார்கள். என்ன தாராளம்! இதைக் காட்டிலும் ஒரு முதலாளி தொழிலாளிக்கு வேறு என்ன தான் செய்ய முடியும்? தொழிலாளி இந்தக் காட்டிலும் வேறு என்னதான் முதலாளியிடம் வேண்ட முடியும்?

ஆனால் மானேஜிங் ஏஜெண்டுகள் என்று சொல்லிக் கொள்பவர்களுக்கு, மில்லில் கிடைக்கும் லாபத்தைக் கொண்டு பங்களா,



பூங்கா போன்றவை வேண்டும். உலாவப் போவதற்கு மோட்டார் காரும் விளையாடிப் பொழுது போக்குவதற்கு டென்னிஸ் மைதானமும் வேண்டும். அதோடு வாழையடி வாழையைப் போல் அவர்களுடைய தலைமுறையைச் சேர்ந்த சந்ததிகளுக்கு மில்லின் முதலாளித்துவமும் கிடைக்கவேண்டும். அவர்களுடைய உற்றார் உறவினர்களுக்கும் ஆப்த நண்பர்களுக்கும் அறிமுகமானவர்களுக்கும் நல்ல சம்பளத்தில் நல்ல பதவி கிடைக்க வேண்டும். மில்லின் பணத்தைக் கொண்டு பங்கு வியாபாரத்தில் போட்டா போட்டி போடுவதற்குச் சௌகரியமும் சாதனங்களும் வேண்டும். அதில் லாபம் கிடைத்தால் தங்கள் பைக்குள் போட்டுக் கொள்ள வேண்டும். நஷ்டமாகி விட்டால் மில்லின் கணக்கில் ஏற்றி விடவேண்டும். இந்தச் சுதந்திர உரிமை அவர்களுக்குக் கட்டாயம் கிடைத்தே தீர வேண்டும். அதோடு மட்டும் அல்ல; மில்லிலிருந்து கிடைக்கும் லாபத்தைக் கொண்டு, தகப்பன் - தனயன், தாயார் - தமக்கை, அண்ணன் - தம்பி ஆகியவர்களின் பெயரில் அதே மில்லின் பங்குகளை வாங்கிப் போட வேண்டும். ஏன்? நாளாவட்டத்தில் அந்த மில்லையே தம் சொந்தச் சொத்தாக்கிக் கொண்டுவிட முயற்சிக்க வேண்டும். ஏதாவது காரணத்தை முன்னிட்டு அந்த மில் மூடப் படுமானால், தாமும் தம் குடும்பமும் சுகமாக வாழவும், தேவையேற்பட்டால் புதிய மில் ஒன்று திறக்கவும் மனைவியின் பெயரில் பாங்கியில் கணக்கு வைத்துக் கொண்டு பணம் போட்டு வைத்துக் கொள்ள வேண்டும். இப்படியெல்லாம் முன்னெச்சரிக்கையுடன் காரியம் செய்யாவிட்டால் அவர்களை முதலாளிகள் என்று யார் சொல்வார்கள்? எப்படிச் சொல்வார்கள்?

அது சரி! ஆனால் இதனால் தொழிலாளிகளுக்கு என்ன லாபம்? லாபம் என்னவா? இதென்ன அசட்டுக் கேள்வி? அவர்கள் ரத்தம் வியர்வையாக ஆகித் தண்ணீராகச் சிந்துகிறதே! அப்படித் தண்ணீராகச் சிந்துவதனால்தானே மில்லில் ஏராளமான பொருள்கள் தயாராகின்றன! அந்தப் பொருள்கள் தயார் செய்வதற்குப் பிரதியுபகாரமாக அவர்களுக்குச் சம்பளம் கிடைக்கிறதே! அது லாபம் இல்லையென்றால் வேறு என்னவாம்? பெரிதாகத் தொழிலாளிகள் என்ன மூளையைச் செலவிட்டு விடுகிறார்கள்? மூளையைச் செலவிடுவதற்கென்றுதான் மில் சொந்தக்காரர்களும் மானேஜிங் ஏஜெண்டுகளும் நிரந்தரக் குத்தகை எடுத்துக் கொண்டிருக்கிறார்களே! அவர்கள் அப்படி மூளையைச் செலவிடுவதனால்தானே பணம் போராகக் குவிகிறது? தொழிலாளிகளுக்கு மூளையைச் செலவிடப் பொழுது எங்கே யிருக்கிறது? உடலை ஓடாக மதித்து உழைப்பதிலிருந்து அவர்களுக்குச் சிறிது நேரமாவது ஓய்வு கிடைத்தால் அல்லவா, 'எங்களுக்கும் மூளையிருக்கிறது!' என்று அவர்கள் காட்டிக் கொள்வதற்கு? இதற்கெல்லாம் அவர்கள் பிறந்த வேளையையும், தலையெழுத்தையும் குற்றங்கூற வேண்டுமே ஒழிய அவர்களைக் குறைகூறி என்ன பயன்? இந்த உலகத்தில் அறிவைக் கொண்டுதான் ஆட்டம் போடுகிறார்கள். அறிவுதான் பணம் ஆகிறது. அறிவாளிகளால்தான் இஷ்டப்படி ஏராளமாகப் பணம் சம்பாதிக்கவும் முடிகிறது.

அப்படியிருக்கும் பொழுது தொழிலாளிகளுக்குக் கொடுக்கப்படும் கூலி யாருடையது? மூளையைப் பலமாகக் கொண்ட முதலாளிகளுடையதுதானே? தொழிலாளிகளை அவர்கள் தங்கள் இஷ்டம் போல் ஆட்டி வைத்தால் அவர்கள் அதற்குத் தகுந்தவாறு ஆட வேண்டியவர்கள்தானே?

இந்திய மண்ணுக்கு அபாரமான சக்தியிருக்கிறது. அது அலாதிச் செழிப்பு வாய்ந்தது. தனித் தன்மையான உரம் பெற்றது.

ஏராளமான பொருள்களை விளைவிக்கக் கூடியது. ஏன்? மண்ணைப் பொன்னாக்கும் வல்லமைகூடப் பெற்றது. அதேபோலப் பணக்காரர்களின் பணத்துக்கும் உற்பத்தியைப் பெருக்கும் அபார சக்தி இருக்கிறது. இனம் இனத்தோடு சேரும் என்கிறோமே, அது போலப் பணம் பணத்தோடு சேருகிறது. இதில் வியப்புறுவதற்கு என்ன இருக்கிறது? ஆயிரத்தைப் பத்தாயிரமாகவும், பத்தாயிரத்தைப் பத்து லட்சமாகவும், பத்து லட்சத்தைப் பத்துக் கோடியாகவும் பங்கு வியாபாரத்தின் மூலம் பெருக்கும் திறன் பணக்காரர்களுக்குத்தான் இருக்கிறது. ஏழைகள் பங்கு வியாபாரத்தில் இறங்குவதைப் பற்றிக் கனவுதான் காண முடியுமா? கண்டால்தான் அது நனவாகுமா? அத்தகைய கனவு காண வேண்டும் என்றால் அவர்கள் பணக்காரர்களாக அல்லவா ஆகவேண்டும்?

ஆனால் சிற்சில சமயம், விதி மயக்கத்தால் பணக்காரர்களுடைய லட்சக் கணக்கான சொத்து 'புது வெள்ளம் வந்து பழைய வெள்ளத்தையும் அடித்துக் கொண்டு போனதாம்!' என்ற கதையாகப் பங்கு வியாபாரத்தில் மூழ்கி விடுவதுகூட உண்டு. அதற்கு யார்தான் என்ன செய்ய முடியும்? என்ன வருந்தி தான் என்ன பயன்? இந்த வாழ்க்கையே பார்க்கப் போனால் ஒரு விதத்தில் சூதாட்டம்தானே?

ஆனால் இம்மாதிரிச் செயல்களில் தொழிலாளிகளால் இறங்க முடியுமா? அவர்கள் இதைப் பொறுத்தவரை கனவு கூடக் காண முடியாதவர்களா யிருக்கும் பொழுது எப்படி இறங்க முடியும்?

தொழிலாளிகள் தொழில் செய்வதற்கெனவே பிறந்திருக்கிறார்கள். அவர்கள் கூலி வேலை செய்துதான் பிழைக்க வேண்டும். கூலி வேலை செய்தவாறே காலனின் கைப் பிடியில் சிக்கியாக வேண்டும். இதை விட்டால் அவர்களுக்கு வேறு வழி கிடையாது; ஆம், கிடையவே கிடையாது.

ஆனால் புத்தியுள்ள முதலாளிகள் ஒரே ஒரு விஷயத்தை மட்டும் எண்ணிப் பார்க்க மறந்து விடுகிறார்கள். உழைத்து உழைத்து ஒரு தொழிலாளியின் அறிவு மட்டும் மங்கி மடியாமல் இருந்து அவன் அசட்டுத் துணிச்சலை வரவழைத்துக் கொண்டு, "முதலாளி! தொழிலாளிகளான எங்கள் உழைப்பை 'வேண்டாம்!' என்று கூறி ஒருபுறம் மூட்டை கட்டி வைத்து விட்டு உங்கள் புத்தியையும் பணத்தையும் கொண்டு மில் நடத்திப் பாருங்கள். உங்களால் எத்தனை பொருள் தயார் செய்ய முடிகிறது என்று பார்த்து விடுவோம்!" என்று கேட்டு விட்டால் முதலாளியான நாம் 'என்ன பதில் சொல்வது? என்று அவர்கள் யோசித்துப் பார்ப்பதே யில்லை. முதலாளிகளின் மண்டையில் முதலாளித்துவத்தின் செருக்குப் புகுந்து கொண்டு இலேசில் அவர்களை அப்படிச் சிந்தித்துப் பார்க்கவே விடுவதில்லை.

அவர்கள் அதைப் பற்றி யெல்லாம் ஏன் யோசிக்க வேண்டும்? யோசித்துப் பார்த்தால் கூட அவர்களுக்கு அதற்குச் சரியான பதில் கிடைப்பதில்லை. ஏனெனில் உற்பத்தியைப் பெருக்குவதற்கான உண்மையான சக்தி உழைப்பில்தானே அடங்கியிருக்கிறது? பணத்துக்கு அந்தச் சக்தி ஏது?



ஆனால் ஒரு வேடிக்கை! உழைப்பின் பலனாக உற்பத்தியான பொருளே பணமாக மாறியதும் பணத்தின் இயல்பைப் பெற்று விடுகிறது; தன்னைப் படைத்த உழைப்புக்கு எஜமானனாகி அதையே ஆட்டி வைக்கத் தொடங்கி விடுகிறது, தாயை மகள் ஆட்டி வைக்கும் கதையாக.

உழைப்புக்கும் பணத்துக்கும் உள்ள தொடர்பு எத்தகையது என்பதைப் புரிந்து கொண்ட அன்றுதான் மில் முதலாளிகளுக்கும் தொழிலாளிகளுக்கும் இடையே உள்ள பாகுபாடு என்னும் அகழி தூர்க்கப்படும்.

மில்லில் ஏற்படும் லாபம், பணம், புத்தி இவற்றை மட்டும் பொறுத்ததல்ல. தொழிலாளிகளையும் அவர்களுடைய உழைப்பையும் பொறுத்ததுதான். தொழிலாளிகளின் உழைப்பின் பங்குதான் இரண்டையும் விட அதிகம் என்பதை மில் முதலாளிகள் நன்கு புரிந்து கொண்டால்தான், தொழிலாளிகளுக்கும் அறிவை உபயோகப் படுத்துபவர்களைப் போல் உரிமையும் லாபமும் கிடைக்க ஹேதுவாகும். அப்பொழுதுதான் தொழில் அபிவிருத்தி அடைய முடியும்.

ஆனால் அதே சமயத்தில் தொழிலாளிகள் தங்கள் அதிருப்தியைத் தெரிவித்துக் கொள்ளக் கடைப் பிடிக்கும் வழியும் நேர்மையானதாக இல்லை. அவர்கள் முதலாளிகளுக்குத் தங்கள் குறையை எடுத்துக் கூறிச் சமாதான முறையில் ஸௌஜன்யமாகத் தீர்த்துக் கொள்ளுவதை விட்டு விட்டு, அவர்களுக்கு ஆத்திர மூட்டுவதற்கான முறைகளையும் வழிகளையும்தான் கையாள்கிறார்கள்.



“ஸார்! நான் புதிதாக மிளகாய் வியாபாரம் ஆரம்பித்திருக்கிறேன்!”

“அப்படியா? வியாபாரம் எப்படி நடக்கிறது? ஏதாவது விற்றீர்களா?”

“ஓ! என் சைக்கிளை விற்றேன், வீட்டை விற்றேன். இப்பொழுது என்னுடைய சொத்தையும் விற்று விட்டேன்!”

அதனால் முதலாளிகள் கலவரமடைந்து விடுகிறார்கள். கவலைக்கு ஆளாகி விடுகிறார்கள். அவர்களுடைய அமைதியும் நிம்மதியும் குலைந்து விடுகின்றன. இன்பத்துக்கும் குந்தகம் விளைந்து விடுகிறது.

ஆனால் தொழிலாளிகள் விளைவிக்கும் இந்தக் குழப்பத்துக்கு அப்படி யென்ன பெருமை கிட்டி விடுகிறது? இரண்டொரு வாரங்கள் ‘வாள், வூள்’ என்று கத்தித் தங்கள் அதிருப்தியைக் காட்டிக் கொள்வதினால் என்ன பயன் கிட்டி விடக்கூடும்?

இம்மாதிரிக் கவைக்கு உதவாத செயல்கள் தான் இந்த நாட்களில் அதிகமாகி யிருக்கின்றன. தொழிலாளிகள் எடுத்ததற்கெல்லாம் முதலாளிகளை மிரட்டத் தொடங்கி யிருக்கிறார்கள். இதனால் தொழிலாளிகள் கை கண்ட பலன் என்ன? அவர்கள் அப்படி யென்ன நன்மையை அடைந்து விடுகிறார்கள்?

தொழிலாளிகள் நன்மை யடையாமல் தீமையே அடைந்த பொழுதிலும், முதலாளிகள் விரும்பியோ, விரும்பாமலோ, தெரிந்தோ தெரியாமலோ ஒரு விஷயத்தை மட்டும் உணரத் தொடங்கி யிருக்கிறார்கள். அதாவது தொழிலாளிகள் ஒன்று கூடி ஒற்றுமையைப் பேணத் தொடங்கிவிட்டால் தங்கள் பணத்துக்குத் தோல்வி நிச்சயம் என்பதைத் தீர்மானமாக ஐயமறத் தெரிந்து கொண்டு விட்டார்கள்.

ஜ்வாலாப் பிரஸாதும் இதை உணர்ந்திருக்க வேண்டும், அல்லது இம்மாதிரி முறையில் யோசனை செய்திருக்க வேண்டும். அவருடைய மில்லின் நிலைமை மிகவும் பயங்கரத்தை அடைந்திருந்தது. வேலை நிறுத்தம் தவிர்க்க முடியாத விஷயம் என்றே அவருக்குத் தோன்றியது. எனவே, அவர் மிகவும் கலவரமுற்றுக் கதிகலங்கி விட்டார். கணத்துக்குக் கணம் கையில் கட்டியிருந்த கடிகாரத்தைப் பார்த்தார். அடிக்கடி வாசற்புறம் பார்வையை ஓட்டினார். அறைக்குள் இங்கும் அங்கும் கூண்டில் அடைபட்ட சிங்கம் போல் கோபமும் தாபமும் ஒருங்கே குமுற அலைபாயத் தொடங்கினார். அப்புறமும் மனத்தை வேதனை குடையவே, நாற்காலியில் அமர்ந்து புஸ்தகம் படிக்க முயற்சித்தார்.

ஆனால் அவருடைய மனம் ஒரு நிலை கொள்ளவில்லை. எந்த விஷயத்தையும் கவனிக்க அவர் மனம் மறுத்தது. தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்ய நினைத்தது போலவே அவருடைய மனமும் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கி விட்டது. புஸ்தகத்தில் மனம் செல்ல மறுக்கவே, புஸ்தகத்தைக் கீழே போட்டு விட்டுப் பெருமூச்சு விட்டார். அவருடைய மனம் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கியது போலவே, மில்லிலும் தொழிலாளிகள் வேலை நிறுத்தம் செய்யத் தொடங்கி யிருப்பார்களோ?

ஜ்வாலாப் பிரஸாதுக்கு ஒன்றுமே தோன்றவில்லை. அவருடைய மனம் இல்லாததெல்லாம் யோசிக்கத் தொடங்கியது. யாருடனு

வது பேசி மனத்தை மாற்றலாம், மகிழ்விக்க முயலலாம் என்று எண்ணினார். ஆனால் யாருடன் பேசுவது என்பது தான் விளங்கவில்லை. 'ராதா இருக்கும்பொழுது இன்னொருவர் எதற்கு?' என்ற எண்ணம் எழுந்ததுதான் தாமதம்; ராதாவுக்குச் சொல்லி யனுப்பினார்.

ராதா இப்பொழுதெல்லாம் ஜ்வாலாப் பிரஸாத் கூப்பிட்டனுப்பா விட்டால் அவரிடம் வருவதேயில்லை. அவள் தன் மனத்தை அடக்கிக் கொண்டதோடு மட்டுமின்றி அதைத் தனது தினசரி வழக்கமாகவே ஆக்கிக் கொண்டு விட்டாள்.

சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் ராதாவினிடம் அலட்சிய மனோபாவத்தைக் காட்டி ஜ்வாலாப் பிரஸாத் அவளையும் அலட்சிய மனோபாவமுள்ளவளாகச் செய்து விட்டார். யாராயிருந்தாலும் பரிவும் அன்பும் காட்டினால் தானே நெருங்கி வருவார்கள், பேசிப் பழகுவார்கள்? எதற்கும் தூக்கி யெறிந்து விட்டேற்றியாகப் பேசினால் யார்தான் கிட்ட நெருங்க முன் வருவார்கள்?



டிஸம்பர் 20-உ யன்று சேலம் அம்மாப் பேட்டையில் இருபது, இருபத்தோராவது வார்டு காங்கிரஸ் கமிட்டிகள், தமிழரசுக் கழகங்கள், தேசிய இளைஞர் காங்கிரஸ் சங்கம், ராஜாஜி சங்கம் ஆகியவற்றின் சார்பில் ராஜாஜியின் 75-வது பிறந்த தின விழா மிகச் சிறப்பாகக் கொண்டாடப் பட்டது. அன்று காலையில் சுமார் எழுநூறு ஏழைகளுக்கு அன்னம் அளிக்கப் பட்டது. மாலையில் ஊராளி உடையார் தலைமையில் பலர் பேசினார்கள். வாழ்க, ராஜாஜி!

ஆரம்பத்திலேயே ராதாவுக்குத் தன் கணவரிடத்தில் ஒரு கவர்ச்சி இருப்பதாகத் தோன்றவில்லை. போதாக் குறைக்குத் தன் கணவருடன் உட்கார்ந்து பேசிப் பழகி, கூடிக் குலாவிச் சிரித்து மகிழ்ந்து இன்பம் அநுபவிப்பதற்கான தருணமே அதுவரை அவளுக்குச் சரியாக வாய்த்ததில்லை.

ஜ்வாலாப் பிரஸாதோ தொழில் அதிபர். அவருக்குத் தம் தொழிலைக் கட்டிக் காத்துக் கொண்டிருக்கத்தான் பொழுது இருந்ததே தவிரத் தமது மனைவியுடன் நான்கு வார்த்தைகள் நல்லபடியாகப் பேசிப் பொழுது போக்கப் பொழுது இல்லை. எனவே, நாளாவட்டத்தில் ராதாவும் இலவு காத்த கிளியாக விரக்தி அடைந்து விட்டாள்.

தன் விரக்திக்கு மாற்று மருந்தாகச் சுதாகர் வந்து சேர்ந்தது அவள் மனத்துக்கு எத்தனையோ ஆறுதலாக இருந்தது. அவனுடன் இலக்கிய சர்ச்சை செய்ய உட்கார்ந்து விட்டால் அவளுக்குப் பொழுது போவதே தெரியாது. ஜ்வாலாப் பிரஸாதுக்குத்தான் பொழுதே இல்லையே, இலக்கிய சர்ச்சையில் கலந்து கொண்டு தாமும் ஆனந்தம் அநுபவிக்க வேண்டும் என்று தோன்றுவதற்கு?


சுதாகர் பாடம் சொல்லிக் கொடுக்க வந்த ஆரம்பத்தில் ராதா நான்கைந்துதடவை ஜ்வாலாப் பிரஸாதை அழைத்திருக்கிறாள். "மில், மில் என்று எப்பொழுதும் மில்லைக் கட்டிக் கொண்டு அழாதீர்கள்! சதா அதே சிந்தனையாக இருந்தால் பைத்தியமே கூடப் பிடித்துவிடும். மனத்தை மற்ற விஷயங்களிலும் கொஞ்சம் செலுத்தினால்தான் மில் வேலையில் நன்றாகக் கவனத்தைச் செலுத்த முடியும்!" என்றும் சொல்லி யிருக்கிறாள். அதையெல்லாம் அவர் காதில் வாங்கிக் கொண்டால் தானே? தம்து வேலையைக் கவனிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருந்து விட்டார். அதனால் அவள் நம்பிக்கை இழந்து அவரை அழைக்கும் முயற்சியைக் கைவிடும்படியாகி விட்டது.

கணவன் மனைவிக்கிடையே எந்த விதமான தகராறும் இல்லைதான். ஜ்வாலாப் பிரஸாத் அவளுடன் பேசும் பொழுது பேச்சில் இனிமையையும் குழைவையும் வரவழைத்துக் கொண்டுதான் பேசுவார். இருந்தாலும் ராதாவின் உள்ளத்தில் அவருடைய அந்தப் பேச்சு எந்த விதமான கிளு கிளுப்பையும் இன்ப லாகிரியையும் எழுப்புவதில்லை. ஆயினும் கணவர் அழைத்தால் அதற்கு மறுமொழி சொல்லாமல் உடனே அவர் எதிரே ஆஜராகி விடுவாள். அன்றும் அவர் சொல்லி யனுப்பிய சிறிது நேரத்துக்கெல்லாம் சிரித்த முகத்துடன் அவருடைய அறைக்கு ஒய்யார நடை நடந்தவாறு வந்து சேர்ந்தாள்.

"அட! இன்றைக்குத் தங்களுக்கு என் நினைவுகூட வந்து விட்டதே! இன்றைக்குக் கிழக்கில் உதிக்க வேண்டிய சூரியன் மேற்கில் உதித்து விட்டானா, என்ன?" என்று இடக்காகக் கேட்டுக் கொண்டே ஜன்னல் வழியே வெளியிலும் எட்டிப் பார்த்தாள்.

"இன்றைக்கு என் உடம்பு என்னவோ மாதிரி இருக்கிறது. மனசும் சரியா யில்லை.

## இலவச வாசகசாலை



பம்பாய், மாதுங்கா, பாரதீய வனிதா சமாஜத்தில் ஒரு இலவச வாசகசாலையும் நூல் நிலையமும் டாக்டர் எஸ். ஆர். ராமச்சந்திரன் அவர்களால் சென்ற டிசம்பர் மாதம் 20-ம் தேதி திறந்து வைக்கப்பட்டது. இந்தத் திறப்பு விழாவுக்கு ஸ்ரீ ஜி. பி. நாயர் அவர்கள் தலைமை வகித்தார். மேற்படி நூல் நிலையத்துக்கு இரண்டு பீரோக்கள் நிறைய நூல்களைப் பம்பாய் ஸௌத் இந்தியன் அஸோஸியேஷன் நன்கொடையாக வழங்கி இருக்கிறது.

---

ஆனால் நீ தான் என்னைப் பற்றியே கவனிப்பதும் இல்லை, அக்கறை காட்டுவதும் இல்லை!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத், கலவரம் கலந்த குரலில். கலவரம் அவருடைய குரலில் மட்டும் அல்ல; முகத்திலும் தெளிவாகத் தாண்டவமாடிக் கொண்டிருந்தது.

"நன்றாகச் சொன்னீர்கள்! நான் உங்களைக் கவனிக்க வேண்டுமா? எதற்காக? உங்களிடம் அக்கறை காட்டிக் கவனித்துக் கொள்ளத்தான் எனக்குச் சக்களத்தி போல் மில் ஒன்று வாய்த்திருக்கிறதே! அது போதாதா? இரவு பகல் எந்நேரமும் உங்களுக்கு என் நினைவு எங்கே? மில் நினைவு தானே? அதே நினைவில்தான் நீங்கள் பைத்தியம் பிடித்து அலைகிறீர்களே! அப்படியிருக்கும் பொழுது உங்களை அந்த மில் கவனித்துக் கொள்ள வேண்டுமே ஒழிய நான் எதற்குக் கவனித்துக் கொள்ள வேண்டும்? உங்களுக்கு என் நினைவு இருந்தால் எனக்கு உங்கள் நினைவு இருக்க நியாயம் உண்டு!" என்றாள் ராதா சிரித்துக் கொண்டே. அவள் குரலில் அப்பொழுதும் எகத்தாளமும் கேலியும்தான் கலந்து ஒலித்தன.

"கள்ளனைக் குள்ளன் மேவின கதையாக அல்லவா இருக்கிறது, நீ பேசுவது? என் ஞாபகமே இல்லாமல் இருந்தது மட்டும் இன்றி என்னையே குறைகூறத் தொடங்கி விட்டாயே!" என்றார் ஜ்வாலாப் பிரஸாத்.

"அது போகட்டும். இன்றைக்கு இதைப் பற்றி யெல்லாம் சிந்திக்க உங்களுக்குப் பொழுது கிடைத்ததே, அதுவே என் பாக்கியம். — ஏன்? இன்று நீங்கள் மில்லுக்குப் போகப் போவதில்லையா?" என்று பேச்சை மாற்றும் தோரணையில் ஜ்வாலாப் பிரஸாதைக் கேட்டாள் ராதா.


அவள் கேட்ட அந்தக் கேள்வியிலும் ஒரு குத்தல் தொனிக்கத்தான் தொனித்தது. இருந்தாலும் அவள் பார்வையில் ஒரு கவர்ச்சியும் காந்த சக்தியும் மிளிர்ந்தன. ஜ்வாலாப் பிரஸாதுக்கு அவளுடைய அந்தச் செய்கை மனத்துக்கு மிகவும் பிடித்திருந்தது. வேறொரு கணவனாயிருந்தால், அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொண்டு சாதுரியமாகப் பேசி அவளை அடிமை கொண்டிருப்பான். ஆனால் ஜ்வாலாப் பிரஸாதின் மனத்தில்தான் மில்லின் கவலை புகுந்து வேதனை அளித்துக் கொண்டிருந்ததே! அந்த நினைவு மனத்தை விட்டு அகன்றால் அல்லவா அவர் அதைப் பற்றியெல்லாம் சிந்திப்பதற்கு?


"இன்றைக்கு நான் மில்லுக்குப் போக முடியாது என்பதை நினைக்கும் பொழுது மனத்துக்கு மிகவும் சங்கடத்தைத்தான் உண்டு பண்ணுகிறது. இன்று நமது மில்லைக்கூட மூடிவிட வேண்டும் போலிருக்கிறது. வேலை நிறுத்தம் நடப்பதற்கான அறிகுறிகள் வேறு தோன்றுகின்றன. என்ன செய்வது என்று ஒன்றுமே புரியவில்லை!" என்று தமது சங்கடமான நிலைமையை விளக்கத் தொடங்கி விட்டார் ஜ்வாலாப் பிரஸாத்.

ராதா அதையும் நல்ல விதமாக எடுத்துக் கொண்டு, "இந்த மாதிரி தினம் நீங்கள் என்னுடன் அரை மணியாவது பேச முடியும் என்றால் அந்த எழவெடுத்த மில் என்றென்றைக்குமே பூட்டியிருக்க வேண்டும் என்று தான் நான் வேண்டிக் கொள்வேன்!" என்றாள்.

ஜ்வாலாப் பிரஸாதுக்குக் கோபம் வரவில்லை. அது அவருக்குப் பிடிக்காத பேச்சுத்தான். என்றாலும் மனைவியின் மாண்பும் அன்பும் அதில் தொனிப்பதைக் கண்டார். அவருக்குப் புளகாங்கிதம் ஏற்பட்டது. அப்பேச்சை அப்படியே வளர்த்தி இன்புற வேண்டும் என்ற எண்ணத்தில் உதடுகளில் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு ஏதோ பேச வாய் எடுத்தார். அதற்குள் டெலிபோன் மணி 'கணகண'வென்று ஒலித்தது. அந்த மணிச் சத்தத்தைக் கேட்டதுமே அவர் உதடுகளில் தோன்றிய சிரிப்பு மாயமாய் மறைந்து விட்டது. அவர் டெலிபோனுக்கு அருகில் சென்று ரிஸீவரைக் கையில் எடுத்தார். அதைக் கண்ட ராதா ஓரே பாய்ச்சலில் ஓடிச் சென்று அவர் கையிலிருந்து ரிஸீவரைப் பிடுங்கிக் கொண்டாள். (தொடரும்)


சிறந்தது
ROBINSON'S
PEARL
BARLEY
சகல உபயோகங்களுக்கும்
ராபின்ஸன்ஸ் பெர்ல் பார்லி
கஞ்சி, கூழ், பாயசம், கறி, பார்லித் தண்ணீர் இவைகளுக்கு புதிய ருசிகரமான சத்துள்ள பேர்ல் பார்லி மிகச் சிறந்தது.
இப்போது எங்கும் கிடைக்கும்
அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லிமிடெட்
தபால் பெட்டி 664,
கல்கத்தா-1.
ARPX 3A-TH


நறுமணம் விரும்புகிறவர்களுக்கு...
மைசூர் சந்தன சோப்பினால் ஸ்னானம் செய்வதே ஓர் அலாதியான இன்ப அனுபவம். அதன் மிருதுவான நுரை சருமத் துவாரங்களிலும் ஊடேறி சுத்தம் செய்து, சருமத்தை மழமழப்பாகவும் பளபளப்பாகவும் பட்டுப்போல் செய்கிறது. அதன் இன்பமூட்டும் ரம்மியமான மணம் உங்கள் தேக முழுவதும் பல மணி நேரம் நீடித்துப் பரிமளிக்கும்.
மைசூர்
சந்தன
சோப்
BANGALORE
Mysore Sandal Soap
Delicately Perfumed
கவர்ன்மெண்ட் சோப் பேக்டரி, பெங்களூர்
இந்திய சோப், வாசனைப் பொருள்கள் உற்பத்தியாளர் சங்கத்தின் அங்கத்தினர்



## ஆம், இதுதான் என் திட்டம்!

ஆயிரக் கணக்கான கிராமங்களில் விளக்குகள் எரியும். தரி முதலிய இயந்திரங்கள் சுற்றிச் சுழல, மக்களெல்லாம் வளரும் கிராமக் கைத் தொழிலில் ஈடுபடுவார்கள். அனைவருக்கும் வேலை கிடைக்கும். அதிகப்படியான மின்சார சக்தி உற்பத்திக்காக நம் ஐந்து வருடத் திட்டத்தில் 127 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. பல்வேறு ஹைட்ரோ-எலக்ட்ரிக் திட்டங்கள் நம் தொழிற்சாலைகளுக்கு வேண்டிய மின்சார சக்தியை மலிவாக அளிக்கும். உலகத்தில் தலை சிறந்த நாடுகளுள் நமது நாடும் ஒன்றாக விளங்க உறுதி கொண்டிருப்பதற்கு இவைகளே தக்க சான்றாகும்.

**இவ்வைந்து வருடத் திட்டத்தின் பல்வேறு சாதனங்களில் லக்ஷக்கணக்கான டன் எஃகு உபயோகிக்கப்படும். ஆதலால் நம் நாட்டு மக்களின் வருங்கால வாழ்க்கையை செழிப்புறச் செய்வதில் எஃகானது எண்ணற்ற விதங்களில் ஈடுபடும்.**

**தி டாடா அயரன் & ஸ்டீல் கம்பெனி லிமிடெட்**

TN 3033



# பொன்செய்யும் மருந்து

சங்கர்



"கிருஷ்ணா நகைக் கடை" முதலாளி மெய்யநாதச் செட்டியாருக்குத் திகைப்பினால் மூச்சே நின்றுவிடும் போலிருந்தது. இரவோடு இரவாகக் கடைக்குள் புகுந்து லட்சக்கணக்கான ரூபாய் பெறுமானமுள்ள நகைகளையெல்லாம் யாரோ திருடிக்கொண்டு போய் விட்டான் என்ற செய்தி வந்திருந்தால் கூட அவ்வளவு அதிர்ச்சி அடைந்திருக்க மாட்டார். ஆனால் அப்பாவியான வெள்ளைச்சாமி தன் வீட்டுப் பூஜை யறையில் பணப் பெட்டி இருப்பதை எப்படியோ உளவறிந்து திருட்டுத் தனமாகக் கன்னம் வைத்து உள்ளே இறங்கி விட்டான் என்பதை அறிந்தபொழுது நடப்பதெல்லாம் கனவா நனவா என்றிருந்தது அவருக்கு.

ஆம், சந்தேகமே இல்லை! வெள்ளைச்சாமியேதான்! வீட்டு முற்றத்திலுள்ள தூணோடு தூணாகப் புறங் கைகள் மடக்கிக் கட்டப்பட்டுத் தொங்கிய தலையுடன் நின்று கொண்டிருந்தான் வெள்ளைச்சாமி! அக்கம் பக்கத்தி லுள்ளவர்கள் அவனைச் சுற்றிக் கூட்டமாக நின்று கொண்டிருந்தனர். அதற்கு மத்தியில் செட்டியாரின் மைத்துனன் ரங்கன் கையில் புளிய மலாருடன் நின்று கொண்டிருந்தான். திருடனை லாகவமாக வளைத் துப் பிடித்துத் தூணோடு தூணாகக் கட்டிப் போட்ட வீர பராக்கிரமமும், திருட்டுப் போகவிருந்த சொத்துக்களைக் காப்பாற்றிய பெருமையும் நிலை கொள்ளாமல் ரங்கனின் கட்டுமஸ்தான உடம்பு ஒரு சுற்று பருத்துப் போயிருந்தது.

"அத்தான்! போலீஸுக்கு ஆள் விடட்டுமா! திருட்டுக் கழுதை கொஞ்ச நாள் 'பள்ளிக்கூடம்' போய்விட்டு வரட்டும். அப்போதுதான் இவனுக்கு நல்ல புத்தி வரும்" என்றான் ரங்கன்.

"ஐயோ! வேண்டாம், சாமி! தெரியாத்தனமாகச் செய்து விட்டேன். என்னை மன்னித்து விடுங்கள். உங்களுக்குக் கோடிப் புண்ணியம் உண்டு!" என்று கதறிய வெள்ளைச்சாமியின் குரலைக் கேட்டதும் ரங்கனுக்கு ஆத்திரமும் கோபமும் மிஞ்சவே, "திருட்டுப் பயலே! நீலிக் கண்ணீரா வடிக்கிறாய்!" என்று கூறியபடி கையில் இருந்த புளிய மலாரை ஓங்கினான்.

"போதும், ரங்கா! அடிக்காதே. முதலில் அவன் கட்டை அவிழ்த்து விடு!" என்ற செட்டியாரின் குரல் அவனைத் தடுத்து நிறுத்தியது. கூடியிருந்தவர்களுடைய பார்வை இப்போது நடையில் நின்றுகொண்டிருந்த செட்டியார் பக்கம் திரும்பியது. அவர் மனத்துள் குமைந்து கொண்டிருந்த சஞ்சலத்தை அவர் சிந்தனை தேங்கிய முகம் எடுத்துக் காட்டியது.

ரங்கன் செட்டியாரை ஒருமுறை மிகுந்த ஆச்சரியத்தோடு பார்த்தான்.

"நான் சொல்லுகிறேன்! நீ அவிழ்த்து விடப் போகிறாயா! இல்லை, நானே

அவிழ்த்து விடட்டுமா!" என்று கூறிக்கொண்டே கீழே இறங்கி வந்தார் செட்டியார். ஒருவேளை ரங்கன் குறிப்பிட்ட பள்ளிக்கூடத்தினுல் தாம் விரும்பியபடி வெள்ளைச்சாமிக்குச் சரியான பாடம் கற்பிக்கமுடியாதென எண்ணினுரோ என்னவோ!

ரங்கன் பேசாமல் கட்டை அவிழ்த்தான். வெள்ளைச்சாமியின் தலை இன்னும் கொஞ்சம் தாழ்ந்து தொங்கியது!

"டேய், வெள்ளைச்சாமி! எத்தனை நாளாக இந்தத் தொழில் நடத்துகிருய்! உன்னை எவ்வளவு நல்லவன், யோக்கியன் என்று நினைத்திருந்தேன்!"

அவ்வளவுதான்! இன்னும் இரண்டு வார்த்தைகள் இதே ரீதியில் செட்டியார் பேசி யிருந்தால் வெள்ளைச்சாமி செத்தே போயிருப்பான்! அப்படியே கோவென்று கதறிக்கொண்டு அவருடைய பாதங்களில் சாஷ்டாங்கமாக விழுந்தான். கூடி யிருந்தவர்களிடையே ஒரு பரபரப்பு; சொல்ல முடியாத வியப்பு! 'மன்னிப்பு' என்று ஒன்று மனித இருதயங்களிலே எத்தகைய நெகிழ்ச்சியையும் புரட்சியையும் உண்டு பண்ணி விடுகிறது என்பதைக் கண்கூடாகக் கண்டனர் அனைவரும். கூட்டம் கலைந்தது!

கீழே விழுந்த வெள்ளைச்சாமியைத் தூக்கி நிறுத்திய செட்டியார், "அழுவதில் புண்ணியமில்லை! இனிமேலாவது புத்தியோடு நடந்து கொள்!" என்று சொல்லித் தட்டிக் கொடுத்தார். பிறகு "ஏண்டா, வெள்ளைச்சாமி! பணம் ஏதாவது தட்டுப்பாடா? இல்லை, யாருக்காவது கடன் கிடன் கொடுக்க வேணுமா!" என்று உள்ளன்போடு விசாரித்தார்.

"சாமி, சத்தியமாகச் சொல்கிறேன். நான் உங்கள் வீட்டிலே பணம் காசு திருடுவதற்கு வரவில்லை. என் பெண்சாதி அங்கம்மா பேச்சைக் கேட்டு நான் முன்னே உங்களிடம் கொடுத்த அந்தக் கிருஷ்ணன் சிலையைத் திருடுவதற்குத்தான் வந்தேன்!" என்றுன் வெள்ளைச்சாமி.

செட்டியாருக்கு உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை ஒரு கணம் புல்லரித்தது. கொல்லனுடைய இரும்புப் பட்டறையின் மேலுள்ள பழுக்கக் காய்ந்த கொழுவைச் சம்மட்டியால் பலமாக ஓங்கி



ஜோசியர்:— உங்களுக்குப் பக்கத்திலிருப்பவர் ஏமாற்றம் அடையப் போகிருர்!

வந்தவர்:— ஆமாம்! அவர் 'ஏமாற்றம்' என்ற நாடகத்தில் நடிக்கப் போகிருர்!

அடிக்கும் பொழுது நாலா பக்கங்களிலும் சிதறும் தீப்பொறிகளைப் போல அவருடைய சிந்தனை கைந்து சிதறியது.

"என்ன! அந்தச் செப்பு விக்கிரகத்தைத் திருடவா வீட்டுக்குள்ளே கன்னம் வைத்தாய்! யாரிடம் கதை அளக்கிருய்!" என்றுன் ரங்கன்.

"இல்லை, ரங்கா! வெள்ளைச்சாமி சொல்வதை நான் நம்புகிறேன். ஐந்து வருஷத்துக்கு முன்னுல் இவன்தான் எனக்கு அதை ஐந்து ரூபாய் விலைக்குக் கொடுத்தான்!" என்று சொல்லிக் கொண்டே வந்தவர், "பைத்தியக்காரப் பயலே! அதை நீ என்னிடம் நேரிலேயே கேட்டிருந்தால் கொடுத்திருப்பேனே! அருமையான கிருஷ்ண விக்கிரகத்தை எங்கேயாவது அருமை தெரியாதவர்களிடம் கொடுத்து விடப்போகிருயோ என்றுதான் நான் வாங்கினேன். இப்பொழுது உனக்கே அதன் மகிமை தெரிந்து விட்டது!" என்றுர் வெள்ளைச்சாமியைப் பார்த்து.

வெள்ளைச்சாமியின் எண்சாண் உடம்பும் ஒரு சாணுகக் குறுகிக் குன்றியது!

வீட்டுக்குள்ளே போன செட்டியார் கையில் ஒரு சாண் உயரமுள்ள கிருஷ்ணன் சிலை ஒன்றை எடுத்து வந்து, "இந்தா, வெள்ளைச்சாமி! இது தங்கச் சிலை இல்லை! தங்கம் கலந்திருக்கிறது என்று எண்ணி உருக்கிப் போடாதே! எடுத்துக் கொண்டு போ!" என்று சொல்லியபடி அவனிடம் நீட்டினுர்.

மிகவும் கஷ்டத்துடன் எதிட்டுப் பார்த்த வெள்ளைச்சாமி அதைக் கைநீட்டி வாங்கிக் கொண்டான். அவன் முகத்தில் அத்தனை குழப்பத்துக்கு மத்தியிலும் ஒரு அர்த்தமற்ற திருப்தி.

## 2

வெள்ளைச் சாமியின் வாழ்க்கைச் சக்கரம் ஆற்றின் அடி வயிற்றில் சுற்றிக் கொண்டு வந்தது. ஆம்; ஆற்றிலே அரிப்பு அரிப்பது தான் அவன் தொழில், விளையாட்டு, பொழுதுபோக்கு எல்லாம். ஆற்றிலே ஆழம் பார்க்க நெற்றி மட்ட மூங்கில் கழி ஒன்று, மணலை அலசி அரிக்கப் பரந்த மரவை—மரத்தட்டு ஒன்று, கிடைக்கும் பொட்டுப் பொடிகளைப் போட்டு வைக்கத் துருப்பிடித்த தகரக் குவளை ஒன்று — இவைதான் அவன் தொழிலுக்குத் தேவையான உபகரணங்கள்! வாரத்திலே இரண்டு மூன்று நாட்கள் இந்தத் தொழில். யாருக்கும் கை கட்டிச் சேவகம் பண்ணுத தொழில்! வரும்படி அவன் யோகத்தையும் வேளையையும் பொறுத்தது. சில சமயங்களில் தங்க மூக்குத்திகள், மோதிரம், திருகாணி, ஒன்றிரண்டு வெள்ளிப் பணங்கள் — இப்படியாக அவன் மரவையிலே அகப்படும். இன்னும் சில சமயங்களில் வெறும் காக்காய்ப் . பொன்னுகவும் கண்ணுடி வளையல் துண்டுகளாகவும் போய்விடும். அந்தச் சமயங்களில் எல்லாம் வெள்ளைச்சாமி ஒன்றும் வருத்தப் பட மாட்டான். ஏனெனில் அவன் மனைவி அங்கம்மாளுக்குக் கிராமத்திலே வேலை. நாலு வீடு வாசல் தெளிப்பாள். இரண்டு வீட்டில் பத்துத் தேய்ப்பாள். வயிற்றுக்குப் போதுமான சோறும் மாதம் பதினைந்து ரூபாயும் கிடைத்தது. பின் ஏன் வெள்ளைச்சாமி கவலைப் படப் போகிருன்!

புது வெள்ளம் வந்த புதிதில் தண்ணீர் பிடிக்காமல் வெள்ளைச்சாமிக்குச் சுரம் வந்து விட்டது. அங்கம்மாளும் வேலைக்குப் போகாமல் புருஷனுக்கு வேண்டிய ஒத்தாசைகளைச் செய்து கொண்



டிருந்தாள். அங்கம்மாளின் அன்பு வெள்ளைச் சாமிக்கு இதமாக இருந்தது.

"இதைப் பாருங்க, நான் சம்பாதிக்கிறதே நம் இரண்டு பேருக்கும் போதும். இனிமேல் நீங்கள் அரிப்பு அரிக்கப் போக வேண்டாம்!" என்றாள் அங்கம்மா, அரிப்புக்குப் புறப்பட்ட தன் கணவனைப் பார்த்து.

"ஏனாம்!"

"என்ன பிழைப்பு! ஆபத்தான பிழைப்பு! புது வெள்ளம் வேறு வந்து விட்டது. எனக்கு என்னமோ பயமாக இருக்கிறது. நீங்கள் ஆயுசோடு இருந்தால், அதுவே எனக்குப் பவிசு!" என்று சொல்லித் தாலிச் சரட்டை விரலினால் கோதி விட்டுக் கொண்டாள் அங்கம்மா.

வெள்ளைச்சாமிக்குச் சிரிப்பு வந்தது!

"அதற்குத்தான் ஒருவிரல் பருமனிலே பலமாகத் தாலிச் சரட்டைத் திரித்துப் போட்டிருக்கிறாயே! அதை அறுத்துக் கொண்டு வெள்ளம் என்னை அடித்துக் கொண்டு போய் விடுமோ!" என்றான் வெள்ளைச்சாமி கேலியாக.

"ஆமாம். நீங்கள் உழைத்து ஒரு தங்கச் சங்கிலி உண்டாக்கிப் போட்டீர்களே! ஏன் இப்படிப் பேச மாட்டீர்கள்! கயிறு உங்களுக்கெல்லாம் இளப்பமாகத்தான் இருக்கும்!" என்றாள் அங்கம்மா தொண்டை தழுதழுக்க.

வெள்ளைச்சாமி அப்போது மனைவியின் கழுத்தில் தொங்கிய தாலிச் சரட்டைப் பார்த்தான். புதுப்பிக்கப் பட்ட மஞ்சள் கயிறு பள பளவென்றிருந்தது. அங்கம்மாவின் பொன்னிறக் கழுத்தில் பட்டுப் பட்டுத் தோய்வதனால்தானோ என்னவோ, அந்த மஞ்சள் கயிறு பொன்னிறம் பெற்று மின்னுகிறதென்று எண்ணி மனத்துள் மிகவும் வியந்தான் வெள்ளைச் சாமி.

"பேசாமல் இரு, அங்கம்மா! என்றைக்காவது ஒரு நாள் இந்த வெள்ளைச்சாமியின் மரவையிலே நாலு வடம் தங்கச் சங்கிலி அகப்படாமலா போகப் போகிறது! அப்போ பாரு!" என்றான்.

"ஆமாம், ஓடுகிற தண்ணீரிலேதான் எழுதி வைத்துக் கொள்ள வேணும்" என்று கூறிச் சிரித்தாள் அங்கம்மா. வெள்ளைச்சாமி மரவையை எடுத்துக் கொண்டு புறப்பட்டான்.

அன்று வெள்ளைச் சாமிக்கு ஒரே சோதனையாக இருந்தது. தாமிர வருணிக் கரையில் இரண்டு மைல் வந்து விட்டான். ஒவ்வொரு படித்துறையாக அரித்துப் பார்த்தான். வெறும் கூழாங் கற்களும் ஓட்டுத் துண்டுமாக வந்தன. "இன்று கொடுத்து வைத்தது இவ்வளவுதான்!" என்று சொல்லி விட்டுப் புறப்பட்டான். இருந்த போதிலும் இன்னும் ஒரு தடவை கடைசியாக மூழ்கிப் பார்த்து விடவேண்டும் என்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டது. "கடவுளே!" என்று சொல்லிக் கொண்டு மூழ்கினான். வெளியே மரவையை எடுத்த போது தட்டு கனமாகவே இருந்தது. இரண்டு தடவை பிரவாகத்திலே அலசினான். கன்னங் கரேலென்று பாசி பிடித்த சிலையொன்று தட்டுப் பட்டது. சட்டென்று கையிலே எடுத்துப் பார்த்தான். குழலூதும் கண்ணனின் உருவம் அது! ஒரு சாண் அளவே இருந்தது.

வெள்ளைச் சாமிக்கு உடல் சிலு சிலுத்தது. கடவுள் கண் திறந்து பார்த்து விட்டார். 'ஒரு வேளை இவ்வளவும் தங்கமாக இருந்தால்......!' மேற்கொண்டு நினைக்க வொட்டாமல் அவன் மனத்தில் ஆசைப் பிரவாகம் நிறைந்தது. கரைக்கு



டிசம்பர் மாதம் 20 ந்தேதி பழைய மாம்பலத்தில் ராஜாஜி ஜயந்தி ஊர்வலம், பொதுக் கூட்டம் முதலிய வைபவங்களுடன் சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது.

வந்ததும் மெதுவாகப் படிக்கட்டில் சிலையின் விளிம்பை உரைத்துப் பார்த்தான்; மினு மினுவென்றிருந்தது. "சை! செப்பு விக்கிரகம்! ம்......எங்கே போனாலும் தரித்திரம் நம்மை விடாது போலிருக்கிறது" என்று மனத்துள் முணு முணுத்துக் கொண்டான்.

இருந்த போதிலும், "தங்கம் கலந்திருக்கலாம். கடை வீதியில் கேட்டுப் பார்ப்போம்" என்று எண்ணிக்கொண்டு வீடு வந்து சேர்ந்தான்.

சிலையைப் பார்த்ததும் அங்கம்மாளுக்கு ஒரே சந்தோஷம். இது வரை குழந்தையே இல்லாத அவளுக்குக் குழலூதும் கண்ணனைப் பார்த்ததும் தாய்மை உணர்ச்சி பொங்கிக் கொண்டு வந்தது. புளி, சாம்பல் போட்டு நன்றாகச் சிலையைத் தேய்த்து விளக்கினாள். செப்பு விக்கிரகம் பள பளவென்று பிரகாசித்தது. வீட்டு மாடக் குழியைத் தேய்த்துச் சுத்தம் செய்தாள். தோட்டத்திலுள்ள செவ்வரளிப் பூக்களைப் பறித்துச் சின்ன மாலையொன்றையும் தொடுத்தாள். சாயங்காலம் வெள்ளைச் சாமி வந்து பார்த்த பொழுது மாடக் குழியில் மாலையுடன் காட்சியளித்தது அந்தச் சிலை. அகல் விளக்கு ஒளியில் அக் காட்சியைப் பார்த்ததும் அங்கம்மாளுக்கு ஒரு நிறைவு, மங்கள உணர்ச்சி ஏற்பட்டது.

"என்ன, பிள்ளே! அதற்குள்ளே இந்த வேலை பண்ணி விட்டாய்! நான் நாளைக்கு இதைக் கடைத்தெருவுக்குக் கொண்டு போக வேண்டுமென்றிருக்கிறேனே!" என்றான் வெள்ளைச்சாமி.

அங்கம்மா திடுக்கிட்டாள்.

"என்ன! எந்த க்ஷேத்திரத்திலிருந்து இது நம் வீட்டைத் தேடி வந்திருக்கிறதோ! வலிய வந்த சீதேவியை நாம் உதறித் தள்ளக் கூடாது! இது பித்தளையாக இருந்தாலும் எனக்கு இதுதான் தங்கம்!" என்றாள் அங்கம்மா.

அங்கம்மாளின் வேதாந்தம் வெள்ளைச்சாமிக்குச் சிறிதும் பிடிபடவில்லை. கிடைப்பதை அப்படியே துட்டாக மாற்றுவது தான் அவனுடைய வாழ்க்கை வேதாந்தம்.

"இதோ பார், அங்கம்மா! ஆற்றில் கிடைத்த பொருளை வீட்டிலே வைத்துக் கொள்ளக்கூடாது. தரித்திரம்!" என்றான்.

"அதெல்லாம் முடியாது! நான் தரவே மாட்டேன்!" என்று கண்டிப்பாகச் சொன்னாள் அங்கம்மா. ஆனால் மறுநாள் வெள்ளைச் சாமி அவள் வேலைக்குப் போனவுடன் அதை எடுத்துக் கொண்டு கடைத்தெருவுக்குப் போய் விட்டான்.

• • •

ஒரு நல்ல மெய்யநாதன் செட்டியாருக்கு ரொம்ப வியப்பாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. அவர் அன்றுதான் புதிதாகக் காசுக் கடை வைத்திருந்தார். வைத்த முதல் நாளே மங்கலப் பொருள் ஒன்று தம் கடையைத் தேடி வருவதென்றால் அதில் ஒரு மகிழ்வு இருக்காதா! சிலையை வாங்கிக் கண்களிலே ஒற்றிக் கொண்டு மேஜைப் பெட்டியின்மீது வைத்தார்.

"என்னப்பா வேணும்!"

"என்ன சாமி! உரைத்துப் பார்க்காமலே கேட்கிறீர்களே!" என்றான் வெள்ளைச்சாமி.

செட்டியார் மனத்துள் சிரித்துக் கொண்டார்.

கடவுளையே உரைத்துப் பார்த்து எடை போடத் தூண்டும் மனித மனத்தின் விசித்திரத்தை எண்ணித்தான் சிரித்தாரோ, என்னவோ!

"இதைப் பாரப்பா! நான் செம்புக்காக இதை வாங்கவில்லை. சிலைதான் எனக்கு முக்கியம். பூஜை பண்ணுகிறதற்கு வைத்துக் கொள்ளலாம் என்றுதான் வாங்கப் போகிறேன். நியாயமாக என்ன விலை உண்டோ, அதை வாங்கிக் கொள்!" என்றார் செட்டியார்.

வெள்ளைச் சாமிக்குச் செட்டியாரின் பேச்சு அங்கம்மாளின் செய்கையை நினைப்பூட்டியது. அங்கம்மாளுக்கும் செட்டியாருக்கும் கண்ணனின் உருவம்தான் கண்களில் பட்டன. ஆனால் வெள்ளைச் சாமியின் கண்களுக்கு வெறும் உலோகம் தான் பட்டது. எனவே, பேசாமல் செட்டியார் கொடுத்த ஐந்து ரூபாயைப் பெற்றுக் கொண்டு கிளம்பினான் அவன்.

வருஷம் ஐந்து ஓடி மறைந்தது. வெள்ளைச் சாமிக்கும் செட்டியாருக்கும் ரொம்பப் பழக்கமாகி விட்டது. அரிப்பிலே கிடைக்கும் பொருள்களைச் செட்டியார் கடையைத் தவிர, வேறு எங்கும் கொடுக்க மாட்டான் வெள்ளைச்சாமி. செட்டியாரிடம் அவ்வளவு நம்பிக்கை அவனுக்கு! மேலும் சிற்சில சமயங்களில் ஐந்து பத்து என்று பண உதவியும் செய்வார் செட்டியார். செட்டியாருக்கும் வெள்ளைச் சாமிக்கு மிடையில் ஒரு உறவை ஏற்படுத்திய பெருமை அந்தச் சிலையைச் சார்ந்ததுதான்.

ஆனால் அந்த ஐந்து வருஷ அனுபவத்திலே ஒரு பெரிய மாறுதலைக் கவனித்தான் வெள்ளைச்சாமி. அவன் இன்னும் பழைய அரிப்புக்கார வெள்ளைச் சாமியாகத்தான் இருந்தான். ஆனால் செட்டியாரோ சின்னக் காசுக்கடையிலிருந்து படிப்படியாக முன்னேறிப் 'பெரிய நகைக்கடை' முதலாளியாகிவிட்டார்!

செட்டியாரின் தர்மசிந்தையும் பக்தி சிரத்தையும்தான் அவர் முன்னேற்றத்துக்குக் காரணமென்று ஜனங்கள் பேசிக் கொண்டார்கள். அதோடு இன்னொரு செய்தியும் கோபுர வாசல் காற்றோடு கலந்து வெளி வந்தது. செட்டியார் வீட்டில் பூஜையறையிலுள்ள கிருஷ்ணனின் கடாக்ஷம்தான் அவர் வீட்டில் அதிர்ஷ்டதேவதை குடியேறுவதற்குக் காரணம் என்பதுதான் அது!

வெள்ளைச்சாமியின் உள்ளம் பொறாமையால் கனிந்தது. அவன் மனத்தில் எத்தனையோ தீய எண்ணங்கள் சுழித்துப் புரண்டன. அந்தச் சுழிப்பிலே எண்ணற்ற நினைவு அலைகள் மோதிக் கலந்து அவனைத் திணற அடித்தன. இடையிடையே தன் வீட்டு மாடக்குழியில் அகல் விளக்கு ஒளியில் காட்சியளித்த கண்ணனின் தோற்றம் பளிச்சுப் பளிச்சென்று மின்னிக் கொண்டே இருந்தது. ஏதோ வெறி கொண்டவனைப் போல விரைந்தான் வெள்ளைச்சாமி!

## 3

"அட பாவி! திருடவா செய்தாய்! அந்தப் புண்ணியவான் எவ்வளவு நல்லவராக இருந்தால் உன்னைப் போலீசிலே பிடித்துக் கொடுக்காமல் அனுப்பி இருப்பார்!... இனிமேல் என் கண்ணிலே விழிக்காதே!" என்று வெறி கொண்டவளைப் போலக் கத்தினாள் அங்கம்மா.

வெள்ளைச்சாமிக்குத் தூக்கி வாரிப் போட்டது! நடு ஆற்றில் சுழிப்பில் அகப்பட்டுக் கொண்டவனைப் போல் திக்கு முக்காடினான் அவன்.

"நீ தானே அங்கம்மா, சாமியின் சிலை வேண்டும் என்று முன்னால் கேட்டாய்! அதனால் தான் கேட்டால் செட்டியார் கொடுக்க மாட்டார் என்று......"

"திருடப் போய் அகப்பட்டுக் கொண்டாயாக்கும்! உன் புத்தி இப்படியா போகணும்! எல்லாம் என் தலைவிதி! இதைக் காட்டிலும் நீ வெள்ளத்தோடு போயிருந்தாலும் நான் சிறிதும் கவலைப் பட்டிருக்க மாட்டேன்."

"அங்கம்மா! மரியாதையாகப் பேசு!"

"ஆமாம்! என்ன மரியாதை வேண்டிக் கிடக்கிறது! திருடப் போனால் இதைவிட ரொம்ப மரியாதை கிடைக்கும். அப்படித் தானே!"


"நான் திருடப்போனது வாஸ்தவம்தான். ஆனால் செட்டியார் தான் சந்தோஷமாகச் சிலையை எடுத்துத் தந்தார்" என்று சொன்ன வெள்ளைச்சாமி, "போனதெல்லாம் போகட்டும், அங்கம்மா! இந்தா, இந்தச் சிலையை எடுத்துக் கொண்டு போய் மாடத்தில் வை! நம் வீட்டை அதிர்ஷ்டம் தேடிக் கொண்டு ஓடிவரப் போகிறது, பார்!" என்றான் ஆசைக் கனல் துடிக்கும் கண்களுடன்.

அங்கம்மாவுக்கு வெள்ளைச்சாமியின் நோக்கம் இப்போதுதான் புரிந்தது! "அடி ஆத்தாடி!" என்று மூக்கின் மேல் விரலை வைத்தபடியே வியப்புடன் நின்றாள்!

"என்ன பேசாமல் நிற்கிறாய், அங்கம்மா!" என்று மேலும் வியப்போடு அவளைக் கேட்டவன் அவள் கண்களிலிருந்து பொல பொல வென்று


சாம்பியன் & அசோக் பேனாக்கள்

எல்லோரும் விரும்புவது



சிறந்த வேலைப்பாடு
நல்ல ரகம் உத்திரவாதமுள்ளது

தயாரிப்பவர்கள்: குஜராத் இண்டஸ்ட்ரீஸ்

லோஹார் சவுல், லால்ஜிமான்சிங் பில்டிங், பம்பாய்-2

எல்லா பேனா வியாபாரிகளிடமும், ஸ்டோர்களிலும் கிடைக்கும்

கண்ணீர்த் திவலைகள் துளித்துத் தெரிப்பதைப் பார்த்தவுடன் அப்படியே திடுக்கிட்டு விட்டான்.

"முதலில் இந்தச் சிலையைக் கொண்டு போய் அந்தப் புண்ணியவான் காலிலே விழுந்து கொடுத்து விட்டு வாருங்கள். பக்தியோடு பூஜை பண்ணுவதற்கு இங்கே யார் இருக்கிறார்கள்! பகல் முழுவதும் நாம் இரண்டு பேரும் வேலைக்குப் போய் விடுகிறோம்! அந்த மகாராஜன் வீட்டிலேயே இருந்தால் அதுவே நமக்குப் போதும்! ம்...ஓடுங்கள்!" என்று மரியாதையுடன் விரட்டினாள் அங்கம்மா!

ஒற்றைக் கையிலே சிலையைப் பிடித்திருந்த வெள்ளைச்சாமி சட்டென்று இரண்டு கைகளாலும் தாங்கினான். அவன் கண்களிலும் இப்போது மெல்லிய கலக்கம், தென்பட்டது.

4

செட்டியாருக்கு ஏற்பட்ட ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல. எதிர்பாராத ஒன்று நடைபெற்று விட்டது என்பதற்காக அல்ல, அவர் ஆச்சரியப் பட்டது! அவர் எதிர் பார்த்துக் காத்திருந்ததல்லவா நடந்திருக்கிறது!

"சாமி! என் மனசு இவ்வளவு நாளும் பித்தளையாக இருந்தது. இன்றைக்குத்தான் தங்கமாக மாறிற்று!" என்றான் வெள்ளைச்சாமி.

"எல்லாம் கண்ணன் அருள்!" என்று சொல்லிக் கொண்டே அவன் கொடுத்த விக்கிரகத்தைப் பெற்றுக் கொண்டார் செட்டியார்.

"சாமி! நான் கும்பிட வேணும் என்கிற நோக்கத்தோடு இதைக் கொண்டு போகவில்லை."

"அப்படியானால் எதற்காகக் கொண்டு போனாய்!" — அவன் வாய்மொழியாகவே விவரத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்ற நோக்கத்துடன் கேட்டார் செட்டியார்.

"ஊர் முழுவதும் குழலூதும் கண்ணனின் கருணையினால்தான் உங்களுக்கு இவ்வளவு பணம் சேர்ந்தது என்று பேசிக் கொண்டார்கள். 'நம் வீட்டில் கொண்டு போய் வைத்துக் கொண்டால் நமக்கும் பணம் சேராதா!' என்று எண்ணினேன். உங்களிடம் நேரில் கேட்டால் கொடுக்க மாட்டீர்களோ என்று தோன்றிற்று. உங்களிடம் பணம் சேர்ந்து விட்ட பொறாமை என் கண்களை மறைத்தது. அதனால்தான் திருடி எடுத்துக் கொண்டு போக முயற்சி பண்ணினேன். கடைசியில் உங்கள் தயாள குணமும், அங்கம்மாவின் பேச்சும்தான் என் கண்களைத் திறந்து விட்டன!" என்று உணர்ச்சி பெருகக் கூறினான் வெள்ளைச்சாமி.

இப்போது அவன் குரலில் தொனித்த தெம்பும் நேர்மையும் அவன் உள்ளத்தில் ஏற்பட்டிருந்த புதிய மாறுதலை வெளியிட்டன.

"வெள்ளைச்சாமி, கொஞ்சம் இரு!" என்று சொல்லிவிட்டு உள்ளே போனார் செட்டியார். கையில் ரூபாய் நோட்டுக்களுடன் அவர் திரும்பி வந்து பார்த்த பொழுது வெள்ளைச் சாமி முற்றத்தைத் தாண்டிப் போய்க் கொண்டிருந்தான்.

"இந்தா, வெள்ளைச்சாமி!"

"போதும், எசமான்! உங்கள் அன்பும் தங்கமான குணமுமே போதும்! இனிமேல் வேறு எனக்கு என்ன வேணும்! உடம்பிலே வேண்டிய தெம்பிருக்கிறது; உழைக்கணும் என்கிற ஆசையும் இருக்கிறது. ஆறும், என் மரவையும் இருக்கிற வரையில் நான் யாருடைய கையையும் எதிர் பார்க்க வேண்டியதில்லை!" என்று ஒரு கும்பிடு போட்டு விட்டு விரைந்தான் வெள்ளைச்சாமி!

# படித்துப் பாருங்கள்!

## Our India — 1953

மேல் நாடுகள் விவசாயத் துறையிலும், தொழில் துறையிலும் வெகு வேகமாக முன்னேறி விட்டன. ஆனால் பல்லாண்டுகளாக அந்நிய ஆதிக்கத்தின் கீழிருந்த நாம் அவ்வாறு முன்னேற முடியவில்லை. சுதந்திரமடைந்து விட்ட நாம் பொருளாதாரச் சுபிட்சம் என்ற லட்சியத்தை நோக்கிச் செல்ல இனி வேண்டிய வசதி நமக்கிருக்கிறது என்பதை இந்தப் புஸ்தகம் வெகு தெளிவாக எடுத்துக் காட்டுகிறது. *1953*-ம் ஆண்டில் நாம் உலக நாடுகளின் புறப்படலத்தில் எங்கிருக்கிறோம், நம் இயற்கை வளம், செயற்கை வளம் யாவை, இன்னும் எந்த எந்தத் தொழில் துறையில் முன்னேற வேண்டும் முதலிய பல விஷயங்கள் தெளிவாகவும், சித்திர விளக்கங்களுடனும் கதைபோல் சுவாரஸ்யமாகவும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன.

ஆசிரியர்: மீனு மஸானி, கிடைக்குமிடம்: Oxford University Press, Bharat Buildings. Mount Road. Madras—2; விலை: ரூ. 5—0—0.

## ஆர்ஸி

பெண்களுக்கென்று ஸ்ரீமதி லீலா பிரகாச் பி. ஏ. அவர்களால் நடத்தப்படும் இந்த ஹிந்திப் பத்திரிகையில், கதைகள், கட்டுரைகள், செய்யுள்கள் ஆகியவற்றுடன் தையல் வேலை, பின்னல் வேலை, பாக சாஸ்திரம் ஆகிய பல விஷயங்களின் விரிவான குறிப்புகளும் காணக் கிடைக்கின்றன.


கிடைக்கும் விலாசம்: ஆர்ஸி காரியாலயம், 113/136 ஸ்வரூப் நகர், கான்பூர்; தனிப்பிரதி: அணா 6; வருஷ சந்தா: ரூ. 3. வி. பி. பி. மூலம்: ரூ. 3—8—0.

## Containment or Liberation ?

அமெரிக்கா பல்லாண்டுகளாக ஒரு வெளி நாட்டுக் கொள்கை இல்லாமலேயே காலங்கடத்தி வந்தது. ஆனால் சென்ற மகா யுத்தத்தின் போது அது ஒரு கொள்கையைக் கடைப்பிடிக்கும் நிர்ப்பந்தம் ஏற்பட்டது. யுத்தம் முடிந்ததும் பழைய நிலைமைக்குச் சென்று விடலாம் என்றால், அதற்கு இயலாத நிலை ஏற்பட்டு விட்டது. ஒரு புறம் ருஷ்யாவும் மற்றொருபுறம் அமெரிக்காவுமாகப் பிரிந்து நிற்க வேண்டியதாயிற்று. இந் நிலைமையில் இத்தனை ஆண்டுகளாக அமெரிக்கா கடைப்பிடித்து வந்த அயல் நாட்டுக் கொள்கை சரியா, தவறு; இனி எந்தக் கொள்கையைக் கடைப்பிடித்தல் வேண்டும் என்பது போன்ற விஷயங்கள் இந்நூலில் ஆராயப்பட்டிருக்கின்றன.

ஆசிரியர்: ஜேம்ஸ் பர்ன்ஹாம், கிடைக்குமிடம்: The Popular Book Depot, 319, Lamington Rd. Bombay-7. விலை: ரூ 10.

# ஒரு முறை பிரஷ் கொண்டு தேய்த்தால்
# கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்ட்
# துர்நாற்றத்தை ஒழித்து
## வாயை சுத்தமாக்குகிறது




## இதோ! குளோரோபில்* டூத் பேஸ்டின் பூரண நன்மைகள் அடங்கிய புதிய, விசேஷ கால்கேட் சூத்திரம்!

குளோரோபிலின் நன்மைகளை பத்திரமான, ரஞ்சிதமான உருவில் தருகிறது கால்கேட் சூத்திரம்... கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் துரிதமாக, திருத்தமாகச் செயலாற்றுகிறது... அது தரும் சுத்தம் மணிக்கணக்காக நீடிக்கும்!

புதிய, இனிய சுவாசம்... பலமான ஈறுகள் பெற... சாப்பிட்டவுடன் கால்கேட் குளோரோபில் டூத்பேஸ்டை உபயோகிக்கவும். சிறந்த பற்பசைகளைத் தயாரிக்கும் உலகிலேயே பெரிய ஸ்தாபனத்தின் உன்னத குளோரோபில் டூத் பேஸ்ட்.

**பாக்டீரியாவை ஒழிக்கிறது!**

எனாமலை அரிக்கும் தீய அமிலங்களையும்... அவற்றைத் தோற்றுவிக்கும் பாக்டீரியாவையும் குறைக்கிறது.

**ஈறுகளைப் பலப்படுத்துகிறது!**

குளோரோபிலின் நன்மைகளைப் பயன்படுத்தி, ஈறுகளைப் பலப்படுத்த கால்கேட் குளோரோபில் டூத் பேஸ்ட் உதவுகிறது.





* நீரில் கரையும் குளோரோபிலின்ஸ் சேர்ந்தது

CTPA/G/2

**புதிய பச்சை டூத்பேஸ்ட் பரீட்சித்து உத்தரவாதம் அளிப்பது கால்கேட்**

# ஆஸ்துமா வியாதியஸ்தர்களே



# ரிகால்வின்

குறைந்த நாளில்

**குணம் அளிக்கிறது**

நம்நாட்டு மூலிகையும், மேல்நாட்டு மூலிகையும் சேர்ந்த மிக மலிவான மருந்து

டாக்டர்கள் சிபாரிசு செய்கிறார்கள் ●

எல்லா நல்ல மருந்து கடைகளிலும் கிடைக்கும்

ஸ்டாண்டேர்ட் பார்மஸிடிகல் ஓர்க்ஸ் லிமிடெட், கல்கத்தாவின் தயாரிப்பு

# B.I.S.N.CO.LTD.

சென்னை - நாகப்பட்டினம் - பினாங்கு - சிங்கப்பூர்

## S. S. "ரஜுலா"

சென்னை புறப்படும் தேதி — 1954 ஜனவரி 10உ
நாகப்பட்டினம் புறப்படும் தேதி — 1954 ஜனவரி 11உ

கப்பல் புறப்படும் தேதியன்று காலை 6 மணிக்கு மேல் சாமான்கள் ஏற்றப்பட மாட்டாது.

கப்பலேறுவதற்கான ஏற்பாடுகள் :

**சென்னையிலிருந்து 10-1-54:** பெர்த் வசதியற்ற பிரயாணிகள் காலை 8 மணிக்கும் ஸலூன் பிரயாணிகள் வைத்திய பரிசோதனைக்கும், கப்பலில் ஏறுவதற்கும் பகல் 12 மணி முதல் பகல் 1 மணிக்கு மேற்படாமல் வந்துவிட வேண்டும்.

**நாகப்பட்டினத்திலிருந்து 11-1-54:** பெர்த் வசதியற்ற டிக்கட்டுள்ளோர் காலை 6 மணிக்கும், ஸலூன் டிக்கட் உள்ளவர்கள் 8 மணிக்கும் கப்பலேறலாம்.

சென்னையில் ஏறும் பிரயாணிகள் 10-1-54 பகல் 1 மணிக்கு மேல் வந்தால் வைத்திய பரிசோதனைக்கு தாமதமாகி விடும். ஆகையால் அவர்கள் கப்பலேற முடியாது.

பினாங்கு, சிங்கப்பூர் துறைமுக சுகாதார விதிகளை அனுசரிக்க வேண்டி விருப்ப நாள் எல்லா பிரயாணிகளும் சர்வதேச சுகாதார விதிகளின்படி அமைந்த பாரத்தில் அம்மை குத்தியதற்கான சர்டிபிகேட்டும், காலரா எதிர்ப்பு இஞ்ஜெக்ஷன் செய்ததற்கான சர்டிபிகேட்டும் பெற்று, ஒரு சர்க்கார் அல்லது முனிஸிபல் ஹெல்த் ஆபீஸரின் அத்தாட்சியுடன் செல்லும்படியாகக் கூடிய நிலையில் கொண்டுவர வேண்டும்.

| | |
|---|---|
| பின்னி & கோ., (மதராஸ்) லிமிடெட் | மதுரா கம்பெனி லிமிடெட் |
| 7, அரமனைக்காரத் தெரு, மதராஸ் | முதல் லைன் பீச்ரோடு, நாகப்பட்டினம் |

# யோகாசன சிகிச்சை

வி. என். குமாரசாமி


## 12. சந்தேக விளக்கம்

கேள்வி: அன்பார்ந்த ஐயா, நான் தாய் தந்தையற்ற ஒரு பேதைப் பெண். என் வயது 19. என்னைச் சில நாட்களாக ஆஸ்துமா என்னும் கொடிய நோய் பிடித்திருக்கிறது. அவ்வப்போது டாக்டரிடம் மருந்து சாப்பிடுவதுண்டு, ஏதோ தற்சாந்தி ஆகுமே தவிர முற்றிலும் விலகின பாடில்லை. இந்த நிலைமையில் எனக்கு விவாகம் செய்ய வேண்டு மென்ற பேச்சு வேறு நடக்கிறது. விவாகம் செய்து கொண்டு மற்றவருக்கு ஏன் துன்பம் கொடுக்க வேண்டு மென்று சொன்னால், வீட்டிலுள்ளவர்கள் கோபிக்கிறார்கள். நான் தங்கள் கட்டுரைகளைச் சமீப காலமாகத் தான் படித்து வருகிறேன். எத்தனையோ கடும் நோய்களைத் தீர்க்க வழி சொல்லும் தாங்கள் இந்த ஆஸ்துமாவுக்கும் ஒரு வழியைச் சொல்லாம லிருக்க மாட்டீர்கள். ஆனால் அதைப் படிக்கத் தவறி விட்டிருப்பேன். ஆயினும் எனக்காக வாவது, தாய் தந்தையற்ற பேதை யென்பதற்காகவாவது மீண்டும் ஒரு தடவை எழுத மாட்டீர்களா! இந்த நோயினின்றும் விடுதலை யளிக்கும் ஆசனத்தையும், செய்யும் விதத்தையும் தயவு செய்து எழுதுங்கள். அதனால் எனக்கு வாழ்வளித்தவ ராவீர்கள்.

பதில்:—ஆம், சகோதரி! ஏற்கெனவே ஒரு தடவை வெளி வந்த விஷயம்தான். அதனால் ஆயிரக் கணக்கானவர்கள் ஆசனங்களைச் செய்து குணமடைந் திருக்கிறார்கள். ஆயினும் எத்தனையோ பேர் அவ்விஷயங்களைப் படிக்காமல் விட்டு விட்டிருப்பார்கள். அதில் இந்தப் பனிக் காலத்தில் கணக்கற்ற ஆஸ்துமா நோயாளிகள் கஷ்டப் பட்டுக் கொண்டிருப்பார்கள். எனவே, அவர்களுக்காக மீண்டும் எழுதுகிறேன்.

புஜங்காசனம் மூன்று தடவை, பஸ்சி மோஸ்தானாசனம் மூன்று தடவையில் இருபது நிமிஷம், மத்ஸ்யாசனம் இரண்டு தடவையில் ஐந்து நிமிஷம் சிரசாசனம் மூன்று தடவையில் பதினைந்து நிமிஷம், விபரீத கரணி இரண்டு தடவையில் பதினைந்து நிமிஷம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம் மூன்று தடவை, திரிகோணாசனம் மூன்று தடவை, உட்டியாண நௌலி மும்மூன்று தடவைகள், சாந்தி ஆசனம் பத்து நிமிஷம், மூச்சுப் பயிற்சிகள் அதாவது கபாலபாதி, உஜ்ஜயி, பஸ்திரிகா இவை படிப்படியாகத் தினசரி மூன்று வேளை ஆக இவைகள் செய்ய வேண்டும்.

இதில் சர்வாங்காசனம், மத்ஸ்யாசனம், சிரசாசனம், விபரீத கரணி இந்த ஆசனங்களைத் துவக்கத்தில் ஒவ்வொரு நிமிஷமாகத் துவக்கி, வாரத்துக்கு ஒரு நிமிஷம் வீதம் அதிகமாக்கிக் கொண்டு வர வேண்டும். முதலிலேயே அதிக நேரம் நிற்கக்கூடாது. சுமார் ஒரு மாதம் அல்லது ஒன்றரை மாதத்தில் மேற் சொன்ன நேரத்தைச் செய்யலாம். சர்வாங்காசனப் படத்தை இதில் வெளியிட்டுள்ளோம். இத்தனை ஆசனங்களையும் செய்யும் விதத்தை எழுதச் சாத்தியப் படாது. இவை ஏற்கெனவே விவரமாய் "ஆரோக்கிய ரகசிய"க் கட்டுரைகளில் வெளி வந்தவை. அக் கட்டுரைகள் நூலாகவும் கிடைக்கும். மற்ற விவரங்கள் வேண்டுவோர் நேரில் போதிய தபால் தலையுடன் எழுதலாம். ஏதாவது ஆப்பரேஷன் செய்து கொண்டவர்கள், ரத்த அழுக்கமுள்ளவர்கள் ஆசன நிபுணர்களின் ஆலோசனையின் பேரில் செய்வது நல்லது.



சர்வாங்காசனம்

கேள்வி:— தண்டால், பஸ்கி, பார், கனம் தூக்கல் முதலிய உடற் பயிற்சிகளைச் செய்பவர்கள் ஆசனம் செய்யக் கூடாது என்று சொல்லுகிறார்களே, அது ஏன்? இரண்டும் செய்தாலென்ன! என் வயது இருபத்திரண்டு. நான் மேற்படி தேகப் பயிற்சிகளைச் செய்கிறேன். எனக்கு ஆசனங்களைச்செய்ய வேண்டுமென்று ஆசையாக இருக்கிறது. தயவு செய்து எனக்குள்ள மேற்படி சந்தேகத்துக்கு விடையளிக்கக் கோருகிறேன்.

பதில்:—தண்டால், பஸ்கி, பார், கனம் தூக்கல் முதலிய உடற் பயிற்சிகளைச் செய்பவர்கள் ஆசனம் செய்யக் கூடாது என்று சொல்லுவது சரியல்ல. அப்படிச் சொல்லுபவர்கள் சரியான காரணத்தைச் சொல்லாமல் விட்டு விடுகிறார்கள். மற்றப் பயிற்சிகளால் கஷ்டப்பட்டு உண்டாக்கின சதைக் கட்டுகள் ஆசனங்களைச் செய்வதால் கரைந்து விடும் என்று ஒருவர் சொன்னார்.

இவர் சொல்லும் பதிலும் சரியல்ல. சில பயில்வான்கள் ஆசனங்களையும் செய்து சதைக் கட்டு கலையாமல் நன்றாய்த்தா னிருக்கிறார்கள்.

தண்டால், பஸ்கி, பார், கனம் தூக்கல் முதலியவைகள் உங்களைப் போன்ற

## கல்கி

(வாரப் பதிப்பு)

### சந்தா விவரம்

| | | ஒரு வருடம் | ஆறு மாதம் |
|---|---|---|---|
| இந்தியா<br>இலங்கை | ரூ. | 13–0–0 | 6–8–0 |
| பர்மா<br>மலேயா<br>வெளிநாடு | ரூ. | 16–4–0 | 8–2–0 |

**குறிப்பு :**—வி. பி. பி. மூலம் அனுப்புவது கிடையாது. தயவு செய்து முன் பணம் அனுப்ப வேண்டும். இலங்கை நேயர்கள் மட்டும் வி. பி. பி. மூலம் சந்தாத் தொகையைச் செலுத்தலாம்.

கடிதம் எழுதும்போது சந்தா நேயர்கள் தங்கள் சந்தா நெம்பரைக் குறிப்பிடவும்.

மானேஜர் - கல்கி காரியாலயம் - சென்னை


வாலிபர்களுக்கு மிக ஏற்றவை. வயதானவர்களிலும் சிலர் செய்கிறார்கள் என்றால் அவர்கள் வாலிபத்தில் துவங்கி இருப்பார்கள். எனவே உடலை ஆரோக்கியமாய் நோய்கள் வராமல் பாதுகாக்க எல்லா வயதினர்களுக்கும் அதுவும் இருபாலருக்கும் சாத்தியமாகக் கூடிய ஒரு பயிற்சி தேவை. அதற்கு யோகாசனங்கள் தான் சிறந்தவை.

ஆனால் மற்றப் பயிற்சிகள் செய்யும் வாலிபர்கள் கட்டாயம் யோகாசனங்களையும் செய்ய வேண்டும். ஏனெனில் உள் கோளங்களுக்கு ஆசனங்களால் பயிற்சி ஏற்படுகிறது. இரண்டாவது நோய்களை எதிர்க்கும் சக்தி மற்றப் பயிற்சிகளை விட ஆசனங்களில்தான் அதிகமாகிறது. இவைகளெல்லாவற்றையும் விட மிக முக்கியமான மூன்றாவது காரணமும் ஒன்று உண்டு. அதுதான் மனத்தின் பண்பாடு. வயதோ வாலிப வயது. பயிற்சிகளோ இன்னமும் வாலிப முறுக்கை ஏற்படுத்தும். எதிலும் ஒரு அனாவசிய மனோபாவம், தன்னை மிஞ்சினவர்கள் இல்லை என்ற மாற்சரியம், மனத்தைக் கட்டுப் படுத்த முடியாத ஒரு போக்கு. இவைகள் சில சமயம் எதுவரை கொண்டு செல்லும் என்று சொல்ல முடியாது. இம்மாதிரியான மனோவேகங்களைத் தன் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரச் செய்வது யோக ஆசனங்களே யாகும். சர்வாங்காசனம், சிரசாசனம், சாந்தி ஆசனம், நாடி சுத்தி போன்றவைகளைச் செய்யும் போது உடலில் அமைதியும் நாடி நரம்புகளுக்கு ஒரு சாந்தமும் ஏற்படுகின்றன. மனத்தைக் கட்டுப்படுத்தும் ஒரு அபூர்வ சக்தி இந்த ஆசனங்களில் கிடைக்கிறது.

மற்ற தேகப் பயிற்சிகளைச் செய்பவர்கள், எல்லா ஆசனங்களையும் செய்ய வேண்டியதில்லை. சர்வாங்காசனம் பதினைந்து முதல் இருபது நிமிஷம், மத்ஸ்யாசனம் அதில் கால் பங்கு நேரம். சிரசாசனம் பத்து முதல் பதினைந்து நிமிஷம் செய்தால் போதும். சாந்தியாசனம் ஐந்து முதல் பத்து நிமிஷம், நாடி சுத்தியும் செய்ய வேண்டும்.

ஆசனங்களைச் செய்து விட்டு, உடனே மற்றப் பயிற்சிகளைச் செய்யக் கூடாது. அவ்வாறே, மற்றப் பயிற்சிகளைச் செய்து விட்டு ஆசனங்களைச் செய்யக் கூடாது. காலையில் ஒன்றும், மாலையில் ஒன்றும் செய்யலாம். அல்லது ஒரு நாள் ஆசனம் ஒரு நாள் பயிற்சிகளைச் செய்யலாம்.

இரண்டையும் கலந்து செய்யக் கூடாது என்பதற்குக் காரணம் உண்டு. பயிற்சி அளித்த பாகங்களுக்கு இரத்தம் சிறிது நேரம் வரை அதாவது இருபது, முப்பது நிமிஷங்கள் வரை அதிகம் சென்று கொண்டிருக்கும். அதற்குள் சர்வாங்காசனமோ, சிரசாசனமோ செய்தால் ரத்தம் முன்பு பயிற்சி அளித்த பாகங்களுக்குப் போவது குறைந்து கழுத்துக்கும் சிரசிற்கும் போகத் துவங்கும். எனவே, முன்பு பயிற்சி பெற்ற பாகங்களுக்குப் போதுமான ரத்த போஷணை கிடைக்காமல் வாடும். அப்படி வாடுவதனால் சதைக் கட்டு தளரும். இக் காரணத்தை அறியாமல் மற்றப் பயிற்சிகளால் உண்டாகும் சதைக் கட்டை ஆசனங்கள் செய்வதால் கரைந்து விடும் என்று ஆசனங்களின் மேல் பழியைப் போடுகின்றனர். எனவே எப்பொழுதும் இரண்டு பயிற்சிகளையும் கலந்து செய்யவே கூடாது.

தேவையான அளவு உணவுச் சத்தைப் பயிற்சிகளுக்கு ஏற்றாற் போல் சாப்பிட முடியாதவர்கள் மற்றப் பயிற்சிகளைச் செய்யக் கூடாது. அவரவர்கள் செய்யும் பயிற்சிகளுக்கேற்ற உணவுத் திட்டம் வகுத்துக் கொள்ள வேண்டும்.

ஆசன நேயர்களுக்கு ஒரு விஷயத்தை மீண்டும் தெளிவுபடுத்த விரும்புகிறேன். ஆசனம் ஒரு சஞ்சீவி ஔஷதம். நம் முன்னோர்கள் வாழ்நாளெல்லாம் கஷ்டப்பட்டு, உடற் கூறுகளை எல்லாம் நன்குணர்ந்து, நூறு வயதும் நோய் நொடி இல்லாமல் வாழ்வதற்காகக் கண்டுபிடித்து வைத்திருக்கிறார்கள். இந்த அற்புதமான ஆசனத்தை ஒழுங்காக நாள் தவறாமல் செய்து வந்தால் கிடைத்தற்கரிய நோயற்ற செல்வத்தைப் பெறலாம். இது உண்மை. நான் வாழ்க்கையில் அனுபவித்து வருவது. ஆகவே வீணாக மனதை அலட்டிக் கொள்ளாமல் ஆகாரங்களை ஒழுங்காகச் சேர்த்துக் கொண்டு யோக ஆசனங்களைச் சிரத்தையுடன் பழகி வாருங்கள்.

**கேள்வி :**—சலபாசனம், தனுராசனம், அர்த்த மத்ஸ்யேந்திராசனம் முதலியவைகளைச் செய்தால் ஆண்களுக்கு ஆண்மை அழிவு ஏற்படும் என்று சொல்லுகிறார்களே அது உண்மைதானா!

**பதில் :**—இதுவரை இம்மாதிரி ஏற்பட்டது என்று தெரியவில்லை. ஆகவும் முடியாது. ஆண்மை அதிகரிக்குமேயல்லாது குறைய மார்க்கமில்லை. சிலருக்கு அதுவும் ஆரம்ப சாதகர்களுக்கு அவ்விடம் மேற்படி ஆசனங்களைச் செய்யும்போது நசுங்கி உணர்ச்சி வசப்படலாம். ஆனால் நாளடைவில் மறைந்து விடும். சிலருக்குத் தாது வெளி வந்துவிடுவதும் உண்டு. அதற்குக் காரணம் அவ்விடத்தில் நரம்புகள் பலவீனமாய் இருப்பதனாலேயே. அதுவும் பழகப் பழக மறைந்துவிடும். பின் ஆண்மை அதிகரிக்கும். சலபாசனம் அர்த்த மத்ஸ்யேந்திராசனம் இவைகளில் அவ்வளவு நசுங்காது. தனுராசனத்தில் தான் அப்படிச் சிலருக்கு ஆகும். அதுவும் சில நாட்களில் மறைந்துவிடும். அப்படியும் போகவில்லையானால் அவர்கள், தனுராசனத்தை விட்டுவிட வேண்டியதே. சிரசாசனத்தில் அஸ்வினி முத்திரையைச் செய்தால் ஆண்மை அதிரிக்கும்.


**கேள்வி :**—நான் தங்கள் கட்டுரைகளைப் படித்து இரண்டு வருடமாக ஆசனங்களைச் செய்து நீராத

வயிற்று வலியைப் போக்கிக் கொண்டேன். ஆனால் உங்களிடம் நேரில் நான் செய்யும் ஆசனங்கள் சரிதானா வென்று உங்கள் முன்னிலையில் செய்து காட்டவும், நீங்கள் ஆசனம் செய்வதைப் பார்க்கவும் ஆசையுள்ளவனாய் இருக்கிறேன். வெளியூரில் இருக்கும் நான் எந்த நேரத்தில் வந்தால் சௌகரியமாய் இருக்கும்.

பதில் :—ஆசன வகுப்பு நேரம் காலை ஏழு மணி முதல் ஒன்பது மணி வரையில். நானும் ஆசனம் செய்வேன், என் முன்னிலையில் மற்றவர்களுக்கும் கற்பிக்கப்படும். காலை பத்து மணி முதல் பதினொன்றரை மணிக்குள்ளும், மாலை மூன்று முதல் நாலரை மணிக்குள்ளும் ஆசன சம்பந்தமாய்ப் பேசவும் வரலாம். ஒவ்வொரு வியாழனும் விடுமுறை நாள் ஆகும். என் வீட்டு விலாசம் "வி.என். குமாரசாமி, 216, திருவொற்றியூர் ஹைரோடு, தண்டையார்ப்பேட்டை, சென்னை—21." மற்ற விவரங்கள் வரும் இதழ்களில். (தொடரும்)

# ஸ்ரீ கிருஷ்ணா ஓடு தொழிற்சாலை

"உலகத் தொழில் அனைத்தும் உவந்து செய்வோம் வாரீர்" என்றார் பாரதியார். தமிழ் நாட்டில் தொழில்கள் வளர்ந்து தமிழ்நாடு உயர வேண்டும் என்பதற்காகவே உலகத் தொழில்



தொழிற்சாலையில் ஒரு பகுதி. தலைப்பாகை அணிந்திருப்பவர் ஸ்ரீ ஏ. கே. ரங்கநாத அய்யர்

அனைத்தையும் உவந்து செய்யத் தமிழர்களை அழைத்தார். தொழில்களில் மிக முக்கியமான, குடியிருக்கும் வீட்டுக்கு வேண்டிய செங்கல்லும், ஓடும் தயார் செய்யும் தொழிலில் ஈடுபட்டு உழைக்க முன் வந்தார் ஸ்ரீ ஏ. கே. ரங்கநாத ஐயர். தமிழ்நாட்டில் முடியாது என்று கைவிட்ட மங்களூர் ஓடுகளைத் தயாரிக்க முயன்றார். அதற்கான களிமண் கிடைக்கும் இடங்களுக்காகப் பல வருஷங்கள் தேடினார். கடைசியாக சென்னை நகருக்கு ஆறு மைல் மேற்கே பூந்தமல்லி நெடுஞ் சாலையை ஒட்டினாற் போலிருக்கும் திருமங்கலம் என்ற கிராமத்துக் களிமண் இந்த மாதிரி ஓடுகள் தயார் செய்வதற்கு ஏற்றது என்பதைக் கண்டார். அந்த மண்ணை ஜெர்மனிக்கு அனுப்பி வைத்து அங்குள்ள நிபுணர்களைக் கொண்டு ஆராய்ச்சி செய்து அந்த மண்ணுடன் இன்னும் சில வகை களி மண்ணையும் கலந்து செய்தால் உறுதி வாய்ந்த ஓடுகள் தயாரிக்கலாம் என்பதைத் தெரிந்து கொண்டார். 1933-ம் ஆண்டு முதல் 36-ம் ஆண்டு வரை மூன்று வருஷங்கள் ஓயாது உழைத்து ஆயிரக்கணக்கான ரூபாய்களைச் செலவழித்துச் சீதோஷ்ண நிலைக்காக வேண்டிய நவீன இயந்திர சாதனங்களை அமைத்துத் தமிழ் நாட்டில் மங்களூர் ஓடுகள் தயாரிப்பதில் பெரும் வெற்றி கண்டார்.


ஸ்ரீ ரங்கநாத ஐயர் தயாரித்த ஓடுகளைக் கிண்டி இன்ஜினீயரிங் கல்லூரியைச் சேர்ந்த நிபுணர்கள் பரிசீலனை செய்து "மிகவும் உறுதி வாய்ந்த உயர்ந்த ஓடுகள். வீடுகளுக்கும் இதர கட்டிடங்களுக்கும் உபயோகிக்கலாம்" என்று உத்தரவாதமளித்தனர். ஸ்ரீ ரங்கநாதஐயர் திருமங்கலத்திலேயே "ஸ்ரீ கிருஷ்ணா ஓடு தொழிற்சாலை" என்ற பெயரில் ஒரு தொழிற்சாலையை நிறுவினர்.

இப்பொழுது அதே தொழிற்சாலையில் வீடு கட்டுவதற்கு வேண்டிய செங்கற்களுக்குப் பதிலாக உபயோகப் படுத்தும் குழாய்க் கற்களைத் தயாரிக்கின்றனர். இந்தக் குழாய்க் கற்கள் செங்கற்களைவிட உறுதியாகவும், விலை மலிவாகவும் இருக்கிறதாம். இந்தக் கற்களைக் கொண்டு வீடு கட்டினால் நூற்றுக்கு நாற்பது பங்கு விலை மலிவாகக் கட்ட முடியும் என்பதைப் புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டியிருக்கிறார்கள். அத்துடன் தளவரிசைக்கு வேண்டிய பலவித வர்ணங்கள் நிறைந்த விதம் விதமான ஓடுகளையும் தயாரித்து வருகின்றனர். இது போன்ற தொழிற்சாலை தமிழ் நாட்டிலேயே இது ஒன்றுதான் என்பது தமிழர்கள் பெருமைப்பட வேண்டிய விஷயம். இத் தொழிற் ஸ்தாபனத்தை உலகின் பல பாகங்களிலிருந்தும் வந்து பார்த்த நிபுணர்கள் வியந்து பாராட்டியிருக்கின்றனர்.

இந்த அற்புதமான தொழிற்சாலைக்கு டிஸம்பர் 27உ அன்று இந்திய இன்ஜினியரிங் கழகத்தின் சென்னைக் கிளை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களை, சீப் இன்ஜினியர் ஸ்ரீ என். பத்மநாப ஐயர் அழைத்து வந்து காண்பித்தார்.



களிமண் பாளம் பாளமாக வருவதை தொழிற்சாலை நிர்வாகி ஸ்ரீ ஏ. கே. ஆர். ராஜகோபாலன் காட்டுகிறார்.



# தேச பக்தன் ரங்கராஜன்

வீர பாண்டியன்

ரங்கராஜன் எவ்வளவோ துரிதமாக வந்தும் திருமதிக்குன்னம் ரயிலைப் பிடிக்க முடியவில்லை.

ரயிலடி நடை மேடையில் மினுக்கிக் கொண்டிருந்த விளக்கொளியில் கைக் கடிகாரத்தைப் பார்த்தான். மணி எட்டரை. சென்னைக்குச் செல்லும் அடுத்த வண்டி வர இன்னும் இரண்டு மணி நேரம் போக வேண்டும்.

கையில் பிடித்திருந்த சிறு தோல் பெட்டியைப் பக்கத்தில் கிடந்த பலகையில் வைத்து விட்டு இடுப்பு வேஷ்டியை மடித்துக் கட்டிக் கொண்டு இங்கும் அங்கும் உலாவினான். நாற்புறமும் சுற்றி வளைத்துக் கப்பிக் கிடந்த காரிருளை அடிக்கடி பார்த்துக் கொண்டான். "கய்......ய்" என்று ராகம் பாடும் சுவர்க் கோழியின் கூச்சல் வேறு காதைப் பிளந்தது. ஒரு நிமிஷம் கழிவது ரங்கராஜனுக்கு ஒரு யுகமாக இருந்தது.

தூக்கமும் விழிப்பும் கலந்த நிலையில் அந்தப் பக்கம் வந்த ரயில் சிப்பந்தியிடம் "இங்கே காப்பி ஓட்டல் ஏதாவது இருக்கிறதா!" என்றான்.

"அதோ வெளிச்சம் தெரிகிறது பாருங்கள்...... அங்கே டீ கிடைக்கலாம். ஆனால் டீ சுமாராகத் தான் இருக்கும்" என்று கூறினர்.

ரங்கராஜன் அந்தப் பக்கம் பார்த்தான். சற்றுத் தொலைவில் 'மினுக், மினுக்' கென்று சிறு வெளிச்சம் மின்னிக் கொண்டிருந்தது. டீ நன்றாக இல்லா விட்டாலும் கொஞ்ச நேரம் பேசிப் பொழுது போக்க ஆளாவது கிடைக்குமல்லவா!

ரயிலடிக்குச் சுமார் ஒரு பர்லாங் தூரத்தில் பெரிய குளம் ஒன்று இருந்தது. அந்தக் குளத்தைச் சுற்றிலும் பத்துப் பன்னிரண்டு வீடுகள் இருந்தன. பெரும்பாலும் கூரை வீடுகள். ஒன்றிரண்டு ஓட்டு வீடுகளும் இருந்தன. குளமும் குளத்தைச் சுற்றியிருந்த வீடுகளும் சேர்ந்த அந்த இடந்தான் திருமதிக் குன்னம்.

ரங்கராஜன் ரயிலடிக்கு வரும்போது அந்த ஊரைத் தாண்டித்தான் வந்தான். அப்பொழுதே ஊர் உறக்கத்தில் ஆழ்ந்து விட்டது.

விளக்கு வெளிச்சம் தெரிந்த வீட்டுக்கு முன்னால் வந்து நின்றான் ரங்கராஜன். சிறிய கூரை வீடு தான். வெளிப்புறம் விசாலமான திண்ணை ஒன்று இருந்தது. திண்ணை முகப்பில் ஒரு ஹரிக்கேன் விளக்கு தொங்கிக் கொண்டிருந்தது. அதன் கீழே திண்ணையில் நாலைந்து கண்ணாடிக் குவளைகள் கவிழ்த்து வைக்கப் பட்டிருந்தன. அவற்றின் பக்கத்தில் சிறிய தவலை ஒன்றில் தண்ணீர் இருந்தது. வீட்டின் கதவு சாத்தப் பட்டிருந்தது. மற்றபடி ஆளரவத்தையே காணும்.

டீக் கடையின் தோற்றத்தைக் கண்ட உடனேயே காப்பி சாப்பிடும் எண்ணம் ரங்கராஜனை விட்டுப் பறந்து விட்டது. பேச்சுத் துணைக்கு ஆள் கிடைத்தாலாவது ரயில் வரும் வரை பேசிக் கொண்டிருக்கலாம். அதற்கும் வழியில்லாமல் போகவே திரும்பிவிடத் தீர்மானித்தான்.

"டீ வேண்டுங்களா!"

ரங்கராஜன் வியப்புடன் திரும்பினான். கதவைத் திறந்து கொண்டு ஒரு இளம் பெண் நின்று கொண்டிருந்தாள்.

ரங்கராஜன் ஒரு தடவை அவளை ஏறிட்டுப் பார்த்தான். கிராமிய - நகர நாகரிகத்தின் கூட்டுப் பண்பு கலக்க நின்றிருந்த அவளிடம் அழகு ததும்பா விட்டாலும் கவர்ச்சி நிறைந்த மெருகு இருக்கத்தான் செய்தது.

"ரயில் வர ரொம்ப நேரம் இருக்கிறதே. ஒரு நிமிஷம் இருந்தால் டீ தயாராகிவிடும்" என்றாள் அந்தப் பெண். அவள் குரலில் மரியாதை இருந்தது. அத்துடன் வந்த வியாபாரம் போய் விடுமோ என்ற பயமும் கலந்திருந்தது.

ரங்கராஜன் திரும்பி வந்து அந்த டீக்கடையின் திண்ணையில் உட்கார்ந்தான்.

"தண்ணீர் கொஞ்சம் சுட வைக்க வேண்டும். ஒரு நிமிஷத்தில் டீ தயாராகி விடும். முன்பெல்லாம் கடைசி வண்டி போகும் வரை டீ தயாராக வைத்திருப்பேன். இப்பொழுது அப்பாவுக்கு உடம்பு ரொம்பக் கெட்டுப் போய் விட்டது. அவரைக் கவனிக்கவே நேரம் போதவில்லை..."

மிகவும் பழக்கப்பட்ட யாரிடமோ மனக் குறைகளைச் சொல்லிக் கொள்பவள்போல மெதுவான குரலில் பேசிய வண்ணம் அவள் மடமட வெனத் தன் வேலைகளைக் கவனிக்கத் தொடங்கினாள். வீட்டுக்கு எதிரே குவித்து வைக்கப்பட்டிருந்தது சுள்ளிகள். சிலவற்றை எடுத்துக் கொண்டு உள்ளே போனாள். உள்ளே பாத்திரங்களைக் கையாளும் மெல்லிய ஒலியும், கையிலிருந்த கண்ணாடி வளையல்களின் கலகலப்பு ஓசையும் கேட்டுக் கொண்டிருந்தன. இப்போது வீட்டுக்குள் யாரோ முனகும் ஒலியும் கேட்டது. அது நோய்ப் படுக்கையில் இருக்கும் அவள் தந்தையாக இருக்கும் என்று ரங்கராஜன் யூகித்தான்.

அந்த யுவதி ஏதாவது ஒரு வேலையாகக் கதவுப் பக்கம் வரும்போதெல்லாம் வெளியே தலையை நீட்டி "டீ தயாராகி விடும். கொஞ்ச நேரம் தான்..." என்று உறுதியளித்துக் கொண்டிருந்தாள். தான் உள்ளே யிருக்கும்போது வியாபாரம் நழுவி விடுமோ என்ற அச்சம் போலும்.

திண்ணையில் குறுகுறு வென்று உட்கார்ந்திருந்த அவனை ஒரு அனுதாப உணர்வு எழுந்து நடமாட வைத்தது. ஒரு டீயை விற்பனை செய்ய அந்தப் பெண் எடுத்துக் கொள்ளும் முயற்சி அவனுக்குப் பரிதாபமாகத்தான் இருந்தது.

அந்தச் சமயம் திடீரென வீட்டுக்குள்ளிருந்து ஒரு விபரீதக் கூக்குரல் எழுந்தது. தொண்டை நெறிபடும்பொழுது ஒரு மனிதன் போடும் ஓலம் மாதிரி இருந்தது அது. அதைத் தொடர்ந்து "ஐயய்யோ......அப்பா......அப்பா......" என்று அந்தப் பெண் அலறும் ஒலியும் கேட்டது.

ரங்கராஜனுக்கு என்ன செய்வதென்றே புரிய வில்லை. இந்தத் தொல்லையே நமக்கு வேண்டாம் என்று ரயிலடிக்குப் போய் விடலாமா என்று ஒரு கணம் சிந்தித்தான். மறு விநாடி ஆதரவற்ற அந்தப் பெண்ணை எண்ணியதும் திடீரென அவனுடலில் ஒரு புத்துணர்ச்சி பரவியது. விடுவிடு வென வீட்டுக்குள் ஓடினான்.

அங்கே கயிற்றுக் கட்டிலில் கிடந்த ஒரு வயோதிகரின் கால் கைகள் விறுக், விறுக்கென உதைத்துக் கொண்டிருந்தன. வாய் கோணக் கோண இழுத்தது. விழிகள் பிதுங்கி விடுவனபோல மேலேறி நின்றன. அந்தப் பெண் செய்வதறியாது அந்த நோயாளிமீது விழுந்து கதறிக் கொண்டிருந்தாள். அருகே வந்து நின்ற ரங்கராஜனைக் கண்டதும் அவளது துயரம் இன்னும் ஒருபடி அதிகமாயிற்று.

ரங்கராஜன் அவளை ஒதுங்கச் சொல்லிவிட்டுத் தனக்குத் தெரிந்த சிகிச்சைகளை நோயாளியிடம் பிரயோகிக்கத் தொடங்கினான். நல்ல வேளையாக நோயாளியின் வலிப்பு குறைந்து பிறகு நின்று விட்டது. என்றாலும் பெருமூச்சு பயங்கரமாக வெளிவந்து கொண்டிருந்தது. ரங்கராஜன் நோயாளியை ஒழுங்காகப் படுக்க வைத்து விட்டு எழுந்து நின்றான். அவன் நோயாளிக்காக உருப்படியாகச் செய்த ஒரே வேலை அதுதான்.

அவன் மீண்டும் வெளியே வந்து திண்ணையில் உட்கார்ந்தபோது அந்த யுவதியும் கூடவே வந்து கதவுப் பக்கம் நின்று கொண்டு "எனக்காக ரொம்ப சிரமப்பட்டு விட்டீர்கள்......" என்று அன்பொழுகக் கூறினாள்.

அவள் பாராட்டை ரசிக்கவோ ஏற்றுக் கொள்ளவோ கூடிய மனோ நிலையில் ரங்கராஜன் அப்பொழுது இல்லை. எப்படியாவது அந்த இடம் விட்டுப் போனால் போதும்போல இருந்தது.

"எனக்கு நேரமாகி விட்டது. வருகிறேன்" என்று எழுந்தான்.

"எதற்கு நேரமாகி விட்டது!" என்றாள் யுவதி.

"எதற்கா......!"

"அதோ ரயில்தான் புறப்பட்டு விட்டதே. இனி உங்களால் அதைப் பிடிக்க முடியாதே. போய்ப் பயன்!......"

"அடடா..." என்ற சொல்லுக்குமேல் அவன் வாயிலிருந்து வார்த்தை யொன்றும் எழவில்லை. ஏமாந்துபோன சோர்வுடன் ரயிலடியை நோக்கினான். அவனுக்கு அழகு காட்டுவதுபோல ரயில் ஒரு தடவை ஓலமிட்டு விட்டுப் பல பெருமூச்சுக்களுடன் நகர்ந்து கொண்டிருந்தது.

"என்னால் உங்கள் பிரயாணமே தடைப்பட்டு விட்டது" என்றாள் வருத்தத்துடன்.

"அதனாலென்ன...பரவாயில்லை" என்று உபசாரத்துக்காக அவன் கூறினாலும் அவனுக்கு அவள்மீது ஆத்திரம் எழத்தான் செய்தது.

"கொஞ்சம் இருங்கள்......" என்று கூறி விட்டு யுவதி உள்ளே ஓடினாள். சில நிமிஷங்களுக்குள் திரும்பி வந்தாள். அவள் கையில் ஒரு கோரைப் பாயும், தலையணையும் இருந்தது.

"இதெல்லாம் என்ன!" என்று ரங்கராஜன் முனகினான்.

யுவதி ஒன்றும் பேசாமல் திண்ணையில் ஒரு பக்கத்தைச் சுத்தம் செய்துவிட்டுப் பாயை விரித்துத் தலையணையைப் போட்டாள்.

"நான் ரயிலடிக்கே போய் விடுகிறேன்" என்று ரங்கராஜன் முணுமுணுத்தான்.

"இதையே ரயிலடி என்று நினைத்துக் கொள்ளுங்களேன்" என்று கூறிச் சிரித்தாள் அவள். பின்பு உள்ளே சென்று ஒரு குவளை நிறைய பாலுடன் திரும்பி வந்தாள்.

ஒரு சில மணி நேரப் பழக்கத்தில் இவ்வளவு சரளமாகப் பேசும் அவளது சுபாவம் ரங்கராஜனின் மனத்தில் படியாமல் இல்லை. அவனை யறியாமல் இந்தத் தடவை அவளை ஏறெடுத்துப் பார்த்தான். அந்தப் பார்வையைச் சட்டெனத் திருப்பி விடாமல் கொஞ்ச நேரம் நிலைக்க வைக்கவே அவளுக்கு வெட்கமாகப் போய் விட்டது.

பாலைச் சாப்பிட்டு விட்டுக் குவளையைக் கீழே வைத்ததும் அவள் அதைக் கையில் எடுத்துக் கொண்டு "என் பெயர் சகுந்தலா ஏதாவது தேவையிருந்தால் கூப்பிடுங்கள்" என்று நாணத்துடன் கூறிவிட்டு அவள் தலையை உள்ளே இழுத்துக் கொண்டாள்.

சகுந்தலா என்ற பெயரில் அழகு இருக்கிறதா இல்லையா என்பதைப் பற்றியெல்லாம் சிந்தனை செய்யும் நிலையில் ரங்கராஜனின் மனசு இல்லை. அவனுடைய உள்ளத்தில் புகை மூட்டம் போல எண்ணங்கள் குவிந்து குவிந்து பெரும் குழப்பத்தை விளைவித்துக் கொண்டிருந்தன.

* * *

தேச பக்தன் ரங்கராஜனைப் பற்றி விவரமாகச் சொல்ல ஆரம்பிப்பது பூக்கடைக்கு விளம்பரம் செய்வது போலாகும். ஏனெனில் தமிழகத்தில் ரங்கராஜனின் பெயர் அவ்வளவு பிரசித்தம். பட்டி தொட்டிகள் முதல், பெரிய பெரிய பட்டி

னங்கள் வரை அவன் காலடி படாத இடமும், குரல் ஒலி கேட்காத கூட்டமும் இல்லையென்றே கூறி விடலாம். ரங்கராஜன் பேசுகிறான் என்றால் சர்க்கரைக் கட்டியைச் சுற்றி மொய்க்கும் ஈக்கள் மாதிரி ஜனங்கள் கூடுவார்கள்.

ரங்கராஜன் மீது ஜனங்களுக்கு அலாதியான தொரு பற்றுதல் ஏற்பட்டதற்கு அவனிடம் அமைந்திருக்கும் பேச்சுத் திறமை மட்டும் காரண மல்ல. இன்னொன்றும் இருந்தது. தஞ்சாவூரில் பிரசித்தி பெற்ற பணக்காரரான குருசாமிப் பிள்ளையின் ஏக புத்திரன் ரங்கராஜன். செல்வாக் காக, சுகமாக வீட்டில் உட்கார்ந்து காலத்தை ஓட்ட அவனுக்கு எவ்வளவோ வசதிகள் இருந்தும் கல்லூரிப் படிப்பு முடிந்த உடனேயே திரண்ட செல்வத்தையும், வீடு வாசலையும், பெற்றோரையும் கூட உதறிவிட்டுத் தேச சேவையில் குதித்து விட் டான். பெரிய பெரிய லட்சாதிபதிகளெல்லாம் ரங்கராஜனைத் தங்கள் மருமகனாக்கிக் கொள்ளத் தயாராக இவன் வீட்டு வாசலில் காத்து நின்ற னர். ஆனால் "கோடிக்கணக்கான மக்கள் அரை வயிற்றுக் கஞ்சிக்கும் வழியின்றி ஆலாய்ப் பறக் கும்போது எனக்குக் கல்யாணமா!...முடியாது..." என்று ஒரேயடியாக மறுத்து விட்டான். இப்படி தன்னலமற்ற பொதுநல வாதிக்கு மக்களிடையே பெரு மதிப்பு இருந்ததில் வியப்பென்ன?

அன்று திருமதிக் குன்னத்துக்கு அருகே ஒரு கிராமத்தில் நடந்த காந்தி ஜயந்தி விழாவில் ரங்க ராஜன் பேசினான். விழா நடத்தியவர்கள் இரவு தங்கிக் காலையில் சௌகரியமாகப் போகலாம் என்று எவ்வளவோ வற்புறுத்தியும் ரங்கராஜன் ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டு அன்றிரவே புறப் பட்டுவிட ரயிலுக்கு வந்தான். அப்பொழுதுதான் அந்த எதிர்பாராத சம்பவத்தினால் பிரயாணம் தடைப்பட்டு சகுந்தலாவின் வீட்டுத் திண்ணையில் படுக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டது.

நிம்மதியற்றுப் புரண்டு கொண்டிருந்த ரங்க ராஜனுக்குத் தன்னுடைய நிலை சகிக்க இயலாத தாக இருந்தது. அவனுக்குச் சுயமரியாதை உணர்ச்சி சற்று அதிகம். தன்னால் பிறருக்கு அணுவளவுகூட கஷ்டம் ஏற்படுவதை அவன் மனம் சகிக்காது. கண்முன் யாராவது சிறு துன் பம் அனுபவிப்பதைக் கண்டாலும் அவன் மனம் பாகாய் உருகிவிடும். தன்னுடைய நிலை எதுவா யினும் உற்சாகத்துடன் பிறருக்கு உதவ அவன் எப்பொழுதும் தயாராக இருப்பான்.

ஆனால் அந்த வீட்டில் அப்பொழுது அவ னுடைய நிலை தர்மசங்கடமாக இருந்தது. அந்தப் பெண்ணுக்குத் தன்னால் எந்த வகையில் உதவ முடியும் என்று அவனுக்குப் புரியவில்லை.

அர்த்தமற்ற மனக் குழப்பங்கள் அதிகமாக மனத்தை அழுத்தியதனால் அவனால் தூங்க முடிய வில்லை. முதலில் அந்த இடத்தை விட்டு அகன்றா லொழிய மனக்கடலில் கொப்பளிக்கும் அலை ஓயாது என்பதை உணர்ந்தான்.

எழுந்து உட்கார்ந்தான். தலைமாட்டில் கழற்றி வைக்கப்பட்டிருந்த சட்டையை எடுத்து மாட்டிக் கொண்டு பாயைச் சுருட்டி வைத்தான். மெல்லத் திண்ணையை விட்டுக் கீழே இறங்கினான். வசதிக் குறைவாக இருந்தாலும் ரயிலடியிலேயே இரவுப் பொழுதைக் கழித்துவிட்டுப் பொழுது விடிவதற் குள் வரும் முதல் வண்டியில் ஊருக்குப் புறப்பட்டு விட வேண்டும் என்பது அவன் தீர்மானம்.

வீட்டைவிட்டு வெளியே ஒரு அடி எடுத்து வைத்தபோது உள்ளே யிருந்து அந்தப் பெண் சகுந்தலா, திடீரென "ஐய்யோ முறையோ" என்று கத்தவே, ரங்கராஜன் திடுக்கிட்டான்.

மீண்டும் உள்ளே போய்ப் பார்க்கலாமா, பேசா மல் திரும்பி விடலாமா! என்ற கொஞ்ச நேர மன ஊசலாட்டத்துக்குப் பிறகு திரும்பி, வீட்டுக் குள்ளேயே புகுந்து விட்டான் ரங்கராஜன்.

அங்கே தகப்பனின் மீது விழுந்து புரண்டு கதறிக் கொண்டிருந்தாள் சகுந்தலா.

"என்ன! மறுபடியும் அந்த இழுப்பு வந்து விட்டதா!" என்று கவலையுடன் கேட்டான்.

சகுந்தலா பதில் சொல்லவில்லை. அழுகையை நிறுத்திவிட்டுப் பரிதாபத்துடன் ரங்கராஜனைப் பார்த்தாள். பிறகு முகத்தை மூடிக் கொண்டு பயங்கரமாக அலறினாள்.

புரியாமல் திகைத்து நின்ற ரங்கராஜனுக்குக் கொஞ்ச நேரத்திற்குப் பிறகுதான் விஷயம் புரிந்தது. அவள் தகப்பனார் இறந்து விட்டார்.

**வா**ழ்க்கையில் ஏற்படும் சில பூகம்ப நிகழ்ச்சி களைப் பற்றி நினைத்துக் கொண்டதும் ரங்கராஜ னுக்குச் சிரிப்பு வந்தது. யாருடைய கட்டுப்பாட் டுக்கும் அடங்காமல், யாருடைய உபசாரத்துக் கும் உட்படாமல் தன் சுதந்திரத்தில் சிறு பகுதி கூடப் பாதிக்காத வண்ணம் கம்பீரமாக வாழ்க் கைப் பாதையில் நடைபோட்டுக் கொண்டிருந்த ரங்கராஜன் சகுந்தலாவின் வீட்டில் ஒரு மாதத் துக்கு மேலாக எப்படித் தங்க முடிந்தது! இது அவனுக்கே புரியாத புதிராக இருந்தது.

அன்று கண்ணுக்கு எதிரே சகுந்தலா தன் தந்தையை இழந்து அனாதையாகி விட்டபோது அவளை அந்த நிலையில் நட்டாற்றில் விட்டுவிட்டுச் செல்ல அவன் மனம் இடந்தரவில்லை. அங்கேயே தங்கி காலையில் இறந்துபோன அந்த மனிதன் இறுதி அடக்கத்துக்கான ஏற்பாடுகளைத் தானே முன்னின்று செய்தான். அன்று மாலை அல்லது மறுநாள் காலை அவசியம் புறப்பட்டு விடுவது என்பதுதான் அவன் முடிவு.

அதன்படியே மறுநாள் காலை பிரயாண ஆயத் தங்களைச் செய்து விட்டுச் சகுந்தலாவிடம் சொல் லிக் கொள்வதற்காக அவள் முன் சென்றான்.

சோகம் தோய்ந்திருந்த கண்களை உயர்த்தி ரங்கராஜனை வியப்புடன் கவனித்தாள் சகுந்தலா.

"உனக்கு வேண்டியவர்கள், தெரிந்தவர்கள் யாராவது இருக்கிறார்களா?" என்று கேட்டான்.

"ஏன் இந்தக் கேள்வி!" என்ற பாவனையில் சகுந்தலா அவனைப் பார்த்தாள்.

"நான் ஊருக்குப் போக வேண்டும். உன்னைப் பற்றி ஏதாவது ஏற்பாடு செய்யலாம் என்று கேட்டேன்......" என்று சொல்லிக் கொண்டே அவள் முகத்தைப் பார்த்தான்.

சகுந்தலா தரையில் கண்களை ஓட்டிய வண்ணம் தீவிரமாக எதைப் பற்றியோ சிந்தித்தாள். திடீரென்று தலை நிமிர்ந்து "நீங்கள் எப்பொழுது புறப்படப் போகிறீர்கள்!" என்றாள்.

"இன்று எப்படியாவது போய் விட்டால் நல்லது. நிறைய வேலை இருக்கிறது......"

"சரி......அப்போ புறப்படுங்கள்."

"அப்புறம் உன் நிலை......"

"கடவுள் இருக்கிறார்......"

"தெரிந்தவர்கள்......உறவினர்கள்!......"

"ஒன்றும் கிடையாது. இருந்தாலும் அவர்கள் உதவியை நான் விரும்பவில்லை."

"தன்னந் தனியாகவே எப்படி நாட்களைக் கடத்த முடியும்!"

"இவ்வளவு நாட்களாக ஒரு சுமையையும் சுமந்துகொண்டு வாழவில்லையா!"

"நான் எதற்காகக் கேட்கிறேன் என்றால்......"




சென்னை நகரத்திற்கு டிஸ்ட்ரிபியூட்டர்கள் :
கராஜ் ஏஜன்ஸீஸ், 37, ஜானி ஜான்கான் ரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ். கோயமுத்தூர், பாலக்காடு, நீலகிரிக்கு, சோல் ஏஜண்டு : B. பாலபட்டாபி செட்டியார், கோயமுத்தூர்.

'பிராங்கைடிஸினால் என் சுவாசப்பைகள் நெருப்பைப்போல் தகித்தன'

ஆனால் **பெப்ஸ்**

அடைப்பைப்போக்கி, எரிச்சலையும் உடனே தணித்தது.






பெப்ஸ் தொண்டை மற்றும் மார்புவலி நிவாரண மாத்திரைகளில் சமனமூட்டி குணப்படுத்தும் ரசங்கள் அடங்கியுள்ளன. பெப்ஸை சுவைக்கும் போதே, இந்த ரசங்கள் ஆவியாக மாறி, உங்கள் சுவாசத்துடன் தொண்டை, சுவாசக் குழாய் மூலமாக சுவாசப்பைக்குச் செல்லும். ஆகவே கோளாறின் ஆரம்பஸ்தானத்திற்கே சென்று வேலை செய்கின்றன. அதனால்தான் பெப்ஸ் கைகண்ட ஔஷதமாயும், உலக பிரசித்தி பெற்றும் விளங்குகிறது. பெப்ஸ் இருமலை நிறுத்தி தொண்டை ரணத்தை சமனமாக்கி, கபத்தை உடைத்து, அடைப்பை நீக்குவதுடன் இன்புளுயன்ஸா மற்றும் பிராங்கைடிஸ் சிகிச்சையில் இன்றியமையாததாயுமுள்ளது.

பெப்ஸ் தொண்டை, மார்பு வலி நிவாரண மாத்திரைகள் எல்லா மருந்து வியாபாரிகளிடமும் கிடைக்கும்

**PEPS**

FPY-28-TAM

மதராஸிற்கு ஸோல் ஏஜண்டுகள் : மெஸர்ஸ். தாதா & கம்பெனி, பார்க் டவுன்

"என்னைப் பற்றி நீங்கள் எதற்காகக் கவலைப் படவேண்டும். ஊர் பெயர் தெரியாத எனக்கு இதுவரை நீங்கள் செய்த உதவியே அதிகம்......"

ரங்கராஜன் சிறிது நேரம் நிதானித்து விட்டு, "நான் இப்பொழுது ஊருக்குப் போகப் போவதில்லை......" என்றான்.

சகுந்தலா கண்களை அகல விரித்து அவனைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் மகிழ்ச்சி கலந்து நிற்பது ரங்கராஜனுக்குத் தெளிவாகப்பட்டது.

அன்றே சென்னைக்கு, தன் நெருங்கிய நண்பன் ஒருவனுக்குப் பணத்துக்காகக் கடிதம் எழுதினான். இரண்டாம் நாளில் பணமும் கிடைத்தது. அந்தப் பணத்தைக் கொண்டு வீட்டுக்குத் தேவையான சாமான்களை வாங்கிப் போட்டான். வீட்டில் பழுதுபட்டுக் கிடந்த பகுதிகளைச் சீர்படுத்தினான்.

தெரிந்தோ தெரியாமலோ ரங்கராஜன் தன் சுதந்திரத் தன்மையை மெல்ல நழுவ விட்டுக் கொண்டிருந்தான். அவனறியாமல் குடும்பப் பொறுப்பும், மற்றும் அவன் மனத்தில் குடிபுகத் தொடங்கிற்று. இந்த அரிய மாறுதல்களை அவன் உணர்ந்தான்; என்றாலும் இவை ஏதோ கனவு உலகத்தில் தன் விருப்பத்துக்கு அப்பால் நடைபெறும் ஒரு விசித்திர நிகழ்ச்சியாகத்தான் அவனுக்குப் பட்டது.

இந்த எக்கச்சக்கமான சூழ்நிலையில் அவனை மிகவும் அதிகமாகத் திணற வைத்தது சகுந்தலாவின் புதுமையான நடவடிக்கைகள்தான்.

வாலிப வயதுள்ள ஆண்–பெண் இருவர் நெருங்கிப் பழகும்போது நியாயமாக ஏற்படும் இனக் கவர்ச்சி ரங்கராஜனைக் கதிகலங்க வைத்தது. ஆனால் எந்தச் சந்தர்ப்பத்திலும் அவன் நிதானம் தவறி விடாததோடு சகுந்தலாவின் மனநிலையை அறிவதற்கு முடியாமல் தவித்தான்.

தந்தையை இழந்த துயரைச் சகுந்தலா விரைவில் மறந்து விடவில்லை. என்றாலும் நிலைமையை வெகு சீக்கிரத்தில் சமாளித்துக் கொண்டாள். தன்னந்தனியாக நிற்கும் தன்னுடைய எதிர்காலத்தைப் பற்றிக் கிஞ்சித்தும் கவலை கொள்ளாமல் ரங்கராஜனைத் தன் குடும்பத்தில் ஒருவனைப் போல் பாவித்து அவனிடம் தன் சுக துக்கங்களை 'ஒப் படைத்து விட்டவள்போல நடந்து வந்தாள்.

வீட்டில் ஏதாவது இல்லை என்றால் ரங்கராஜன் தானாகவே அவளிடம் பணம் கொடுத்துத் தேவையானவற்றை வாங்கிக் கொள்ளச் சொல்வான். பணம் வேண்டாம் என்றோ, எவ்வளவு தேவை என்றோ சகுந்தலா வாய்திறந்து கேட்கமாட்டாள். மௌனம் நிறைந்த ஒரு புன்னகையுடன் அவன் தரும் பணத்தைப் பெற்றுக் கொள்வாள்.

ஆனால் ரங்கராஜனை உபசரிக்கும்போது இந்த அடக்கமும் மௌனமும் பஞ்சாகப் பறந்துவிடும்.

"இவ்வளவு நேரமாகி விட்டதே, பசிக்கலையா!" என்பாள் சகுந்தலா.

"இப்பொழுது பசி இல்லை......" என்று ரங்கராஜன் ஏதாவது ஆரம்பித்தால்......"நல்லாயிருக்கு......இப்படி வேளா வேளைக்குச் சாப்பிடாவிட்டால் உடம்பு என்னத்துக்கு ஆகும்......" என்று பிரமாதமாகக் கோபப்பட்டுக் கொள்வாள்.

இரவில் வெகு நேரம் விழித்திருந்தாலோ, காலையில் சீக்கிரம் குளித்துவிட்டு வரா விட்டாலோ, சனிக்கிழமை தோறும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கத் தயங்கினாலோ, சகுந்தலா விடமாட்டாள். பிடிவாதமாக அவனுடன் மல்லுக்கு நின்று அவனைத் தன் வழிக்குக் கொண்டு வந்து விடுவாள்.

ரங்கராஜன் எப்பொழுதுமே கட்டுப்பாட்டுக்கு உட்படாதவன். குளிப்பது, சாப்பிடுவது, தூங்குவது எல்லாம் அவனிடம் எப்பொழுதும் ஒரு நியதிக்கு அடங்கி நின்றது கிடையாது. எப்பொழுது அவனுக்கு நினைவு வருகிறதோ, அப்பொழுது தான் சாப்பாடு, தூக்கம், குளிப்பு எல்லாம். இப்பொழுது சகுந்தலாவின் கட்டுப்பாட்டுக்கு உட்படுவது சிரமமாக இருந்தாலும் அதில் ஒரு இனிமை இருப்பதாக அவனுக்குத் தோன்றியது.

இப்படியாக, குறிக்கோள் எதுவுமின்றி ஒரு மாதத்திற்கு மேலாக அவன் திருமதிக்குன்னத்திலேயே காலத்தை ஓட்டி விட்டான்.

ரங்கராஜனின் நெருங்கிய அரசியல் நண்பர்களுக்கு அரைகுறையாக விஷயம் எட்டியதன் காரணமாகச் சிலர் திருமதிக்குன்னத்துக்கு நேரில் வந்து நிலையைக் கண்டு ஒன்றும் சொல்ல முடியாமல் விழித்தனர். மெல்ல அவனிடம் நயமாகவும் பயமாகவும் சொல்லி, சகுந்தலாவிடமிருந்து அவனை விடுவிக்க முயன்றனர்.

இதெல்லாம் தற்காலிக நிலைதான் என்றும் ஒரு அனாதைக்கு வழி வகுத்துக் கொடுத்துவிட்டு மீண்டும் பழைய நிலையை அடைந்து விடுவதாகவும் ரங்கராஜன் சமாதானம் கூறினாலும் அந்தத் தற்காலிக நிலையில் எல்லையை இறுதியிட்டு அவனால் உரைக்க முடியவில்லை.

நிலைமை நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டுதான் இருந்தது. ரங்கராஜனின் மனத்தைச் சிறுகச்சிறுக சகுந்தலா ஆக்கிரமித்துக் கொண்டாள். பொது ஜன சேவையில் இருந்த ஆர்வம் அவனுக்கு வர வரக் குறைந்து வந்தது என்பதைக் கூறத் தேவையில்லை. அவன் மனம் கற்பனை செய்ய ஈடுபட்டது. விரைவில் குடும்பப் பொறுப்பை ஏற்றுக் கொண்டு பிறகு குடும்ப சகிதம் தேச சேவையில் ஈடுபடுவது என்று இறுதியாகத் தீர்மானித்து விட்டான்.

எல்லாம் சரிதான்! ஆனால் சகுந்தலாவின் மனநிலை என்னவென்றே புரியவில்லையே!

ஒரு நாள் மாலை ரங்கராஜனைப் பார்க்கச் சென்னையிலிருந்து சில நண்பர்கள் வந்திருந்தனர். ஒரு மஞ்சள் பத்திரிகையை ரங்கராஜனிடம் காட்டினர். அதில் அவனையும் சகுந்தலாவையும் இணைத்து ரசாபாசமான செய்திகள் வெளியாகியிருந்தன. இந்தச் செய்தியைக் குறிப்பிட்டு நண்பர்கள் மிகவும் வருந்தினர், ரங்கராஜனின் அந்தரங்க சுத்தியை அவர்கள் சந்தேகிக்கவில்லை. ஆனால் இந்தப் பிரச்னைக்கு கூடிய விரைவில் ஒரு முடிவு கட்டாவிட்டால் அரசியலில் ரங்கராஜனுக்கு இருக்கும் ஒரு உயர்ந்த ஸ்தானம் பறிபோய்விடும் என்று அஞ்சினர்.

இந்த விவரங்களை அமைதியாகக் கேட்டுக் கொண்டிருந்த ரங்கராஜன் நிதானமான குரலில் "இந்தப் பிரச்னைக்கு முடிவு கட்டிவிட்டேன்!" என்று சொன்னான்.

"மிகவும் மகிழ்ச்சி! அந்தப் பெண் சம்பந்தமாக ஏதாவது ஏற்பாடு செய்தாகி விட்டதா!" என்றனர் நண்பர்கள்.

"ஆம்!" என்றான் ரங்கராஜன்.

"யாராவது அவளுடைய உறவினர்கள் அவள் பொறுப்பை ஏற்றுக் கொள்கிறார்களா!" என்று கேட்டனர் நண்பர்கள்.

"இல்லை! நான்தான் பொறுப்பேற்கிறேன்!" என்று ரங்கராஜன் கூறியபோது நண்பர்களுக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போட்டது.

"நான் அவளைத் திருமணம் செய்து கொள்வதாகத் தீர்மானித்து விட்டேன்!" என்றான்.

நண்பர்களிடையே கொஞ்ச நேரம் ஒரே கலகலப்பாக இருந்தது. சிறிய விவாதத்துக்குப்

பின்னர் நண்பர்கள் ரங்கராஜனின் தீர்மானத்தை வரவேற்பதென முடிவு செய்தனர். ஒரு அநாதைக்குக் கைக் கொடுப்பதற்காக அவளை மணப்பதன் மூலம் அவனுக்குப் பெயரும் புகழும் கிட்டும் என்று அவர்கள் நம்பினர். திருமணத்தைப் பொதுமக்கள் முன்னிலையில் சிறப்பாக நடத்திவிடலாம் என்ற தீர்மானத்துடன் நண்பர்கள் விடைபெற்றுக் கொண்டனர்.

அவர்கள் சென்ற பிறகு சகுந்தலா அவனுக்குக் காப்பி கொண்டு வந்து கொடுத்தாள். தனது பேச்சினால் அவளிடம் ஏதாவது மாறுதல் ஏற்பட்டிருக்கிறதா என்று அவள் முகத்தைப் பார்த்தவன் ஆச்சரியமடைந்தான். அங்கே ஒருவித மாறுதலும் இருக்கவில்லை. அவள் தன் பேச்சை நிச்சயம் கேட்டிருக்க முடியும் என்பதில் ரங்கராஜனுக்குச் சந்தேகமே இல்லை. அப்படியிருக்க இவளால் எப்படிச் சலனமற்று இருக்க முடியுமென்று அவனுக்குப் புரியவே இல்லை.

சந்தேகத்துக்கு இடமில்லாதிருக்க "இப்போது நான் பேசியதைக் கேட்டாயா!" என்று நேரடியாக ஒரு கேள்வியைப் போட்டான் ரங்கராஜன்.

அவள் கேட்டாள் என்பதற்கு அடையாளமாகத் தலையை மட்டும் அசைத்து விட்டுக் காலியான தம்ளருடன் அவள் உள்ளே போய்விட்டாள்.

ரங்கராஜன் அவள் செய்கையைக் கண்டு அசந்து போய் உட்கார்ந்து விட்டான்.

அன்றிரவு நிச்சயம் இதைப்பற்றி ஏதாவது பேசுவாள் என்று எதிர்பார்த்தான். வழக்கமான கேலியும், சிரிப்புமாக அவனை உபசாரம் செய்தவள் இப்படி ஒரு சம்பவம் நடந்ததைத் தெரிந்து கொண்டவளாகவே சிறிதும் காட்டிக் கொள்ளவில்லை. எதையோ எதிர்பார்த்த ரங்கராஜனுக்கு ஒரே திணறலாகப் போய்விட்டது.

மின்னல் வேகத்தில் ஏற்பட்ட ஒரு நிகழ்ச்சி எப்படி ரங்கராஜனைச் சகுந்தலாவுடன் இணைத்ததோ அதே மாதிரி வேறொரு மின்வெட்டு நிகழ்ச்சி அவனுக்காகக் காத்திருந்ததை, பாவம் ரங்கராஜன் உணரவில்லை.


அவசரமும், அவசியமான வேலை காரணமாக ரங்கராஜன் சென்னை போய்வர வேண்டி நேரிட்டது. எல்லா சௌகரியங்களையும் குறைவின்றிச் செய்து வைத்துவிட்டு ஒரு வாரத்தில் திரும்பி விடுவதாகக் கூறிச் சகுந்தலாவிடம் விடைபெற்றுக் கொண்டு ரங்கராஜன் புறப்பட்டான். சொன்னபடியே ஒரு வாரத்துக்குள் திரும்பி ஒரு நாள் மாலை ஏழு மணிக்குத் திருமதிக்குன்னம் வந்திறங்கினான். இந்தத் தடவை தீவிரமானதொரு தீர்மானத்துடன் அவன் வந்திருந்தான். சகுந்தலாவிடம், தன்னை மணக்க விருப்பமா என்று நேரடியாகக் கேட்டு விடுவது என்பதே அந்தத் தீர்மானம்.

சகுந்தலாவின் வீட்டு வாசற்படி ஏறி மூடியிருந்த கதவைத் தட்டக் கையெடுத்த ரங்கராஜன் ஒரு விநாடி திகைத்து நின்றான். உள்ளேயிருந்து யாரோ பலமாகச் சிரித்த ஒலியே அவனைத் திகைக்கவைத்தது. அந்தக் குரல் சகுந்தலாவினுடையதல்ல என்பது நிச்சயம். மேலும் அது ஆண் குரல் போலவும் இருந்தது.

கதவுக்கு முன்னால் சத்தம் செய்யாமல் ஒலி கேட்டது. பேச்சு தெளிவாகப் புரியாவிட்டாலும் சகுந்தலா யாரோ ஒரு ஆடவனுடன் பேசிக் கொண்டிருக்கிறாள் என்பதை மட்டும் ரங்கராஜன் ஒருவாறு யூகித்துக் கொண்டான்.

ரகசியம் பேசுவதுபோல அவர்கள் பேசிக் கொள்ளவில்லை. நன்றாகச் சத்தம் போட்டே கலகலவென்று பேசிக் கொண்டிருந்தனர்.

## ஆர்மோனிய ரஸிகர்!



ஒரு விநாடி அவனுடைய மனம் தடுமாறினாலும் அதை இழுத்துப் பிடித்துக் கொண்டு தனக்குத் தானே சமாதானம் கூறிக்கொண்டான்.

"யாராவது நெருங்கிய உறவினராக இருக்கலாம். சகுந்தலாவைப் பார்க்க வந்திருக்கலாம். அவசரப்பட்டுத் தவறான முடிவுக்கு ஏன் வர வேண்டும்......" என்று மனச்சாட்சிக்குச் சப்பைக் கட்டு கட்டினாலும் அது கொஞ்சம் முரண்டு செய்யத்தான் செய்தது.

கதவைத் தட்டித் திறக்கச் செய்து நேரடியாக விஷயத்தை உணர்ந்து கொள்ளும் சுலபமான வழி கண்ணெதிரே தோன்றினாலும் மனச்சாட்சி கொஞ்சம் குறுக்கு வழியில் பாய எண்ணியது.

வாசற்படியை விட்டுக் கீழே இறங்கினான். வீட்டைச் சுற்றிக் கொண்டு கொல்லைப் புறம் வந்தான். கொல்லைப் புறத்துச் சுவற்றில் சிறிய ஜன்னல் ஒன்று இருந்தது.

ஜன்னல் பக்கம் வந்து நின்று உள்ளே பார்த்த ரங்கராஜன் நெருப்பை மிதித்தவன் போலத் துள்ளிக் குதித்தான்.

ஒரு முரட்டு மனிதன் கீழே உட்கார்ந்திருந்தான். அவளது கரங்கள் அந்த மனிதனின் கைகளோடு நேயத்துடன் இணைந்திருந்தன.

கொஞ்சம் நிதானிக்காமல் இருந்திருந்தால் ரங்கராஜன் ஓவென்று கத்தியிருப்பான்.

உடனே சிங்கத்தையோ, புலியையோ கண்டு மிரண்டு ஓடுபவன் போல விழுந்தடித்துக் கொண்டு மீண்டும் ரயிலடியை நோக்கி நடந்தான். ஸ்டேஷனுக்குப் போய் அங்கே கிடந்த பலகையில் உட்கார்ந்த பிறகு நீண்ட ஒரு பெருமூச்சு விட்டுக் கொண்டான். அவன் இதயம் அப்பொழுது சிதறிக் கொண்டிருந்தது.

சிந்தித்தான். இனி என்ன செய்வது! இவ்வளவு நாள் அவன் கட்டிய மனக் கோட்டைகள், தீர்மானங்களின் கதி என்ன! ஊரில் நண்பர்களுக்கு என்ன பதில் சொல்வது! யோசித்து யோசித்து ரங்கராஜனுக்கு மண்டை வலி கண்டு விட்டது. கைகளால் தலையை அழுத்திப் பிடித்துக் கொண்டு செயலற்று உட்கார்ந்து விட்டான்.

"என்ன இங்கே உட்கார்ந்திருக்கிறீர்கள்!..."

ரங்கராஜன் திடுக்கிட்டுத் தலை நிமிர்ந்தான். எதிரே சகுந்தலா நின்று கொண்டிருந்தாள். அவள் முகத்தில் பொங்கி வழியும் பெரு மகிழ்வைக் கண்டு ரங்கராஜனின் இதயம் கொதித்தது.

"உங்களைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். காலடிச் சத்தம் கேட்டு வெளியே வந்து பார்த்தேன். ஏன் திரும்பி விட்டீர்கள்! நேரமாகிறது, சாப்பிடலாம் வாருங்கள்......"

வழக்கமான பரிவும் அன்பும் அந்தக் குரலில் இருந்தது. "என்ன நடிப்பு!" என்று மனதிற்குள் குமுறினான் ரங்கராஜன். இருந்தாலும் இந்த நாடகம் எங்கே போய் நிற்கிறதென்று பார்ப்போமே, என்ற எண்ணத்தோடு எழுந்து அவளைப் பின் தொடர்ந்து நடந்தான்.

வீட்டுக்குள் காலடி எடுத்த உடன் முதலில் அந்த முரடன் எதிர்ப்பட்டான். ஒரே அடியாக அடித்து அவன் மண்டையைச் சிதற வைத்துவிடலாமா என்று ரங்கராஜன் மனம் ஆத்திரம் அடைந்திருந்தது.

ஆனால் அந்த மனிதன் திடீரெனக் கீழேவிழுந்து ரங்கராஜனைப் பணிவுடன் வணங்கி எழுந்து பய பக்தியுடன் நின்று கொண்டு "கடவுள் மாதிரி நீங்கள் என் மனைவியைக் காப்பாற்றியதாக அவள் சொன்னாள். என்னவோ நீசனான என் மீதும் கடவுளின் கிருபை இருக்கிறது என்பதைத்தான் இது காட்டுகிறது......" என்று மெய் மறந்து கூறினான் அந்த மனிதன்.

ரங்கராஜனுக்கு எப்படி இருக்கும்! அந்த முரடனின் செய்கை அவனைத் தூக்கிவாரிப் போடும்படி செய்தது. அவன் வியப்புடன் முரடனையும் சகுந்தலாவையும் மாறி மாறிப் பார்த்தான்.

"ஒரு நிரபராதியான அவரை, ஊரில் நடந்த ஒரு திருட்டுக் குற்றத்தில் சம்பந்தப்படுத்தி ஆறு மாதம் தண்டித்து விட்டிருந்தார்கள். இவர் போன பிறகுதான் அப்பாவும் நானும் ரொம்ப கஷ்ட ஜீவனம் நடத்தினோம். அப்பாவும் போய் விட்ட பின்பு நீங்கள் வந்திராமல் இருந்திருந்தால் நான் எங்காவது தூக்குப் போட்டுக் கொண்டுதான் உயிரை விட்டிருப்பேன்" என்றாள்.

நெஞ்சுருக இந்த வரலாற்றைச் சகுந்தலா கூறிய போது ரங்கராஜன் ஒரு விநாடியில் மனிதத் தன்மை பெற்றுவிட்டான். சகுந்தலாவை நோக்கி, "இவர்தான் உன் கணவரா! ரொம்பவும் மகிழ்ச்சிகரமான செய்தி......! என் கவலை இன்று தான் தீர்ந்தது" என்றான் ரங்கராஜன்.

பிறகு "நான் ஒரு முக்கிய வேலை காரணமாக உடனடியாக அடுத்த வண்டியில் சென்னைக்கு மீண்டும் புறப்பட்டாக வேண்டும். உனக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்து விட்டு உடனே திரும்பலாம் என்றுதான் வந்தேன். உன் கணவர் வந்துவிட்டதால் நான் புறப்பட்டுவிடுவது நல்ல......" என்று ரங்கராஜன் கூறி முடிப்பதற்குள் சகுந்தலாவின் கணவன் அவன் கால்களைப் பிடித்துக் கொண்டு "உங்களைப் போகவே விட மாட்டேன். இன்னும் ஒரு மாத காலமாவது எங்கள் விருந்தினராக இருந்துவிட்டுப் போக வேண்டும்" என்று கெஞ்சினான். கள்ளங்கபடமற்ற அந்த மனிதன் வேண்டுகோள் ரங்கராஜனின் இதயத்தை உருக வைத்தது. ஆனால் மனத்தில் நிகழும் சித்திரவதையின் கொடுமையை அவனால் தாங்க முடியவில்லை.

"இன்னும் ஒரு வாரத்திற்குள் மீண்டும் வருகிறேன். அப்புறம் உங்கள் விருப்பம்போல இருக்கத்தயார். வண்டி வரும் நேரமாகி விட்டது" என்று பதறியடித்துக் கொண்டு ரங்கராஜன் ரயிலடியை நோக்கி ஓடினான்.

சகுந்தலாவும் அவள் கணவரும் பிரமித்துப் போய் அவன் போன திசையை நோக்கினர். அவர்கள் இருவர் வாயும் ஒரே சமயத்தில் "இவர் உண்மையிலே தேச பக்தர்தான்" என்று கூறியது.

## அகில உலகச் சிறுகதைப் போட்டி

அகில உலகச் சிறுகதைப் போட்டிக்காக வந்துள்ள கதைகளை நீதிபதிகள் பரிசீலனை செய்து வருகிறார்கள். முடிவு கூடிய சீக்கிரத்தில் அறிவிக்கப்படும்.



இந்தியாவின் தலைசிறந்த
சைக்கிள் டயர்கள்
சூப்பர் இந்தியா
IT-6692



இறைவனை வழிபடுவதற்கு எவ்வளவோ வழிகளுண்டு. ஆறு மலை, வனம் வானம், சூரிய சந்திர நட்சத்திராதிகள், மழை காற்று, கடல் அக்னி, ஆகிய இயற்கையின் பல அம்சங்களையும் ,வணங்கி வழிபட்டு மனம் மகிழ்ந்து வந்தான் ஆதிமனிதன்.

அடுத்துத் தோன்றியதொரு காலத்தில் ஜன சமுதாயத்தைப் பயமுறுத்தி இம்சிக்கும் சக்திகளை எல்லாம் தெய்வங்களாக மதித்துக் கும்பிட ஆரம்பித்தான். வீரன் காளி, மாரியம்மன், பேய், பிசாசு, பூத கணங்கள் ஆகியவை அவனுடைய பக்திக்கும் பூஜைக்கும் வணக்கத்துக்கும் உரிய தெய்வங்களாயின.

காலப் போக்கிலே மனிதனின் அறிவு வளர்ந்தது. ஆராயும் திறன் வளர்ந்தது. அனுபவம் அவனுக்கு ஒரு நல்லவழி காட்டியாக அமைந்தது. அஞ்ஞான இருளை அகற்றி ஞானோதயம் பெற்ற பல பெரியார்கள் தோன்றினார்கள். மெய்ப் பொருளை உணர்ந்து அந்த அனுபவத்தை உலகம் உய்ய உபதேசிக்கக் கிளம்பினார்கள். மெய்ப் பொருளை அவர்கள் கண்ட தோற்றங்கள் வெவ்வேறு. ஆகையால் அந்தப் பரம்பொருளை அடைய அவர்கள் உபதேசித்த மார்க்கங்களும் வெவ்வேறு.

ஆயினும் அகண்ட பிரம்மாண்டமானதொரு தடாகத்தின் வெவ்வேறு படித்துறைகளும் ஒரே இடத்துக்குச் செல்லுவதைப் போல, எல்லா மார்க்கங்களின் இறுதி இலட்சியங்களும் ஒன்றுதான். கீதையிலே கண்ணன் சொல்லியபடி உலகில் தர்மம் அழிந்து, அதர்மம் தலை தூக்கி நிற்கும் சமயங்களிலெல்லாம் ஆண்டவன் மனித உருவிலே அவதரித்துத் தர்மத்தை நிலைநாட்டுகிறார். இந்த மாதிரியான நம்பிக்கையையும் அவதார புருஷர்களின் அமானுஷ்யமான சாகசச் செயல்களையும் கண்டு பிரமித்த ஜன சமுதாயம், கடவுளை மனித உருவில் சிலைகளாகவும் சித்திரங்களாகவும் சமைத்து வழிபடத் தொடங்கியது. எங்கும் நிறைந்த இறைவனை ஒரு சாண் கல்லுக்குள் அடக்கிக் கும்பிடுவதா? என்றெண்ணிய ஒரு சாரார் சுத்த சூன்யத்துக்குச் சிரம் வணங்கினர்.



# கடவுளும்

— கே. வி. எஸ். பிரான்.

ஆத்மா வேறு ஆண்டவன் வேறல்ல என்று வாதித்த சில மகான்கள், கண்களை இறுக மூடிக் கொண்டு, சுற்றுடல்களை யெல்லாம் மறந்து யோக தியானத்திலே மோன நிலையெய்தி இதயத்தினுள் இறைவனைக் கண்டு வணங்கினர்.

இறைவனை எந்த நிலையில் வணங்கினாலும் அவரது புகழையும் பெருமையையும் பாடிப் பரவசமடைவது எல்லா சமயங்களுக்கும் ஒரு பொதுவான அடிப்படை. இந்த வழக்கமே ஒவ்வொரு சமயத்திலும் அமர இலக்கியங்கள் தோன்றக் காரணமாயிருந்து வந்துள்ளது.

தன்னை மனையாளாகவும் இறைவனைக் கணவனாகவும் மதித்து நாயக-நாயகி பாவத்தில் மனம் உருகப் பாடி வைத்த பெரியார்கள் பலர். கடவுளைக் குழந்தையின் ரூபத்தில் கண்டு கர்ணாமிர்தமான கானவர்ஷம் செய்த மகா மேதைகள் மற்றும் பலர். பிட்டுக்கு மண் சுமந்த படலமும் கண்ணன் என் சேவகன் என்ற பாரதியார் பாடலும் இறைவனை ஆட்கொள்ள வந்த அடியாரின் தோற்றத்தில் காண்பவை. வாழ்க்கையில் நெருங்கிச் சம்பந்தப் பட்ட ஒவ்வொரு நிலையிலும் இறை வணக்கம் செய்யும் வழக்கம் மிக மிகப் பழமையானது.



கடவுளைக் குழந்தையாக மதித்துப் பாடிய வைஷ்ணவப் பெரியார்களான ஆழ்வார்கள், தாயாகவும் தகப்பனாராகவும் இருந்து, அந்தக் குழந்தையைத் துயிலெழுப்பி, நீராட்டி, அன்னம் ஊட்டி அதனுடன் ஓடியாடி விளையாடி நாள் முடிவில் துயிலுறச் செய்யும் ஒவ்வொரு பணியையும் பிரம்மானந்தமான பல பாசுரங்களாக இயற்றி யுள்ளனர்.

அதோ வண்ணச் சிறு தொட்டிலிலே கண்ணுறங்குகிறான் கண்ணன். அவனுடைய நிர்மலமான முகாரவிந்தத்தைப் பார்த்து மெய்மறந்து நிற்கிறார்



தொண்டர் அடிப்பொடி யாழ்வார். இரவு முழுவதும் தொட்டிலைப் பிடித்துக் கொண்டு அதே நிலையில் நின்ற ஆழ்வாருக்குப் பொழுது போனதே தெரியவில்லை. இரவு கழிந்து கீழ்த் திசையில் தோன்றிய சூரியனின் கிரணங்கள் பளிச்சென்று முகத்தில் அடிக்கவும் அவருடைய மோனநிலை கலைந்து சுயநினைவு திரும்புகிறது.

பொழுது புலர்ந்தும் கண்ணன் இன்னும் கண்ணுறங்குகிறானே என்று நினைத்த ஆழ்வாரின் மனக் கண்களின் முன்னால் ஓராயிரம் அழகுகள் திரண்டு வந்து நிற்கின்றன. கண்ணன் விழித்ததும் அவன் காண்பதற்காகத் தேன் கசியும் மலர்கள் மாலை மாலையாகக் குவிந்து கிடப்பதைப் போலிருக்கிறது. வானத்து ராஜர்களான தேவாதி தேவர்களெல்லாம் கண்ணன் திருமுகம் காணத் தொட்டிலின் மேல் திரண்டு நின்று இன்னிசைக் கீதம் இசைப்பதாகத் தோன்றுகிறது. கடல் அலையின் பேரிரைச்சலை விடப் பலமாகத் தேவர்கள் முரசொலி செய்தும் கண்ணன் கண் விழிக்காது ஆழ்ந்து உறங்குவது ஆழ்வாருக்கு மிகவும் ஆச்சரியமா யிருக்கிறது.

அவர் இந்த அற்புதக் காட்சிகளை மனக்கண் முன்னால் பார்க்கிறார். பார்த்து அந்தக் காட்சியில் மூழ்கித் திளைக்கிறார். அவர் உள்ளத்திலே எல்லை யில்லாத இன்பம், ஆனந்த பரவசம் ஏற்படுகிறது. அன்பும் சுரக்கிறது. கண்ணன்—எங்கும் நிறைந்திருக்கும் பகவான் ஆழ்வாருக்குக் குழந்தையாகத் தோன்றுகிறார். எல்லாம் பக்தி மேலீட்டால் நிகழ்ந்த விளைவுதான். அவர் இதயத்திலே உலகத்திலுள்ள அன்புகளில் எல்லாம் சிறந்ததென்று போற்றப்படும் தாயன்பு ஏற்படுகிறது. ஆழ்வார் தன்னைக் கண்ணனுக்குத் தாயாக —பத்து மாதம் சுமந்து பெற்றவளைவிடச் சிறந்த தாயாக நினைத்துக் கொள்கிறார். தொட்டிலிலே கண்ணன் துயில் கொண்டிருப்பதாக நினைக்கிறார். ஒரு தாயின் பாசத்துடனும் வாத்சல்யத்துடனும் அவனைத் துயிலெழுப்ப அவன் காதுக்குள் மெல்லப் பள்ளியெழுச்சி பாடுகிறார்:

# குழந்தையும்



கதிரவன் குணதிசை சிகரம் வந்தடைந்தான்
கனையிருள் அகன்றது காலையம் பொழுதாய்
மதுவிரிந்தொழுகின மாமலரெல்லாம்
வானவ ராஜர்கள் வந்து வந்தீண்டி
எதிர்திசை நிறைந்தனர் இவரொடு புகுந்து
இருங்களிற்றீட்டமும் பிடியொடு முரசும்
அதிர்தலில் அலைகடல் போன்றுளதெங்கும்
அரங்கத்தம்மா பள்ளி எழுந்தருளாயே.

இவ்வாறு ஆரம்பித்து அற்புதமான பத்துப் பாடல்கள் பாடிப் பகவானைத் துயில் எழுப்புகிறார் ஆழ்வார். கண் விழித்த கண்ணன் ஆசையோடு அவன் முகம் பார்த்து நிற்கும் ஆழ்வாரை ஏறெடுத்தும் பார்க்கிறானில்லை. அந்தக் குறும்புக்காரனுக்குப் பசி தாகம் கூடத் தெரியவில்லை. அதற்குப் பதில் முந்திய நாள் இரவு படுக்கப் போவதின் முன்னால் செய்த சேஷ்டைகள்தான் ஞாபகத்துக்கு வருகின்றன. இதோ வந்து விட்டேனென்று சொல்லி விட்டுப் பின்புறத்துக்குக் குதித்து ஓடுகிறான். கண்ணன் வருவானென்று அவனை நீராட்ட வெந்நீரும் பன்னீரும் கலந்து வைத்துக் கொண்டு காத்திருக்கிறார் பெரியாழ்வார். வெகு நேரமாகியும் அவன் திரும்பாதது கண்டு பின்புறம் போய்ப் பார்த்தால் அங்கு கண்ணனைக் காணோம். வாசலுக்கு வந்து பார்த்தால் தெருப் புழுதியை யெல்லாம் அள்ளி மேலே பூசிக் கொண்டு குறு நடையுடன் குதித்து விளையாடுகிறான்.



இந்த அற்புதக் காட்சியைப் பார்க்கிறார் ஆழ்வார். அவன் புழுதியில் திளைத்து நிற்கும் கோலத்தையும் பார்க்கிறார். தலையிலிருந்து பாதம் வரையில் புழுதி படிந்திருக்கும் கண்ணனைக் கண்டதும் அவர் உள்ளம் நெகிழ்ந்து விடுகிறது. அவனைத் தாவிப் பிடிக்கலாம் என்று நினைத்து அவனிடம் செல்கிறார். அவன் புழுதியில் விளையாடுவதிலேயே கண்ணாக இருக்கிறான். அவன் அருகில் சென்று அன்பும் ஆதரவும் ததும்ப அவனை நீராட வருந்தி யழைக்கிறார் ஆழ்வார்.

எண்ணெய்க் குடத்தை உருட்டி
இளம் பிள்ளை கிள்ளி யெழுப்பி
கண்ணைப் புரட்டி விழித்து
கழகண்டு செய்யும் பிரானே
உண்ணக் கனிகள் தருவன்
ஒலிகடல் ஓத நீர் போல
வண்ணம் அழகிய நம்பி
மஞ்சனமாட நீ வாராய்.

இவ்வாறு நயமாகவும் அன்பாகவும் நீராட அழைக்கிறார் ஆழ்வார். ஆனால் கண்ணன் இலேசில் வருகிறவன்? சின்னஞ்சிறு கைகள் இரண்டையும் கொட்டி நகைத்து ஆர்ப்பரித்துக் கொண்டு ஓடுகிறான். கண்ணா! ஏ, கண்ணா! உன் பொன் மேனி புழுதியடைந்திருப்பதைப் பார்க்க உனக்கே வெட்கமாயில்லை? என் குழந்தை யென்றெண்ணி நான் பெருமை கொண்டாலும் கண்டார் பழிக்க மாட்டார்களா கண்ணா? அதோ திரும்பிப் பார்! நாளை உன் மனைவியாகப் போகும் நப்பின்னைப் பிராட்டி எள்ளி நகையாடுகிறாள். உனக்கு வெட்கமாக இல்லையா?

பூணித் தொழுவினில் புக்கு
புழுதியளைந்த பொன்மேனி
காணப்பெரிதும் உகப்பன்
ஆகிலும் கண்டார் பழிப்பர்
நாணத்தனையு மிலாதாய்
நப்பின்னை காணில் சிரிக்கும்
மாணிக்கமே என் மணியே
மஞ்சனமாட நீ வாராய்.

இவ்வாறு பத்துப் பாடல்களிலே பெரியாழ்வார் கண்ணனை இதமாகச் சொல்லி அழைத்து ஒருவாறு நீராட்டுகிறார். அதன் பின் அவன் கருங் குழலைச் சீவி முடித்துப் பின்னலிட்டுப் பூ முடிக்க உட்கார்ந்ததும், அவன் ஆடாமல் அசையாமல் உட்கார்ந்திருப்பதற்காகக் காகங்களை விளையாட்டுக் காட்டக் கூவியழைக்கிறார். மற்றும் பத்துப் பாட்டுக்களில்,

பின்னை மணாளனை பேரில் கிடந்தானை
முன்னை அமரர் முதல் தனி வித்தினை
என்னையும் எங்கள் குடிமுழுதும் ஆட்கொண்ட
மன்னனை வந்து குழல் வாராய் காக்காய்
மாதவன் தன் குழல் வாராய் காக்காய்

கண்ணனின் கருங்குழலைச் சீவி முடிக்கும் வரை அவனுக்கு வேடிக்கை காட்டக் காகங்களை அவர் கூவியழைக்கவும் ஒரு பெரிய காக்கைக் கூட்டமே எதிரில் வந்து நின்றது.

இதேபோல அமுதூட்டப் பத்துப்பாசுரங்கள். கண்ணனுடன் ஓடியாடித் திரிந்து விளையாடும் ஒவ்வொரு மாதிரியான விளையாட்டுகளுக்கும் தனித் தனியே பத்துப் பாட்டுகள் பாடியிருக்கிறார்.

இவ்விதமே ஒரு நாள் முடிகிறது. கதிரவன் மேற்றிசையில் அஸ்தமிக்க, கண்ணன் ஆய்ந்து ஓய்ந்து துயில் கொள்ள வருகிறான். நிலா முற்றத்தில் தொட்டிலிட்டு அதில் கண்ணனைப் படுக்க வைத்ததும், வான வீதியிலே ஜம் ஜம் மென்று மிதந்து வரும் வெண் மதியைப் பிடித்துத் தொட்டிலின் மேல் கட்டினால்தான் கண்ணுறங்குவேன் என்று பிடிவாதம் பிடித்து அழுகிறான்.

கண்ணனையும் அதிவேகமாகச் சுற்றும் ஒளி வட்டமான அம்புலியையும் மாறி மாறிப் பார்க்கிறார் ஆழ்வார். அன்றலர்ந்த செந்தாமரையைப் போன்றதும் களங்க மற்றதுமான என் கண்ணனின் திருமுகம் எங்கே? பாலை வனத்தில் காயும் வெய்யிலைப் போன்ற அம்புலியின் அழகு எங்கே? வான மண்டலத்தில் கம்பீரமாகப் பவனி வரும் அம்புலி எவ்வளவு தான் அழகு செய்து கொண்டாலும் என் கண்ணன் அழகுக்கு ஈடாவனோ? ஒருகாலும் மாட்டான்.

சுற்றும் ஒளிவட்டம் சூழ்ந்துசோதி
பரந்தெங்கும்
எத்தனை செய்யினும் என்மகன்முகம்
நேர்ஒவ்வாய்

என்று அம்புலியைப் பார்த்துக் கேலி செய்கிறார். ஆயினும் குறை அழகு படைத்த அந்த வட்டச் சந்திரனிடம்,

வித்தகன் வேங்கட வாணன்
உன்னை விளிக்கின்ற
கைத்தலம் நோவாமே
அம்புலி கடிதோடி வா

என்று தன் மகனைத் திருப்திப் படுத்த எங்கும் நில்லாமல் ஓட்டமாக ஓடி வா என்று அம்புலியை அழைக்கிறார் ஆழ்வார்.

கண்ணன் குறு நகையுடன் இலேசாகக் கண்ணை மூடுகிறான். தொட்டிலை ஆட்டிக் கொண்டே அவனுடைய திருமுகத்தின் மீது வைத்த விழியை எடுக்காமல் பார்த்துப் பரவச மடைந்து நிற்கும் பெரியாழ்வார், தமக்குக் கிடைத்த பேரின்பத்தை எண்ணி எண்ணி மனம் நெகிழ்ந்து மெய்மறந்து தாலாட்டுப் பாடுகிறார்.

மாணிக்கம் கட்டி வைரம் இடைகட்டி
ஆணிப் பொன்னால் செய்த வண்ணச் சிறு
தொட்டில்
பேணி உனக்குப் பிரமன் விடுதந்தான்
மாணிக்குறளனே தாலேலோ
வையம் அளந்தானே தாலேலோ

இவ்வாறு பண்ணுடன் ஆழ்வார் பாட அதில் லயித்த கண்ணன் தன்னை மறந்து கண்ணுறங்கி விடுகிறான்.

ஒரு குழந்தைக்குக் காலையிலிருந்து இரவு வரை செய்யும் ஒவ்வொரு சிஷ்ருஷையையும் அற்புதமான இலக்கிய மாலைகளாகத் தொகுத்து இறைவனுக்கு அர்ப்பணித்து முக்தி பெற்ற பெரியாழ்வார் ஒரு முக்கியமான உண்மையை நமக்கு அறிவுறுத்துகிறார். "குழந்தையும் கடவுளும் கொண்டாடுமிடத்தில்" என்று தமிழகத்தில் நிலவும் ஒரு பழமொழி உண்டு. விவரம் அறியாத குழந்தைகள் இறைவன் சன்னிதானத்தில் எப்பொழுது மிருப்பவை என்று மதித்துக் குழந்தைகளைக் கொண்டாடுவது எல்லா நாடுகளிலுமுள்ள ஒரு பொதுவான வழக்கம். குழந்தையைப் போற்றி, நிஷ்களங்கமான குழந்தை யுள்ளத்தில் லயித்து அதன் மூலம் கடவுளை வலியுறுத்துகின்றன பெரியாழ்வாரின் பாசுரங்கள்.

Edited, Printed and Published by R. Krishnamurthy at the "Kalki" Press
No. 20, Dr. Guruswamy Mudaliar Road, Kilpauk, Madras - 10

# விளம்பரதாரர்களே....

## நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையைப் பற்றிய உண்மையைத் தெரிந்து கொள்ளுங்கள்!

ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் என்ற ஸ்தாபனந்தான் சுருக்கமாக ஆங்கிலத்தில் ஏபிஸி என்று சொல்லப்படுகிறது. இந்த ஸ்தாபனத்தில் இந்தியா, பாகிஸ்தான், ஸிலோன் ஆகிய நாடுகளில் 13 பாஷைகளில் நடத்தப்படும் 125க்கு மேற்பட்ட பிரதான பத்திரிகைகள் அங்கம் வகிக்கின்றன. இந்தப் பத்திரிகைகளின் விற்பனை கணக்கு எந்த சமயத்திலும் ஏபிஸி ஸ்தாபனத்தின் ஆடிட்டர்களால் பரிசோதிக்கப்படுகிறது. அத்துடன் அந்தந்த பத்திரிகையின் நிகர விற்பனை எண்ணிக்கை சர்டிபிகேட்டை ஆறுமாதத்திற்கு ஒருமுறை ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினர்களுக்கு மட்டும் அந்தரங்கமாக அனுப்பப்படுகிறது. ஒரு விளம்பரதாரர் என்ற முறையில் நீங்கள் ஏபிஸி ஸ்தாபனத்தின் அங்கத்தினராக இருந்தால் உங்களுக்கும் அந்த சர்டிபிகேட் அனுப்பப்படும். அப்போது உங்கள் விளம்பரத்திற்கு நீங்கள் உபயோகிக்கும் பத்திரிகையின் உண்மை நிகர விற்பனையை நீங்கள் அறிந்து கொள்ளலாம்.

உங்கள் விளம்பரத்திற்காக நீங்கள் செலவழிக்கும் ஒவ்வொரு ரூபாய்க்கும் எவ்வளவு வாசகர்களைப் பெறுகிறீர்கள் என்ற உண்மையும் உங்களுக்குத் தெரியவரும்.

## ஆடிட் பீரோ ஆப் சர்குலேஷன்ஸ் லி-ட்.

பாரத் ஹவுஸ், அபோலோ தெரு :: கோட்டை, பம்பாய்

கீழ்க்கண்ட விளம்பரதாரர்களும் விளம்பர ஏஜண்டுகளும் ஏற்கனவே ABCயின் அங்கத்தினர்களாக இருக்கிறார்கள்.

**விளம்பரதாரர்கள்—**

அல்கேடு போட்டோகிராபிக்ஸ் லி-ட்., ஆயுர்வேதாஸ்ரமம் பர்மஸி லி-ட்., இ. எம். ஆல்காக் அண்டு மொஹாட்டா லி-ட்., அட்லாண்டிஸ் (ஈஸ்ட்) லி-ட்., பால்மர் லாரி அண்டு கம்பெனி லி-ட்., பம்பாய் மியூச்சுவல் லைப் அஷ்யூரன்ஸ் சொஸைட்டி லி-ட்., பூட்ஸ் ப்யூர் ட்ரக் கோ. (இந்தியா) லி-ட்., பர்மாஷெல் ஆயில் ஸ்டோரேஜ் அண்டு டிஸ்ட்ரிபியூட்டிங் கோ. ஆப் இந்தியா லி-ட்., கால்டெக்ஸ் (இந்தியா) லி-ட்., ஸெண்ட்ரல் டீ போர்டு, கார்ன் ப்ராடெக்ட்ஸ் கோ. (இந்தியா) லி-ட்., டன்லப் ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., கிளாக்ஸோ லாபரட்டரீஸ் (இந்தியா) லி-ட்., கோத்ரெஜ் அண்டு பாய்ஸ் மானுபாக்சரிங் கோ., லி-ட்., இம்பீரியல் கெமிகல் இண்டஸ்ட்ரீஸ் (இந்தியா) லி-ட்., இம்பீரியல் டுபாகோ கோ. ஆப் இந்தியா லி-ட்., இந்தியா டயர் அண்டு ரப்பர் கோ. (இந்தியா) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (ஸிலோன்) லி-ட்., லிவர் பிரதர்ஸ் (இந்தியா) லி-ட்., லிப்டன் லி-ட்., ஜே. எல். மாரிஸன் ஸன் அண்டு ஜோன்ஸ் (இந்தியா) லி-ட்., ஸி & இ. மார்ட்டன் (இந்தியா) லி-ட்., மூல்லர் & பிப்ஸ் (இந்தியா) லி-ட்., நாஷனல் கார்பன் கோ. (இந்தியா) லி-ட்., பார்ஸி ப்ராடெக்ட்ஸ் மானுபாக்சரிங் கோ. லி-ட்., பஞ்சாபி சந்து ஹல்வாய் கராச்சிவாலா, ஸேல்ஸ் ப்ராடெக்ட்ஸ் ஓவர்ஸீஸ் லி-ட்., ஷாலிமார் பெயிண்ட், கலர் அண்டு வார்னிஷ் கம்பெனி லி-ட்., டாடா ஆயில் மில்ஸ் கம்பெனி லி-ட்., வால்கார்ட் பிரதர்ஸ்.

**விளம்பர ஏஜெண்டுகள்—**

அட்வர்டைஸிங் அண்டு ஸேல்ஸ் பிரமோஷன் கோ., ஈஸ்டர்ன்ஸ், எபிஷியண்ட் பப்ளிஸிட்டிஸ் லி-ட்., எவரெஸ்ட் அட்வர்டைஸிங் லி-ட்., கிராண்ட் அட்வர்டைஸிங் இன்க்., க்ரீன்ஸ் அட்வர்டைஸிங் சர்வீஸ் ஏஜண்ட்ஸ், இந்தியா அட்வர்டைஸிங் சர்வீஸ், டி. ஜே. கீமர் அண்டு கோ. லி-ட்., லின்டாஸ் லி-ட்., பி. எஸ். மணி அண்டு கம்பெனி, நேஷனல் அட்வர்டைஸிங் சர்வீஸ் லி-ட்., பிரஸ் ஸிண்டிகேட் லி-ட்., ரஞ்சித் ஸேல்ஸ் அண்டு பப்ளிஸிட்டி லி-ட்., ஷில்பி லி-ட்., ஸிஸ்டாஸ் லி-ட்., எப். டி. ஸ்டூவர்ட் லி-ட்., எல். ஏ. ஸ்ட்ரோனக் அண்டு கோ. (இந்தியா) லி-ட்., ஜே. வால்டர் தாம்ஸன் கம்பெனி (ஈஸ்டர்ன்) லி-ட்.

இதைப் பிரசுரித்தவர்கள் :

**ABC ஸ்தாபனத்தின் அங்கத்தினரான 'கல்கி' பத்திரிகை சொந்தக்காரர்கள்**

REGD. No. M. 4392
*Registered as a newspaper in Ceylon*

"உபயோகித்துப் பாருங்கள்...
...நீங்களும் லக்ஸ் டாய்லட் சோப்
உபயோகித்து அதிக அழகைப்
பெறலாம்."
என்று கூறுகிறார்
எஸ். மேனகா



எஸ். மேனகா கூறுவதாவது: "ஒரு அற்புதமான அழகு பராமரிப்பு இது. லக்ஸ் டாய்லட் சோப்பின் மென்மையான நுரையை உங்கள் சருமத்தின்மேல் நன்றாகத் தேய்த்து பிறகு கழுவவும். வழக்கமாக உபயோகித்தால் லக்ஸ் டாய்லட் சோப் உங்கள் சருமத்திற்கு மலர்ச்சியும் அழகும் தரும்.

# லக்ஸ் டாய்லட் சோப்




ஸினிமா நட்சத்திரங்களின்
அழகு தரும் சோப்

LTS. 389-X30 TM